Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර්

ஏப். 08 -14, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 403

## இயக்கங்களின் வரித்தொல்லை வாழத் தவிக்கும் வன்னி மக்கள்



# முரசம்

## புதிய சிந்தனையோடு புத்தாண்டு மலரட்டும்!

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

அமைதியும் சுபீட்சமும் குறித்த
எண்ணற்ற எதிர்பார்ப்புகளோடு
மீண்டும் ஒரு சித்திரைப் புத்தாண்டை
வரவேற்க எமது மக்கள்
தயாராகிறார்கள்.

தமிழ் மக்கள் அனுபவிக்கும்
துன்பங்களுக்கான முற்றுப்புள்ளியை
இந்தப் புத்தாண்டேனும்
இட்டுச் செல்ல வேண்டும் என்பதே
எம்மனைவரினதும் ஏகோபித்த
எதிர்பார்ப்பாக உள்ளது.

இன்றைய நாட்களில் தோன்றியிருக்கும்
சமாதானக்கீற்று-வெறுமனே
கீற்றாகவே மறைந்து விடக்கூடாது
என்று ஒவ்வொருவர் உள்ளமும்
உரத்துத் துடிப்பதை சம்பந்தப்பட்ட
சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த இரு தசாப்த காலமாக
எமது மக்கள் அனுபவித்த
துயரங்கள்
இலேசானவையல்ல.

அவர்கள் சந்தித்த இழப்புக்கள்
மெய்யாகவே ஈடு செய்ய
முடியாதவை.

ஆதலால் சமாதானத்தின்
எதிரிகளிடம் கேள்வி
கேட்கும் உரிமை
எமது மக்களுக்கு இருக்கிறது.

பரஸ்பரம் வாழ்த்துக் கூறுவதோடு
மாத்திரம் சுருங்கிக் கொள்ளும்
புத்தாண்டிலிருந்து இம்முறை
நாம் மாறிநிற்போம்.
வாழ்த்துக்கள் மட்டுமே எம்மை
வாழவைத்து விடப் போவதில்லை.

ஒவ்வொரு புத்தாண்டையும்
எமது மக்கள், நாளை குறித்த
நம்பிக்கையோடுதான் கழித்தார்கள்
ஆனால் மக்கள் இனறைய
அஸ்தமனத்தின் பின் உதயமான
எந்தப் பொழுதும் அவர்கள் எதிர்பார்த்த
'நாளை'யாக விடியவில்லை.

அதற்கான காரணத்தை நாம்
இந்தப் புத்தாண்டிலேனும்
கண்டறிய வேண்டும்.

எமது துன்பங்களின் மூலவேர்
எங்கிருந்து ஆரம்பித்தது என்பதை
விழிப்போடு சிந்திக்க வேண்டும்.

பார்வையில்லாத ஒருவனுக்கு
கண்ணாயிரம் என்று பெயர்
வைப்பதைப்போல, யதார்த்தம் மீறிய
நம்பிக்கையூட்டல்களும்
தவறான வழிகாட்டல்களுமே
எமது இன்னல்களின் ஊற்றுக்கண்
என்பதை நேர்மையான முறையில்
புத்திக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளவும்
போலிமைகளைப் புறக்கணிக்கவும்
எம்மை பழக்கப்படுத்த வேண்டும்.

ஏற்கனவே அபிவிருத்தியில் நாம்
அரை நூற்றாண்டு பின்னால்
நிற்கிறோம், மென்மேலும் நாமே
எம்மை ஏமாற்றிக் கொள்வோம்
என்றால் விடுதலைக்கான
எமது தியாகங்களும், சுயகௌரவமும்
அர்த்தமற்றதாக்கப்பட்டுவிடும்.

எதனை அடைவதற்காக நாம்
இத்தனை இழப்புக்களை சந்தித்தோமோ..
அந்த எல்லையைச்
சென்றடைவதற்கான சரியான பாதையில்
எம்முடைய பயணம்
அமைந்திருக்கிறதா என்பதை
மீள் பரிசீலனை செய்ய வேண்டிய
காலத்தின் கட்டாயத்தில்
இன்று நாமிருக்கிறோம்.

சிந்தனையை தூசுதட்டத்
தயார் என்றால் விடிவு
வெகு தூரத்தில் இல்லை
என்று உறுதியாகக்
கூறமுடியும்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை* ***என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## உருவ வழிபாடு

உருவ வழிபாடு எனும்போது இங்கு விக்கிரக வழிபாடும் முதன்மை பெறுகிறது. விக்கிரகம் என்பதன் பொருள் இறைவனது திருவருள் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்ற உயர்ந்த இடம் என்பதாகும். பக்தர்கள் சிலை உருவத்தை வழிபடுவதில்லை. உருவத்தில் இறைவனையே பூஜிக்கின்றனர். கற்சிலை என்ற எண்ணத்தை ஒழித்து இறைவன் என்றே வழிபடுகின்றனர். இவ்விதம் செய்யும் உருவவழிபாட்டால் இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற கருத்து உண்டாகும்.

இக்கருத்து பெரும்பாலும் ஆஸ்திக மக்களிடையே நம்பப்படுகிறது. இறைவன் எங்கும் இருக்கிறார் என்று வார்த்தையளவில் கூறிக்கொண்டு எந்த ஓர் இடத்திலும் இறைவனைக்கண்டு வழிபடாது இருப்பவர்கள் இறைவனைக் குறித்து நெருங்கவில்லை என்றே பொருள் கொள்ளலாம். உருவத்தில் இறைவனை வழிபடுதல் என்பது உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அமைகிறதே தவிர தர்க்கத்தின் அடிப்படையில் அல்ல. எமக்கு எங்கும் இறைவனைக் காணும் தன்மை வளர வேண்டும் என்பதற்காகவும் இத்தகைய விழிப்புணர்வு வரவேண்டும் என்பதற்காகவும் தெய்வ உருவங்களை வழிபடுதல் அவசியமாகிறது.

நமது உள்மனதில் உலகாயதமான பொருட்களின் உணர்வுகள், ஆசைகளே ஓங்கி நிற்கின்றன. இத்தகைய பொருட்களில் 'என்னுடையது' என்ற ஈடுபாடும் இருக்கிறது. இவற்றை விலக்கிக் கொள்ள இறைவனைப் பூஜை செய்வது அவசியமாகிறது. இதனால் எமக்கு இறையுணர்வு விழிப்படைந்து வளர்வதோடு உலகாயத வஸ்துக்களில் 'நமது' என்ற மமதை நீங்குகிறது.

தொகுப்பு: சி.நிதாஜினி-பெரியகல்லாறு-02.



## தந்தைக்கு மதிப்பளிப்போம்

நாம் சிறுவயதாக இருக்கும்பொழுது, பாடுபட்டு பல சிரமங்களை மேற்கொண்டு அன்புடனும் பரிவுடனும் வளர்த்து தேவையான உணவு உடைகளையெல்லாம் தந்து பள்ளியில் படிக்கவைத்து நம்மை ஆளாக்கியதையெல்லாம் நம்மில் பலர் மறந்து தன்னுடைய சொந்த தந்தையின் விருப்பத்திற்கு மாற்றமாக நடந்து-கொள்ளுவதை நாம் காண்கிறோம். இவ்வாறு தந்தைமார்களின் மனதை நோவினை செய்யும் தனயன்மார்களே! சற்று உங்களுடைய சிறுபிராயத்தில் உங்கள் தந்தைமார்கள் உங்களுக்காக எடுத்துக் கொண்ட சிரமங்களையும் பின்வரும் நபிமொழிகளையும் எண்ணிப் பாருங்கள் நீங்கள். நிச்சயம் திருந்திவிடுவீர்கள்.

"அல்லாஹ்வின் பொருத்தம் தந்தையின் பொருத்தத்திலிருக்கிறது; அல்லாஹ்வின் வெறுப்பு தந்தையின் வெறுப்பிலிருக்கிறது."

"மனிதர்கள் செய்யும் பாவங்களுக்கு இவ்வுலகத்தில் தண்டிப்பதை சிலருக்கு அல்லாஹ் பிற்படுத்தி, அவர்களை மறுமையில் தண்டிப்பான். ஆனால் பெற்றோர்களின் மனதை நோகடிப்பவர்களை இவ்வுலகிலேயும் தண்டித்து மறுமையிலும் தண்டிப்பான்."

"உனது தந்தையின் அன்பை நீ முறித்துக்கொள்ளாதே! அவ்வாறு முறித்துக் கொண்டால் அல்லாஹ் உனது ஒளியை போக்கிவிடுவான்" (ஹதீஸ்)

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## நன்மை செய்வதின் பலன்

நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

(கலாத்தியர் 6:9)


இவ்வுலக வாழ்க்கையிலே நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்பவர்களாக வாழவேண்டுமென்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அநேக சந்தர்ப்பங்களில் தனது கிரியைகள் மூலமாக வலியுறுத்துகிறார்.

தம்மைத் தேடி வந்த ஏறக்குறைய ஐயாயிரம் ஜனங்களுக்கு தேவராஜ்ஜியத்தை குறித்து போதகம் செய்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து பசியை போக்கி நன்மை செய்தார். (லூக்கா 9:17) தனக்கு இருந்த ஒரேயொரு மகனை இழந்து, அவனை அடக்கம் பண்ணும்படி மயானத்தை நோக்கி தாங்கமுடியாத வேதனையோடு சென்ற ஒரு கைம்பெண்ணின் உள்ளத்தின் வேதனையை அறிந்து மரித்த மகனை உயிர்த்தெழுப்பி அப் பெண்ணின் வேதனையை நீக்கி நன்மை செய்தார். (லூக்கா 7:15)

இப்படியாக அனேக காரியங்களை நாம் வேதத்திலே காணலாம். ஆதலால் நாமும் நம்மால் இயன்ற நன்மைகளை மற்றவர்களுக்கு செய்து தேவ ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

சகோ.டேவிட் எஸ்.சந்திரதாஸ்-நாவலப்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.403



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 14.04.2001

கவிதைப் போட்டி இல.403
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.400

### பரிசுக்குரிய கவிதை

### பாக்கியம்

**மரம் செடி கொடிகள் என**
**பிறப்பது உலகில் புண்ணியம்**
**கேடு கெட்ட மனிதா உனக்கு**
**இருக்குதா சொல் கண்ணியம்?**
**வெட்டும் மரம் ஒவ்வொன்றுக்கும்**
**கன்று வைத்தல் முக்கியம்**
**இயற்கை வளம் இல்லை என்றால்**
**நமக்கு ஏது பாக்கியம்!**

பேபி அந்தோனிஅம்மா -சீனக்குடா.

## இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### அமைதி பூங்கா

பூமியின் கருப்பையில்
இயற்கைகள் முளைத்தன.
இங்கே!
புதைகுழிகள்
சிதைவுடல்கள்-அற்ற
இது!
நிம்மதியை வருடும்
அமைதி பூங்காவோ!

க.பரமேஸ்வரி-தலவாக்கலை.

### தப்பி வளருமா?

வன்னி வனத்தினிலே!
யுத்தகள முனையில்,
அழிக்கப்பட்ட
மரங்களின் நடுவில்
இளசொன்று வளர்கிறது.
இதையும் முளையிலே
கிள்ளி எறிவார்களா!
தப்பித்தான் வளருமா?

முத்துலிங்கம் கதீஸ்-சித்தாண்டி-03.



### பாதுகாப்பல்ல

என்னைச்சூற்றி பாரிய பாதுகாப்பு
உள்ளதென்றெண்ணாதே!
அப்பெரிய மரம் எப்பெழுதும்
உன் வளர்ச்சிக்குத் தடையே!

ஆர்.யோகசுதர்சினி-கொழும்பு-06.

### தூரம் இல்லை

மரத்தோடு செடி கொடியாய்
வாழ நாம் தேவையில்லை
உரத்திலே பனை மரமாய்
உயர்வோம் நாம் பொய்யுமில்லை
பலத்திலோ தும்பிக்கை போன்ற
தன்னம்பிக்கைக்கோ பஞ்சமில்லை-பூச்
சரமதோ எங்கள் தோளைத்
தாலாட்டும் நாள் தூரமில்லை.

சீனக்குடா-கே.தங்கராஜா.

### மலர்ச்சி

பட்ட மரம் துளிர்
விட்ட மாதிரி
செத்த சமாதானம்
உயிர் பெற்றிடுமோ?

லிங்கராஜா கிரிசாந்தி-மட்டக்களப்பு.

### காரணம் குழப்பம்

குழப்பம் வந்ததால்
வீடுகள் மடிந்தன.
வீடுகள் மடிந்ததால்
மனிதனுக்கோ வருத்தம்.
வருத்தம் வந்ததால்
இறப்பு வந்தது.
இறந்தவரை தாட்டதனால்
வந்ததோ உரம்.
உரத்தில் வந்ததே
இந்த மரங்கள்.

வ.கலா-மட்டக்களப்பு.

### தனி மரமோ

காலனின் கோரப்பசியில்
மண் மூடும் புதைகுழியில்
கட்டவிழ்ந்த யுத்தமதில்
துளிர்விடும் தனிமரமோ?

சு.கிஷோக்குமார் -அக்கரைப்பற்று.

### சமாதான ஒளி

ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்
இறைமையின் இறுமாப்பால் இழிவாய்
இனத்தை மரம் செடி கொடி என்போரின்
கறைபடி போர்க் காரிருள் களையும்
கருவாம் சமாதான ஒளிக் கதிரா இது...?

ஈலினை பாலா-சௌந்தரி-புன்னாலைக்கட்டுவன்.

### இது நடக்குமா?

ஓயும் போரும்
சமாதான வாழ்வும்
எமக்குக் கிட்டுமெனில்
பட்ட மரத்திலும் கூட
பால் வடியலாம்!
பாறைகளிலும் கூட
சிறு செடி துளிர் விடலாம்!

வாசுகி ஆனந்தன்-மட்டக்களப்பு.

### புனிதமான நாள்

எனக்கும் கூட விருப்பந்தான்
சமாதானக் காற்றை சுவாசிக்க... எங்கோ,
அழித்திடுவார்களோ என அஞ்சி
இருக்கிறேன் இடம் பெயர்ந்து
குப்பை மேட்டில்.
அப்புனிதமான நாளை எதிர்பார்த்து
வாடா மலராய்!

என்.ஜெ.விஜயகுமார்-மூதூர்.

### நிம்மதி

புதையுண்டபோதிலும்-நிம்மதியாய்
இனி இருப்பாய் என்றெண்ண,
இந்த யுத்த பூமியில்-மீண்டும் சிறு
தாவரமாய் நீ வந்ததேனோ?

ஆர்.லட்சுமி-வெள்ளவத்தை.

## முரசுக்கு முடங்கல்!

*முரசுக்கு*
*நானெழுதும் முடங்கல்!*
*அரசியல் கட்டுரைகள்*
*சொல்லி வேலையில்லை*
*அத்தனையும் அசத்தல்!*
*என்னவென்றியம்ப*
*மன்னாதி மன்னன்*
*மகிழ்ச்சியூட்டுகிறான்!*
*மணியாரம் சூட்டிவரும்*
*இனிய நயம் இலக்கியம்!*
*கனிவான கவிவரிகள்*
*கருத்தை ஈர்க்கும்*
*துணிவான படைப்புக்கள்*
*சுகந்தரும் தேன்கிண்ணம்!*
*'மேமாதம்' முற்றிற்று. ஆனாலும்*
*மீண்டுமொரு அசத்தல் தொடர்*
*'நிழல் கொலைகள்' செல்கிறது.*
*விறுவிறுப்பாய்*
*தினமுரசு சொன்னால்*
*செய்யும் பொய்க்காது!*
*'மங்கள விலாஸ்'*
*இங்கிதமாகச் சென்றது.*
*மர்மம் நிறைந்த கதை!*
*வாசகர் மகிழ்ச்சிக்கு குறையில்லை!*
*நிறைவான முரசே உனைவாழ்த்தி*
*மடலை முடிக்கும் வாசகன்.*

கவிக்குயிலன்-சேனையூர்-06.

## பாராட்டுக்கள்

*தித்திக்கும் என் இனிய*
*தினமுரசே!*

*நீ சுமந்துவரும் பகுதிகள் யாவும் பயனுள்ளதும் பாராட்டுக்குரியதுமாகும். 399வது இதழில் வெளியான அனைத்தும் சுவையான போதும், அதிகம் குழப்படி செய்யும் ஒரு குழந்தையை எப்படி செயற்படுத்த வேண்டும் என்பதை, பல பெற்றோர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது.*

*அத்துடன் 'வாரம் ஒரு வார்த்தை' பகுதியும், 'உலர்ந்த நினைவுகள்' எனும் தலைப்பிலான கவுண்டமணியின் வாழ்க்கை வரலாறும் வாழ்க்கையின் ஏன்? எமது அன்றாட வாழ்வில் எப்படி வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே உன் இதழ் எமக்கு பல அறிவுரைகளை பெறக்கூடிய முறையில் இணைந்திருப்பதை எப்படி பாராட்டாமல் இருக்க முடியும்?*

*தினமுரசே! எம் இனிய முரசே! உனக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்! பாராட்டுக்கள்!, பாராட்டுக்கள்!*

ஏ.சுகந்தி-மன்னார்.

## வாசக[ர்] சாலை




*தித்திக்கும் செய்திகளை வாரா வாரம் சுமந்து வரும் முரசே.. உன்னில் உள்ள அனைத்து அம்சங்களும் அருமை. உன்னில் இடம் பெறுகின்ற 'கவிதைப் போட்டி', 'அரசியல் கட்டுரைகள்', 'அரசியல் தொடர்கள்', 'விளையாட்டுச் செய்திகள்', 'சிந்தியா பதில்கள்', 'லேடிஸ் ஸ்பெஷல்', 'பாப்பா முரசு' மற்றும் 'இலக்கிய நயம்' போன்றவை எம் சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது. உன் பணி தொடர வாழ்த்துக்கள்..!*

சி.மொஹமட் ஸகீர்-கற்பிட்டி.

*என் இதயத்திற்கு இதம் தரும் முரசே,*

*உன் சூடுபடாமலோ உன்னை சுவாசிக்காமலோ என்னால் சுவாரசியமாக முடியவில்லை. உன்னில் உள்ள அனைத்தும் இதம். குறிப்பாக முழுடில்யனின் 'இலக்கிய நயம்', 'தேன்கிண்ணம்', 'கவிதைப்போட்டி' என்பன சுவையிலும் சுவாரசியம். உறங்கும் தமிழனை தட்டி எழுப்புவது நீ மட்டுமே. முரசு என்ற நாமம் இத்தரணியெங்கும் காற்றோடு பரவட்டுமாக.*

ஆர்.சுஜீவன்-நாவலப்பிட்டி.

*என் பிரியமான முரசே!*

*நான் உன்னை முதலில் உன் முக அழகைப் பார்த்ததும் உன் மீது எனக்கொரு ஈர்ப்பு. நான் உன்னை கையில் ஏந்தி முதல் பக்கம் தொடக்கம் கடைசிப்பக்கம் வரை ஒவ்வொரு அங்கமாக பார்க்கையில் என்ன ஆச்சரியம். உன் அனைத்துப் பக்கங்களும் முத்தான முத்துக்கள். அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு வாரமும் வாரங்களாக நான் உன்னை உயிருக்கு உயிராய்' நேசம் கொண்டு மனப்பூர்வமாக காதலித்து வருகின்றேன். உன்னை எதிர்பார்ப்பேன் வியாழன் மாலை, அன்று நீ என்னைச் சந்திக்கவில்லையாயின், அன்றிரவு என் தூக்கம் போச்சு. வெள்ளி காலை உன்னைக் கண்டவுடன் நிம்மதியான பெருமூச்சு. நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எனக்குத் தங்கம். உன்னைப் பிரிய மனம் இன்றித் துடிக்கும், தினம் உன் பிரியமானவன்.*

அலி மூஸா-நிந்தவூர்-03.

### நடுநிலை மாறா முரசு

புலிகள் மீதான பிரிட்டிஷ் அரசின் தடை நடவடிக்கை கூடுதலாக தடைசெய்யப் படக்கூடிய எதிர்வுகூறை முன்பே தெரிவித்த தானது எதிர்வு கூறும் விடயத்தில் முரசுக்கு கிடைத்த மீண்டும் ஒரு வெற்றி எனலாம். 'காற்றுக் கென்ன வேலி', திரைப்படத்தை தணிக்கைவாரியம் தடையில் வைத்திருப்பது பற்றி முரசின் விமர்சனம் பிரமாதம். பக்க சார்பில்லாமல் இருசாராரிலும் உள்ள குறைகளைக் கோடிட்டு காட்டியிருப்பது முரசின் நடுநிலையை தெளிவாக எடுத்துகாட்டியுள்ளது.

பி.ரெங்கநாதன் அசோக்குமார்-டிக்கோயா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்-
உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# புலிகளின் பிரதேசத்திற்கு அனுப்பப்படும்
# பொருட்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்

இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது குறித்து கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் நாட்டிலுள்ள கேந்திர மையங்களில் மோதல் தவிர்ப்பு மற்றும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை அனுப்பி வைப்பதில்-இன்றுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது போன்ற நடவடிக்கைகள் தொடர்பாகவே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தமிழ்-சிங்களப் புத்தாண்டை அண்டியதாக அரச தரப்பும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கான நிர்ப்பந்தத்திற்கு உடன் படலாமெனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆயினும் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது பற்றி தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்குமிடையே புதிதாக மோதல்கள் வெடிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய ஒரு மோதலுக்கான ஆயத்தங்களை இரு தரப்பினரும் மும்முரமாக மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளது முகாம்களிலிருந்து தூர விலகியிருக்குமாறு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலமாக இராணுவத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ முக்கியஸ்தர்களிலொருவரான கருணா கிழக்கிலுள்ள புலிகளின் படை முகாம் களுக்கு விஜயம் செய்து பலதரப்பட்ட ஆயத்தங்களில் ஈடுபட்டு வருவதாகவும், அவரைப் போல் வேறு பல புலிப்படைத் தளபதிகளும் ஆயத்தங்கள் செய்வதாகவும் கூறப்படுகிறது.

புலிப்படைத் தலைவர் கருணாவும் ஏனைய புலிப்படை முக்கியஸ்தர்களும் கிழக்கில் நடமாடுவது தொடர்பாக முரசு ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தது. இத்தகவலை இராணுவப் புலனாய்வுத் துறையினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

**புலிகளின் போர் நிறுத்தம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வருடம் டிசம்பர் 24ம் திகதி முதல் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தனர். தொடர்ந்து மேலும் மூன்று மாதங்கள் அந்த ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த அறிவித்தலைத் விடுத்து வருகின்றனர். ஆனால் இலங்கை அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவே இல்லை.

இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்காக இரு தரப்பினருக்கிடையில் தூதுவராக இருந்து வரும் நோர்வே நாட்டைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம் கனடாவிலுள்ள சர்வதேச வானொலி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், "விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வருவது, சமாதானத்தில் அவ்வியக்கத்துக்குள்ள ஆர்வத்தையே காட்டுகிறது" என்று தெரிவித்திருக்கிறார் சொல்ஹெய்ம் அவர்களின் இக் கூற்றின் படி பார்த்தால், இலங்கை அரசாங்கம் சமாதானத்தை உண்மையாக விரும்பாமல் காலத்தைக் கடத்துகிறது என்றே நம்பத் தோன்றுகிறது, என்று இங்குள்ள ஐரோப்பிய தூதரக வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது. ■

## மன்னாரில் 2 பெண்கள்மீது 33 பேர் பாலியல் சித்திரவதை
## படையினரின் காட்டுமிராண்டித்தனத்தால் மக்கள் அதிர்ச்சி

மன்னார் உப்புக்குளத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினராலும், கடற்படையினராலும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட இரு பெண்களும் எதிர்வரும் 9 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட பெண்களில் ஒருவர் கர்ப்பிணி என்றும் மற்றையவர் பலரால் மிக மோசமான பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும், ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் 33 படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இரண்டு தமிழ் பெண்களையும் விசாரணை செய்வதற்கும், சம்பவம் நடைபெற்ற இடத்தை அவர்கள் மூலமாக அடையாளம் கண்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் மன்னார் மாவட்ட நீதிவான் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

சம்பவத்தின் பின்னர் அனுராதபுர சிறையில் இருந்த இவர்கள் இருவரையும் போதிய பாதுகாப்புடன் மன்னாருக்கு அழைத்து வருமாறு நீதிமன்றத்தினால் பொலிஸார் பணிக்கப்பட்டிருந்தனர்.

மன்னார் பொலிஸின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடந்த வாரம் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இந்த பெண்கள் இருவரும் மோசமான பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டனர். கடற்படையினரும் அடங்கலாக 33 பேர் இவர்கள் இருவரையும் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

படையினரால் அண்மைக் காலங்களில் யுத்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு சம்பவங்களில் மிக அதிகமானவர்கள் சம்பந்தப்பட்டுள்ள காட்டுமிராண்டித்தனமான ஒரு நிகழ்வாக இது உள்ளதென்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ■

## வாழ்த்துக்கள்!

சித்திரைப் புதுவருடப்பிறப்பைக் கொண்டாடும் அனைவருக்கும் முரசு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

சித்திரைப் புது வருடம், ஈஸ்டர் பண்டிகை ஆகியவற்றுக்கான விடுமுறை என்பதனால் எமது 404 முரசு ஏப்.12ம் திகதி வெளிவர மாட்டாது. 19/04/01ல் உங்கள் கைகளில் தவழும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம். நிர்வாகம்

## யாழ் மாநகர சபையை ஆதரித்தும், எதிர்த்தும் ஏட்டிக்குப் போட்டியாக ஊர்வலங்கள்

யாழ். மாநகர சபையினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட குடும்ப நல சேவையாளர்கள் தமது வேலைநீக்கத்தை ஆட்சேபித்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இந்த ஊர்வலத்தின்போது யாழ்ப்பாண மேயருக்கு எதிரான சுலோகங்கள் எடுத்துச் செல்லப்பட்டதுடன் மாநகர சபையின் செயற்பாடு தொடர்பாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது. நாச்சிமார் கோவிலடி சந்தியில் ஆரம்பமான இந்த ஊர்வலம் ஈ.பி.டி.பி. அலுவலகம், கச்சேரி, நீதிமன்றம் என்பவற்றுக்குச் சென்றது. இதில் பொது மக்களும் பங்கேற்றனர். இதேவேளை வேலையிழந்த குடும்பநல ஊழியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. இதன் போது மாநகர சபைக்கு ஆதரவான கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் மேயரை ஆதரிக்கும் சுலோகங்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

## பொதுமக்கள் புகார்

திருகோணமலை பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் அலுவலகம் நாளுக்கு நாள் ஊழலும் முறைகேடுகளும் நிறைந்த ஓர் இடமாக மாறிவருவதையிட்டு பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு காரியத்தை நிறைவேற்ற இந்த அலுவலகத்துக்குச் சென்றால் சிற்றூழியர்கள் முதல் பொறுப்பு வாய்ந்தவர்கள் வரை கையூட்டுக் கேட்பதாகவும் கொடுக்க மறுக்குமிடத்து தேவையற்ற இழுத்தடிப்புக்கள் நடைபெறுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அவர்கள் த்மது கைவரிசையை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

## மருத்துவனையின் குறைப்பாடுகள் குறித்து
## அதிரடிப்படையினர் முறைப்பாடு

கிழக்கிலங்கையின் அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில், களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்து விசேட அதிரடிப்படையினர் சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

வைத்தியசாலைகளில் நிலவும் அசமந்தப் போக்குகளினாலும், சீர்கேட்டி னாலும் நோய்வாய்ப்படும் பொதுமக்கள் அனுபவிக்கும் சிரமங்களை விசேட அதிரடிப் படையினர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் கிழக்கு மாகாண அரச வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்து குறிப்பிட்ட சீர்கேடுகளைக் கண்டறிந்துள்ளார்.

கல்முனை பொது வைத்தியசாலையில் நிலவும் மிகமோசமான குறைபாடுகள் குறித்து பல பொது அமைப்புக்களும் சுகாதார அமைச்சுக்கு முறையிட்டுள்ளன. அவ்வைத்தியசாலை இத்தகைய பின்னடைவை எதிர் நோக்கியிருப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணமென்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அடிப்படை மருத்துவ வசதிகள், உட்பட 5 வைத்தியர்களுக்கும் 21 தாதிமாருக்கும், 53 சிற்றூழியர்களுக்கும் அங்கு வெற்றிடம் நிலவுகிறது.

அரச வைத்தியசாலைகளில் கடமை புரியும் வைத்தியர்கள் தனியார் வைத்திய சாலைகளை நிறுவி பெருமளவு பணம் பெற்றுச் சிகிச்சையளித்து வருவது குறிப்பிடத்தக்கது. ●

## திருச்செந்தூரன் காலமானார்

மலையக தோட்டத் தொழிலாளர்களின் நலனில் பெரும் அக்கறையுடன் செயற்பட்டு மலையக இளைஞர்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த திரு.திருச்செந்தூரன் அண்மையில் தமிழ் நாட்டில் காலமானார்.

ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய இவர் அமரர் இரா.சிவலிங்கத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மலையக மாணவர்களின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு நீக்கம்

தமிழ்-சிங்களப் புத்தாண்டான சித்திரைக் கொண்டாட்டங்களை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கும் மற்றும் கோயில்களுக்குச் செல்வதற்கு வசதியாகவே ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டிருப்பதாகப் படையினர் கூறுகின்றனர்.

வழமையாக இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ■

## தரவையில் சவப்பெட்டிகள் குவிப்பு;
## தாக்குதலை எதிர்பார்த்து படையினர் உஷார்

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிரதான தளங்களில் ஒன்றான தரவையில் சவப்பெட்டிகள் குவிக்கப்படுவதாக கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வரும் பொது மக்களை மேற்கோள் காட்டி படையினர் அறிவித்துள்ளனர்.

புலிகள் இயக்க சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இந்தப்பகுதிக்கு வந்துள்ளதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து கிழக்கில் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகி வருவதாக பொது மக்களை எச்சரித்து படையினரால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான கருணா உட்பட பலர் கிழக்குக்கு அனுப்பப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை படையினர் உறுதி செய்துள்ளனர்.

இதே வேளை புலிகளின் திடீர் தாக்குதல் ஒன்றுக்கு முகம் கொடுக்க படைத் தரப்பு தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அந்தப் பகுதியில் சமீப நாட்களாக ஓரளவு பதற்றம் நிலவுகின்றது. ■

## புலிகள் நூல் வெளியீடு

'பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும்' என்ற நூல் வெளியீட்டு விழாவை புலிகள் கடந்த வாரம் வன்னியில் நடத்தினர்.

அந்த நிகழ்வில் புலிகளின் கலை கலாசார பண்பாட்டுத் துறையைச் சேர்ந்த இளங்குமரன் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய அவர்; "நாட்டுக்கான விடுதலைப் போரை நடத்தும் நாம் எமது வரலாற்றுப் பெருமையைத் தெரிந்து கொண்டு எழுச்சி பெற்றுச் செயற்படக் கூடிய வகையில் எமது வரலாறு கற்பிக்கப்பட வேண்டும்" என்றார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; "எமது முதாதையர் எமது மண்ணின் மதிப்பை புரிந்து கொண்டு மிகச் சிறப்பாகப் பெருமையுடன் ஆண்டு வந்த வரலாற்றை எல்லாம் எமது மாணவச் செல்வங்கள் உணர்ந்திருக்க வேண்டும்" என்றும் கூறினார். ■

## படையினரிடம் சரண்

கடந்த வாரம் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் படையதிகாரிகளிடம் சரணடைந்துள்ளனர்.

ஏழு வருடங்கள் புலிகள் இயக்கத்தில் அங்கத்தவராகச் செயற்பட்டுவந்த ராமசாமி சிவகுமார் (வானவன்) மற்றும் 14 வயதுடைய சிவனேசத்துரை கருண் என்போரே சரணடைந்தவர்களாவர்.

இவர்கள் புலிகளின் கஞ்சிகுடிச்ச ஆறு முகாமிலிருந்து தப்பி வந்ததாகக் கூறியுள்ளனர். ஆரையம்பதியைச் சேர்ந்த இவ்விருவரும் தற்சமயம் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ■

## குருணாகலை இசைநிகழ்ச்சியில் அநர்த்தம்
## கடமையில் இருந்த இராணுவ வீரர் ஒருவரே
## குண்டை வீசியுள்ளார்; பொலிஸார் தகவல்

குருணாகலை மாளிகாப்பிட்டிய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இசை நிகழ்ச்சி ஒன்றின்போது, இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்துக்கும் இராணுவ வீரர் ஒருவருக்கும் நேரடித் தொடர்பிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடமையில் இருந்து விடுமுறை அறிவிக்காது வந்த படைவீரரே இந்த குண்டை வெடிக்கச் செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அங்கு வெடித்த கிரனைட் மிக அண்மைக்காலத்தில் இராணுவத்தினரின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

சம்பவம் நடைபெற்ற வேளையில் குறிப்பிட்ட படைவீரர் முகாமில் கடமையில் இருந்தார் என்று பதியப்பட்டிருப்பதால், விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் பொலிஸார் சிரமத்துக்குள்ளாகி இருக்கின்றனர்.

எவ்வாறெனினும் இந்த இராணுவ வீரர் சம்பவம் நடந்த இடத்தில் அன்றைய தினம் காணப்பட்டார் என்பதற்கான ஆதாரங்களை சேகரிக்க முடியுமாயின் அவரை கைது செய்யக்கூடியதாக இருக்கும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு கிராமங்களுக்கு இடையில் நீண்ட காலமாக நிலவி வந்த பகைமையின் விளைவாக ஏற்பட்டதாகக் கூறப்படும் இந்த குண்டு வீச்சில் 14 பேர் கொல்லப்பட்டதுடன் 200 பேர் வரை காயமடைந்தனர்.

ஸ்ரீ.எப்.எம்.என்ற தனியார் வானொலி நிலையம் ஏற்பாடு செய்திருந்த இசை நிகழ்ச்சியின் போதே இந்த அநர்த்தம் நிகழ்ந்தது. ■

## புத்தம் சரணம் கச்சாமி நாடகம் அரங்கேற்றம்

சுவாமி சாந்தானந்த சரஸ்வதியினால் நிறுவப்பட்ட நுண்கலைக் கோவில் கலாலயத்தைச் சேர்ந்த 50க்கும் மேட்பட்ட இசை நடனக் கலைஞர்களினால் 'புத்தம் சரணம் கச்சாமி' என்ற நாட்டிய நாடகம் இம்மாதம் 12ம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பு ப்ண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

அசோக சக்கரவர்த்தியின் கலிங்கப் படையெடுப்பையும் பின்னர் அவன் பௌத்த மதத்தை தழுவியதுமான வரலாற்று நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நாடகத்தில் பல நாடுகளையும் சேர்ந்த கலைஞர்கள் நடித்துள்ளனர்.

இந்த நாடகம் பல்வேறு நாடுகளில் அரங்கேற்றப்பட்டு பாராட்டைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. ■

## சமாதானப் பேச்சுக்களை வலியுறுத்தி
## ஜெனீவா நகரில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தி ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்னால் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

சர்வதேச தமிழர் சங்கம் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 5000 பேர்வரையில் கலந்து கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உடனடியாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்தும் சுலோகங்கள் ஆர்ப்பாட்டத்தில் எடுத்துச்செல்லப்பட்டன.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் காலம் தாழ்த்துவதற்காக இங்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## மேலதிக கப்பல் சேவை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மேலதிக கப்பல் சேவைகளை நடத்த வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

'லங்கா முதித்த' கப்பல் இத்தகைய 3 மேலதிக சேவைகளை நடத்தவுள்ளது. இந்த கப்பலில் ஒரே தடவையில் 1200 பயணிகள் பயணம் மேற் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கப்பல் சேவை நடைபெறும் தினங்கள் பற்றி விரைவில் அறிவிக்கப்படவிருக்கிறது.

தமது பெயர்களைப் பதிவு செய்துவிட்டு நீண்ட காலமாக பயணத்திற்குக் காத்திருப்போர் இந்த சேவைகளால் நன்மையடைவர். ■

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலாயுதம் நாணு ஆசாரி



எங்கள் குலவிளக்கே ஐயா!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன !
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன !
ஆறுதல் சொல்ல ஆண்டவன் வந்தாலென்ன!
ஐயா உங்கள் அன்புக்கு ஈடாகுமா !
உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டகலாது நீங்கள் என்றும் எமக்கு வழிகாட்டியாகவிருந்து என்றும் எம்மை வழி நடத்திச் செல்லவும் உங்கள் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப் பிள்ளைகள்.

தகவல்
நா-றங்கநாதன்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ❀ 11 06 1925



மறைவு ❀ 15 03 2000

### திருமதி கனகம்மா மாரிமுத்து

(இளைப்பாறிய ஆசிரியை)

**திதி: 04.04.2001**

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் இருப்பிடமான அன்பு அம்மாவிற்கு எங்கள் இதயம் நிறைந்த அஞ்சலிகள்! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: எம்.குகன், இத்தாலி
T.P: 010354543

## 15ம் மாத நினைவுநாளும் 17வது பிறந்தநாளும்

(07.04.2001)

மலர்வு
07.04.1984
(மாவிட்டபுரம்)

உதிர்வு
21.01.2000
(Montreux சுவிஸ்)



**செல்வி தாட்சாயினி மன்மதராஜா**

வானத்து வெண்ணிலவே-எம் பொன் வண்ணத்தேரே.. ஞானத்தில் சிறந்தவளே-எம் செல்வ மகளே.. எம் மோனத்தைக் கலைத்து விட்டு-நீ கானல் நீராய் போனதுமேன்? தத்தித் தத்தி வரும் உன்னுயிர்த் தங்கை கண்ணில் படுவதேனோ சுத்திச் சுத்தி அவள் கைகோர்த்து நடப்பதும் ஏனோ.. பித்துப் பிடித்துத் துடிக்கும் எம் கண்ணில் புலப்படாயோ? கத்திக் கதறி அழும் எமக்காறுதல் தாராயோ.. புத்தி கெட்டுத் தவிக்கின்றோம். எம் செல்வமே! பத்தி எரியுது கண்ணம்மா. எம்வயிறுகள். கத்தி முனையாய் உறுத்துதே உன் பிரிவு தான். உன்னுயிர்த் தங்கை கண்ணில் தோன்றும் நீ.. எம் எண்ணத்திலும் ஆற வாராயோ உன் சிரித்த முகமும்-மழலைச் சொல்லும் என்றும் இருப்பது எம்முடன் தானம்மா ... பனிக்குளிருடன் அதிகாலையில் மலரும் மலரம்மா.. என்று காண்போம் உன் பூ முகம்.. நீ இல்லா வீடு இங்கே சுடுகாடாய் கிடக்குதம்மா. நீ இல்லாப் பொழுது எல்லாம் நீள் பொழுது ஆகுதம்மா. நீ இல்லாப் பொழுது எல்லாம் நீண்டு எம்மை வாட்டுதம்மா. எத்தனை உறவுகள் சேர்ந்தாலும் நீ இருந்த இடம் நிரப்ப யாருமில்லையம்மா.. தங்காவுக்குத் தங்காவாக ஓடி வந்து சேர்ந்து விடம்மா. எப்பிறவியிலும் நீயே எம் திரவியமாய் வந்து திக்க வரம் வேண்டும். என்றும் எங்களின் கண்ணீரை உன் பாதத்தில் சமர்ப்பிக்கும் அப்பா, அம்மா, தங்கை, உற்றார், உறவினர்கள்,

*தகவல்: அப்பா சுவிஸ், தொலைபேசி: 021-9611560*





"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும். 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பென் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்."

தொடர்பு கொள்ளுமிடம்:

விலாசம்:

**PR.DANSOKHO ALI, 55. Rue des Poissonniers,**
**75018 Paris, France.**
**தொலைபேசி-0142552036**

## வசிய வைத்தியம்

1945ம் ஆண்டு ஆரம்பித்த புனித சேவை (GOVT APPROVED) மட்டக்களப்பு-மலையாள-மாந்திரீக வசிய மருத்துவத்தினால், காதல் பிரச்சனைகளைத் தீர்த்து விரும்பியவர்களை சம்பந்தப்பட்டவர்களின் சம்மதத்துடன திருமணம் செய்ய, கணவன்-மனைவி கருத்துவேறுபாடுகள் சந்தேகங்களை தீர்த்து பிரியாமலிருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள், வேண்டியவர்கள வந்து உறவாக, தகாத ஆண்-பெண் உறவைபோதை வஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராதநோய், எதிரி தொல்லைகளிலிருந்து விடுபட-கண்ணூறு நாவூறு, சர்வதோஷ நிவர்த்தி சாந்தி பரிகாரங்கள் செய்ய, எததுன்பங்களும் அணுகாமல் உடல் வீடு வளவு வியாபார இடங்களைக் காவல்செய்ய, திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், பொருளாதாரம், வெளிநாட்டுப்பிரயாணம் வேறுகாரிய வெற்றிக்கு "சகலகாரிய சித்தி இராயுவசியங்கள்" செய்துகொள்ள தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள், மனநோய், மருந்தீடு, பயம், பலவீனம், தாழ்வு மனப்பான்மை, கவலை, ரெனஷன, இவைகளுக்கு சிறப்புச சிகிச்சைபெற மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்துக்கு (இந்தியன் வைத்தியசாலை) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் தபால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷேட தபாலில் எல்லா மதத்தினர்களுக்குமேற்ற தீங்கற்ற தெய்வீக புனித பரிகாரப்பொருட்களைப் பெற்று நியாயமான கோரிக்கைகளை உடன்நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

சுகாதார அமைச்சினால் பதிவுசெய்யப்பட்ட பதிவு இல: 061 ஹோமியோபதி, அக்குப்பஞ்சர், சித்த ஆயுர்வேத, மாந்திரீக, மனோவசிய, யோகசிகிச்சையாளர்

### டாக்டர்-"மந்திரயோகி"

R.P.H.M-D.Ac-(இலங்கை) P.I.S.M, (இந்தியா)
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
உள்நாட்டு தொ.பே: 065-24872 வெளிநாட்டுதொ.பே: 0094 65 2872



(YOGA) MY GURU

## 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு ❀ 08 12 1934



இறப்பு ❀ 10 02 2001

### திருமதி நல்லதம்பி யோகேஸ்வரி

சிவபாத மடைந்திட்ட எமது
அன்புத் தாயார்
திருமதி நல்லதம்பி யோகேஸ்வரி
நல்லதோர் பெண் பிள்ளையாகி
நல்லதோர் மனையாளாகி
நல்லதோர் தாயாய் நின்று
எல்லாம் வல்லவன் திரு வடிகீழ்
வாழ்கின்றாய் தாயே!

10.02.01 இல் சிவபாதமடைந்து 15.02.01ல் அன்று தீயுடன் சங்கமமான எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தபால் தந்தி தொலைபேசி E-mail மூலமும் ஆறு நாளும் எமக்கு எல்லா வழிகளிலும் ஆறுதல் அளித்து, மரணக்கிரியைகளிலும் சஷண்டீகன நிகழ்ச்சிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைக் கூறுகின்றோம்.

எமது அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
அன்புப் பிள்ளைகள்

Sangar :- Canada- 0014167467676 Sunder :- Londan 00447940014960 Bava:- Srilanka 009424 23269

# விளம்பரப் பகுதி

## நிதி உதவி கோருகிறார்



அன்புக்குரிய மக்களுக்கு

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செபமாலைமுத்து செலஸ்ரினம்மா ஆகிய நான் தங்களுக்கு தாழ்மையுடன் அறியத் தருவது யாதெனில், எனது கணவர் இறந்து 10 வருடங்கள். எனக்கு 4 பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் இருக்கிறார்கள். ஆண்மகனுக்கு வயது 12. எனவே உழைப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் இருக்கிறேன். 15 வயதுடைய எனது மகளுக்கு இருதயத்தில் இரு வால்வு சுருக்க நோயால் பாதிக்கப்பட்டு பெரிதும் கஷ்ரப்படுகிறார். அவரை இந்தியா கொண்டு போய் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே அவருக்கு சத்திர சிகிச்சை செய்வதற்கு 3 லட்சம் ரூபா தேவை எனவும் டாக்டர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே மக்களாகிய நீங்கள் உங்களால் இயன்ற உதவியை செய்து எனது மகளை காப்பாற்றி உதவுமாறு மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன். (நன்றி)

**ஊர்காவற்றுறை, மக்கள் வங்கி, க/கு இல. 90507**

## உங்கள் பலன் எப்படி?

### ஏ.சுலேமான் - A. Suleman

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

★ நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
★ பரீட்சை பற்றிய பதட்டமா?
★ பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**Mrs.Madiha, 78 Plashet Grove,**
**London. E 6 1AB.**
**T.P. 02085860922**

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்பிரல் 19 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

**கல்முனையில் மே 05, 06 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஏப்பிரல் 07, 08 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இயக்கங்களின் வரித்தொல்லை

# வாழத் தவிக்கும் வன்னி மக்கள்

வடபகுதிக்கான நுழைவாயிலாக விளங்குவது வவுனியா.

வவுனியாவிலிருந்தே வடபுலத்தின் தமிழ்ப் பிரதேசங்கள் ஆரம்பமாகின்றன.

முன்னர் யாழ்ப்பாணத்துக்கான ரயில் ஓடிய காலங்களில் ரயில் வவுனியா ஸ்டேஷனுக்குள் நுழைந்தவுடன் தமிழ்ப் பிரதேசங்களுக்குள் நுழைந்துவிட்டோம் என்ற வித்தியாசம் அங்கு கேட்கும் கலகலப்பான தமிழ்க் குரல்களால் விளங்கும்.

ரயிலில் பயணம் செய்யும் தமிழர்களின் முகத்தில் வவுனியாவைக் கண்டவுடன் ஒரு குதூகலக்களை இயல்பாகவே பிறக்கும்.

ஆனால் இப்போது யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் தடைப்பட்டுப் போயுள்ளன.

அன்றைய காலத்தில் காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட ஒருவர் மதியம் கொழும்பை அடைந்து தனது காரியங்களை முடித்துக்கொண்டு அன்று மாலையே மற்றொரு ரயிலில் யாழ்ப்பாணம் திரும்பக் கூடியதாக இருந்தது.

அந்த வாய்ப்புகளெல்லாம் இப்போது கனவென்று ஆகிவிட்டது.

யாழ்ப்பாணப் பயணமென்பது ஒரு வெளிநாட்டுப் பயணம் போலாகிவிட்ட நிலையில், ரெயில் சேவை வவுனியாவுடன் ஸ்தம்பிக்கிறது.

வவுனியாவைத் தலைவாசலாகக் கொண்டு விரிகின்ற பாரிய தமிழ்ப் பகுதியான வன்னிப் பிரதேசம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்குகிறது.

இந்த வன்னிப் பகுதியானதுதான் இப்போது வடபகுதி மக்களின் துன்பங்களைத் தாங்கி நிற்கும் சுமைதாங்கியாக மாறியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனையும் அதன் விளைவான யுத்தமும் வன்னியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

வன்னிவாழ் தமிழ் மக்களின் குடிசனப் பரம்பலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ரிவிரெச இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோது முழு யாழ் மக்களும் புலிகளால் வன்னிக்கு புலம்பெயரும்படி கேட்கப்பட்டனர்.

இதனால் கணிசமான ஒரு பெருந்தொகையினர் வன்னிக்கு இடம் பெயர்ந்தனர்.

இந்த இடம்பெயர்வால் அம் மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாயினர்.

அவர்களில் பலர் புலிகளின் விருப்பத்தையும் மீறி மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் சென்றனர்.

அப்போது புலிகளின் ஆஸ்தான கவிஞரான புதுவை இரத்தினதுரை, திரும்பிச் செல்லும் மக்களைப் பார்த்து "நீங்கள் இப்போதே திரும்பிச் செல்கிறீர்கள் ஆனால்; விரைவில் ஷொப்பிங் பேக்கோடு திரும்பி வருவீர்கள்" என்று எச்சரித்திருந்தார்.

எனினும் அவர்கள் சொந்த இடங்களில் வாழ்வதையே விரும்பித் திரும்பிச் சென்றனர்.

ஆயினும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க வன்னியில் தங்கிவிட்டனர்.

வன்னிக்கு இடம் பெயர்ந்த யாழ். மக்களின் சுமையை வன்னி ஏற்கவேண்டியிருக்கும் அதேவேளை வன்னியின் தமிழ மக்களின் வாழ்நிலையிலும் சீரழிவுகள் பெருகி வருகின்றன.

வன்னிப் பிரதேசம் தற்போது இரண்டு பகுதிகளாக வெவ்வேறாகியுள்ளது.

**இப்போது வன்னி மக்களுக்கு இந்த இயக்கங்களின் எஜமானத்துவமும், வரிகளும், பலவந்த நிதி சேகரிப்பும் வாய்விட்டு அழ முடியாத பெரும் வாழ்க்கைப் பழுவாகப் பூதாகாரமடைந்துள்ளன.**

ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி, மற்றையது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை அரசாங்கம் சுத்திகரிக்கப்படாத பகுதியென வகைப்படுத்தி வைத்துள்ளது.

சுத்திகரிக்கப்படாத பகுதிகளில் புலிகளின் நிர்வாகத்துக்கான கட்டுப்பாடுகள் நடைமுறையிலுள்ளன.

பாரிய யுத்தமொன்றில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அப் பகுதியில் யுத்தப் பிரதேசத்துக்குரிய பல நடைமுறைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

இயல்பான ஒரு சுமுக சூழ்நிலையைப் போலல்லாது யுத்த சூழ்நிலையில் பல கடுமையான விதிகளும் கட்டுப்பாடுகளும் ஒழுங்கு முறைகளும் மேற்கொள்ளப்படும்.

வன்னியில் கட்டாய இராணுவப் பயிற்சி மற்றும் கடுமையான ஒழுங்கு விதிகள் காரணமாகவும் அங்கு நிலவும் பற்றாக் குறைகள், மருத்துவ வசதியீனங்கள், வருமானமின்மை காரணமாகவும், இவற்றைவிட வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ளல், வெளிநாடு செல்லல், மேலதிக கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பிற தேவைகள் காரணமாகவும் பலர் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இடம்பெயர விளைகிறார்கள்.

ஆனால் அப் பகுதியை விட்டு வெளியேறுவதற்கு புலிகள் கடுமையான பாஸ் நடைமுறையை அமுல்படுத்தியிருப்பதால் அவ்வாறு மிக அவசியமான காரணங்களைக் காண்பிக்கக்கூடிய ஒரு சிலராலேயே அவர்களின் அனுமதி பெற்று இப்பகுதிகளுக்கு வர முடிகிறது.

இதனால் பலர் இரகசியமாக இடம் பெயர முனைகிறார்கள்.

அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் வவுனியாவில் அகதி முகாம்களில் வைத்திருக்கப்படுகிறார்கள்.

இதைவிட யுத்தத்தால் வீடுவாசல் இழந்து அகதிகளாக நேரிட்டவர்களும் இவ்வாறான அகதி முகாம்களில் பேணப்படுகிறார்கள்.

அகதி முகாம் வாழ்க்கை இன்னல் நிறைந்ததாக இருப்பது மட்டுமல்ல, பல சமூகச் சீரழிவுகளுக்கும் வழிகோலுவதாய் உள்ளது.

இம் மக்கள் அரசாங்கத்தின் அனுசரணையில் அது வழங்கும் உலர் உணவில் தங்கி வாழ்பவர்களாக இருக்க நேரிடுகிறது.

இவ்வாறான நிலையில் வடக்கிற்கும் தெற்கிற்குமான வாசலாகத் திகழ்வதால் வவுனியா பலத்த கெடுபிடிக்குள் உள்ளாகியிருக்கிறது.

வடக்கிலிருந்து புலிகள் தெற்குக்கு ஊடுருவிவிடக்கூடுமென்ற அச்சத்தில அரசாங்கமும் வவுனியாவில் கடுமையான பாஸ் நடைமுறையை மேற்கொண்டு வருகிறது.

இதனால் வன்னியில் புலிகளினதும் அரசாங்கத்தினதுமான இரண்டுவித பாஸ் நடைமுறைகள் வன்னியில் நடைபெறுகின்றன.

இதேவேளை வவுனியாவில் பலத்த இராணுவக் கெடுபிடிகள் நிலவுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து எந்நேரத்திலும் புலிகள் வவுனியாவின்மீது இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்ளலாமென்பதாலும், வன்னியின் எல்லையோரச் சிங்களக் கிராமங்களின் மீது புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளும் அச்சுறுத்தல் நிலவுவதாலும் வவுனியா நகருள் ஊடுருவல்களைத் தடுக்கவும் இராணுவத்தின் சோதனைகள் கெடுபிடிகள் இங்கு பலமாக உள்ளன.

இதேவேளை இராணுவம் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்குமுகமாக மற்றொரு தந்திரத்தைக் கையாண்டு வந்தது.

அதுதான் ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதமளித்து அவர்களைக் கொண்டு புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி.

இவ் வழிமுறையால் இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் வேறு சில நன்மைகளும் உள்ளன.

இலங்கை இராணுவம் சிங்கள இராணுவமாக உள்ளதால் அவர்களால் புலிகளை அடையாளம் கண்டு கொள்வது கடினம்.

ஆனால், தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தோன்றி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த இந்த இயக்கங்களுக்கு பாம்பின் கால் பாம்பறியும் என்ற வகையில் புலிகளை அடையாளம் காண முடியுமாயிருக்குமென அவர்கள் கருதினர்.

**இவற்றின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்கள் எவ்வித எதிர்ப்பையும் வெளிக்காட்ட முடியாதவர்களாக மௌனித்துப் போயுள்ளனர். அதேவேளை அவர்களின் வாழ்க்கைச் சுமை தாங்க முடியாத அளவுக்கு மோசமாகிச் செல்கிறது.**

மற்றொரு வகையில், இந்த இயக்கங்கள் எல்லாமே புலிகளால் தடைசெய்யப்பட்டு, தாக்கப்பட்டு, தமது நூற்றுக்கணக்கான உறுப்பினர்களையும் தலைவர்களையும் புலிகளிடம் பலிகொடுத்து கசப்பான அனுபவங்களைக் கொண்டுள்ளமையால் அவர்களுக்கு புலிகள்மீது இயல்பான வெறுப்புணர்ச்சி ஏற்பட்டிருக்குமெனவும் இவர்கள் கணக்கிட்டனர்.

இவ்வாறான வெறுப்பின் நிமித்தமும், இன்னமும் இருந்துகொண்டிருக்கின்ற புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகவும் இவர்கள் புலிகளை முறியடிக்க வேண்டுமென்று உட்கிடையை கொண்டிருப்பார்களென்றும் அதனால் இவர்கள் தாமாகவே புலி களுக்கு எதிராகச் செயற்படுவார்களென்றும் கருதினர்.

இவ்வாறு அவர்களைச் செயற்படச் செய்வதால் தமிழ்த் தரப்பினரையே தங்களுக்குள் தாங்கள் மோதிக்கொள்ள வைத்துவிடும் ஒரு யுக்தியில் அரசாங்கம் வெற்றி கொள்ளலாமென எண்ணமிட்டனர்.

அத்தோடு இவ்வாறான இயக்கங்களுக்கிடையான மோதல்கள் தமிழ் மக்களை அவர்கள்மீது வெறுப்படையச் செய்யுமாயின் அதுவும் தமக்கு நன்மையேயெனக் கருதினர்.

ஆயுதங்களுடன் நடமாடும் இவ் இயக்கங்களால் மக்களுக்கு ஏற்படக் கூடிய தொல்லைகளையும் மறைமுகமாக இராணுவத்தினர் விரும்பினர்.

அவ்வாறான நிலையில் மக்கள் அத் தொல்லைகளிலிருந்து விடுபட இராணுவத்தை நாடவேண்டிய தேவை ஏற்படுமெனவும் அதனால் அங்கு இராணுவத்தின் அதிகாரம் மேலும் பலக்குமெனவும் அவர்கள் கருதினர்.

## நரன்

இவ்விதத்தில் இராணுவத்தின் அனுசரணையுடன் வன்னியில் பல தமிழ் இயக்கங்கள் ஆயுதமயப்படுத்தப்பட்டு செயற்பட விடப்பட்டன.

இவ்வியக்கங்களில் வன்னியைப் பொறுத்தவரை மாணிக்கதாஸன் தலைமையிலான புளொட் இயக்கமே ஆரம்பத்தில் பலமாக இருந்தது.

அதற்கு அடுத்த படியாக டெலோ இயக்கம் விளங்கியது.

இவை இரண்டும் வன்னியில் முகாம்களை நடத்தி வந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எப். ஆயுத நடவடிக்கைகளிலிருந்து விலகியிருந்ததனால் அலுவலகங்களின் பாதுகாப்புக்கான ஆயுதங்களோடு தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது.

ஈ.பி.டி.பி. வன்னியில் செயற்படவில்லை.

இந் நிலையில் இயக்கங்களின் நடவடிக்கைகள் இராணுவம் எதிர்பார்த்ததுபோல் புலிகளைக் கட்டுப்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

அவர்கள் தமக்குள் மோதிக் கொள்ளும் அளவுக்குச் சென்றிருந்தன.

இதன் காரணமாக புளொட்டுக்கும் டெலோவுக்குமிடையே வெடித்த மோதலில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள்கூட கடந்த காலங்களில் மரணித்திருந்தனர்.

அம் மோதல்கள் கொழும்புவரை நீண்டு, கொழும்பிலும்கூட இவ் இயக்க உறுப்பினர்கள் ஒருவரால் ஒருவர் கொல்லப்பட்ட நிகழ்வுகள் நிகழ்ந்திருந்தன.

எனினும் புளொட் இயக்கத்தின் இராணுவப் பிரிவின் தலைவர் மாணிக்கதாஸன் கொலைசெய்யப்பட்டதன்பின் இவ் ஆயுத மோதல்கள் தணிந்துள்ளன.

இம் மோதல்களுக்கு அடிப்படையாக இயக்கத்திற்கான நிதி சேகரிப்பு மற்றும் வியாபாரத்தில் எழுந்த போட்டிகளும் காரணமாக இருந்திருந்தன.

இப்போது வன்னி மக்களுக்கு இந்த இயக்கங்களின் எஜமானத்துவமும், வரிகளும், பலவந்த நிதி சேகரிப்பும் வாய்விட்டு அழ முடியாத பெரும் வாழ்க்கைப் பழுவாகப் பூதாகாரமடைந்துள்ளன.

புலிகளைக் கட்டுப்படுத்துவது என்ற காரணத்தை முன்வைத்து இராணுவம் செய்து கொடுத்த இந்த ஏற்பாடு, பெருமளவில் புலிகளைக் கட்டுப்படுத்துவதாக அமையாவிட்டாலும் மறுபுறம் மக்களை இம்சிப்பதாகவே உருவெடுத்துள்ளது.

வன்னி மக்களைப் பொறுத்தவரையில் அங்கு பலவிதப்பட்ட ஆயுத அச்சுறுத்தல்கள் நிலவுகின்றன.

ஒருபுறம் புலிகளின் ஆயுத நடமாட்டம், மறுபுறம் இராணுவத்தின் நடமாட்டம், இன்னொருபுறம் மாற்று இயக்கங்களின் நடமாட்டம்.

இவற்றின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்கள் எவ்வித எதிர்ப்பையும் வெளிக்காட்ட முடியாதவர்களாக மௌனித்துப் போயுள்ளனர்.

அதேவேளை அவர்களின் வாழ்க்கைச் சுமை தாங்க முடியாத அளவுக்கு மோசமாகிச் செல்கிறது.

இலங்கையின் ரூபா மதிப்பிறக்கம், பணவீக்கம், உலகச் சந்தையில் விலையேற்றம் ஆகியவற்றால் ஒருபுறம் பொருட்கள் விலையேறிச் செல்கிறது.

அதேவேளை இலங்கையில் நிகழும் உள்நாட்டு யுத்தத்திற்கு பெருமளவு நிதி விரயமாக்கப்படுவதாலும் மேலும் விலை அதிகரிக்கிறது.

தற்போதைய பட்ஜெட்டின் பாதுகாப்பு வரி அதிகரிப்பையடுத்து பாதுகாப்பு வரியாகவும் பொருட்கள் சேவைகள் வரியாகவும் மொத்தம் 20 சதவீதம் வரியாக அறவிடப்படுகிறது.

மேலும் வன்னிக்கான போக்குவரத்துச் செலவீனங்களாலும் அங்கு விலைகள் ஏறுகின்றன.

இத்தகைய வரிகளையும் விலையேற்றங்களையும் சாதாரண மக்கள் தாங்க முடியாதிருக்கும் நிலையில் வன்னியில் இவ்வியக்கங்களால் கேள்வியற்ற வகையில் நினைத்தது நினைத்தபடி பொருட்களுக்கு வரிகள் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

வன்னியில் அகதி முகாம்களில் வசிப்பவர்களுக்கு விநியோகிக்கும் பொருட்கள் முதற்கொண்டு இவ்வகை வரிகள் அறவிடப்படுகின்றன.

அவ்வாறு இயக்கங்களால் விதிக்கப்படும் வரிகளால் ஒருவர் தனது நாளாந்த குடும்பக் கொள்வனவில் சுமார் 100 ரூபாவரை இப்படி வரியாக மேலதிகமாகச் செலுத்த வேண்டியதாக இருக்கிறது.

அவ்வாறு இயக்கங்களால் வன்னியில் விதிக்கப்படும் வரிகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது இவ் விடயத்தின் பாரதூரத்தை உணர்த்துவதாக அமையும்.

வவுனியாவில் ரெலோ அமைப்பால் மட்டும் அறிவிடப்படும் வரிகள் கட்டணங்கள் இவை.

வவுனியாவில் ஒரு கிலோ சீனிக்கு 2 ரூபா வரி.

ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய்க்கு 2ரூபா வரி.

அப்பிள், ஒரேஞ்ச் ஆகியவற்றுக்கு 100வீத வரி. (அதாவது இரட்டிப்பு விலை)

தேங்காய் தனியார் விற்பனையைத் தடை செய்து மொத்த விற்பனையையும் அவர்கள் பலவந்தமாக பொறுப்பெடுத்துள்ளனர்.

அதனால் வேறு எவரும் தேங்காய் வியாபாரம் செய்ய முடியாது.

தேங்காய் பிடுங்குவதற்கு அங்கு தொழிலாளருக்கு கூலி கொடுக்கப்படுவதில்லை, பதிலாக மரமொன்றுக்கு ஒரு தேங்காய் வீதம் கொடுப்பதே வழமை. அவ்வாறு பெறும் தேங்காய்களைக்கூட இவ்வியக்கத்தவருக்கே விற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளால் தேங்காய் வியாபாரத்தை பலவந்தமாக ஏகபோகமாக்கிக்கொண்டு புத்தளத்தில் 7 ரூபாக்கு வாங்குகின்ற தேங்காய் வவுனியாவில் 13 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அத்தோடு வாகனங்கள் வைத்திருப்பதற்கும் அவர்களால் வரி அறவிடப்படுகிறது.

இதேபோல் அங்கு புளொட் அமைப்பால் ஒரு கிலோ மீனுக்கு 50 ரூபா.

ஒரு லோட் நெல்லுக்கு 1000 ரூபா.

வன்னிக்கு பொருட்கள் கொண்டு செல்லும் லொறியொன்றுக்கு வவுனியாவிலிருந்து மன்னார் கொண்டு செல்ல (46கி.மீ) 5000 ரூபாவும், வவுனியாவிலிருந்து பிரமனாளங்குளம் கொண்டு செல்ல (15. 15 கி.மீ) 2500 ரூபாவும் கட்டணமாக இவர்களால் அறவிடப்படுகிறது.

வவுனியாவில் யாரும் வாடகை வாகன சேவை செய்வதானால் (ஆட்டோ, டாக்ஸி போன்றவை) 2500 ரூபா செலுத்தி இவர்களிடம் அனுமதி பெற வேண்டும்.

இதேபோல் ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணியினரால் கிழங்கு, வெங்காயம், மரக்கறிவகையின் வியாபாரத்துக்கு தனியுரிமை கோரப்படுகிறது.

இவற்றைவிட தனிப்பட்ட வர்த்தகர்கள் தனவந்தர்களிடமிருந்தும் இவ்வியக்கங்களால் நிதி கப்பமாக அறவிடப்படுகிறது.

இத்தகைய வர்த்தகர்கள் புலிகளாலும் நிதி செலுத்தவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் புலிகளுக்கு நிதி கட்டுவது இவ்வியக்கங்களுக்குத் தெரியுமாதலால் தமக்கும் அவ்வாறு தரும்படி அவர்களை நிர்ப்பந்திக்கிறார்கள்.

இதேவேளை இராணுவத்திற்கும் இவ் விடயம் தெரியுமாதலால் புலிகளின் தபால் தலைப்பில் தாமே ஒரு கடிதம் வரைந்து அதன்படி அவர்கள் பணம் கட்டச் செல்லும் போது அவர்களைப் பிடித்து அப் பணத்தை தாம் பறித்துக் கொள்கிறார்கள்.

இதைவிட வெளிநாடுகளிலிருந்து திரும்புபவர்களைக் கடத்தியும் இவ்வாறு இயக்கங்களால் பணம் அறிவிடப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் வெள்ளவத்தையில் வசித்த நாகமுத்து நவரத்தினமென்பவர் வவுனியாவிற்குச் சென்று பாவற்குளத்திலுள்ள தனது காணியைப் பார்வையிட முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது அவரை நீல நிற வேனில் வந்த 8 ஆயுதம் தரித்த இளைஞர்கள் கடத்த முற்பட்ட வேளை தப்பி வந்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் அங்கு சர்வ சாதாரணமாக நடந்து வருகின்றன.

ஈ.பி.டி.பி. அரசாங்கத்துடன் இணைந்துள்ளதால் அவர்களுக்கு நிதிப் பிரச்சனை இல்லை, ஆனால் தமக்குத் தமது கட்சி நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்களைப் பராமரிக்கவும் நிதி தேவைப்படுகிறதென்று ஒருவகை வாதத்தை இவ்வியக்கங்கள் முன்வைக்கின்றன

ஆனால், ஜனநாயகப் பாதையில் செல்வதற்கு முன்வந்தபின் இத்தகைய நியாயங்களை அவர்கள் தெரிவிப்பது பொருத்தமானதல்ல..

மக்களைப் பாதுகாக்க, மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முன்வந்தவர்களாகக் கூறுபவர்கள் மக்கள் மீதிருக்கும் சுமைகளை நீக்குவதற்குப் பதிலாக மேலும் இவ்வகை வரிச்சுமைகளை ஏற்றி வாழ்க்கையை கடினமானதாக்குவது பொறுப்பற்ற செயலே.

இத்தகைய வரிகளால் ஒருபோதும் உரிமைகளோ சுதந்திரமோ கிடைத்துவிடப் போவதில்லையென்பதே உண்மை! ■

---

# அரசாங்க அதிபரின் 'முயற்சிக்கு' கைமேல் பலன்

# 'வன்னி' உற்பத்திகளுக்கு மீண்டும் தடை

*இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களை வவுனியாவுக்கு எடுத்துவர படையினரால் மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*அந்தப் பகுதியில் உற்பத்தியாகும் கருவாடு, நெல், புகையிலை, உழுந்து உள்ளிட்ட உற்பத்திகளை வவுனியாவுக்கு கொண்டு வந்து விற்பனை செய்வதன் மூலம் வன்னி மக்கள் ஓரளவேனும் தமது பொருளாதார கஷ்டத்தை சமாளித்து வந்தனர். படைத்தரப்பு சிறிது காலத்துக்கு அனுமதியளிப்பதும், பின்னர் தடைவிதிப்பதுமாக தங்கள் இஷ்டப்படி இந்தப் பிரச்சனையை கையாண்டு வருகிறார்கள்.*

*இப்போது மீண்டும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இம்முறை வன்னியில் விளையும் பொருட்களை வவுனியா எடுத்துவர விதிக்கப்பட்டிருக்கும் தடைக்கு ஒரு காரணம் முன்வைக்கப்பட்டுள்ளது. அது எந்தளவு உண்மையானது; நியாயமானது, என்பதற்கெல்லாம் அப்பால் இந்தத் தடையால் ஏற்கனவே 'மரத்தால் விழுந்தவன் நிலை'யில் இருக்கும் வன்னி மக்கள் 'மாடேறி மிதித்தவன் நிலை'க்கும் உள்ளாகியிருக்கிறார்கள்.*

*வன்னியில் பெருமளவு நெல் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கிறது. 1999 ஆம் ஆண்டு பெரும்போக அறுவடையும், அதன் பின்னர் 2000ம் ஆண்டில் இரண்டு போகங்கள்; இந்தாண்டில் ஒரு போகம். எல்லாமாக சேர்ந்து சுமார் 50 இலட்சம் புசல் நெல் களஞ்சியங்களில் குவிக்கப்பட்டிருக்கிறது. வன்னியில் பாரியளவிலான விவசாய நடவடிக்கைகளில் புலிகள் மாத்திரமே ஈடுபடலாம் என்ற கட்டுப்பாடு இருப்பதால், இந்த நெல் முழுவதும் புலிகளின் கையிலேயே இருக்கிறது.*

*அவற்றை உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் அங்குள்ள நெல் முழுவதையும் தென்னிலங்கையில் விற்பனை செய்யக் கூடிய ஒரு திட்டத்தை அமுல்படுத்த விடுதலைப் புலிகள் வவுனியா அரசாங்க அதிபரினதும், அதிகாரிகளினதும், உதவியை நாடியிருக்கிறார்கள்.*

*இது தொடர்பான ஆலோசனை கடிதம் ஒன்றை வவுனியா அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அதில் வன்னி மக்களின் நெல்லை கொள்வனவு செய்வதினால், அரசாங்கத்துக்கும் அம்மக்களுக்கும் கிடைக்கும் இலாபங்களை விலாவாரியாக விவரித்திருக்கிறார்.*

*நெல்லை கொள்வனவு செய்து அங்குள்ள ஆலைகளிலேயே அவற்றை அரிசியாக்கி இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணமாக வழங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு பல இலட்சங்களை மீதப்படுத்தமுடியும் என்றும் அரசாங்க அதிபரின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது*

*ஆனால் களஞ்சியங்களில் இருக்கும் பெருந்தொகை நெல் வன்னி மக்களுடையதல்ல என்றும் அவை முற்றிலும் புலிகளுக்கு சொந்தமானவை எனவும் வவுனியா அரசாங்க அதிபர் அவற்றை விற்பனை செய்ய புலிகளுக்கு உதவுகிறார் என்றெல்லாம் அரசாங்க உயர்மட்டத்துக்கு தகவல் போயுள்ளது. போதாக்குறைக்கு வன்னி விவசாயிகள் அமைப்பு என்ற பெயரிலும் இதுவிடயம் தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்துக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.*

*எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்த படையினர், புலிகள் நெல்லை விற்று விடக்கூடாது என்பதற்காக அப்பாவி பொது மக்கள் கொண்டு வரும் சிறு உற்பத்திகளுக்கும் சேர்த்தே தடைவிதித்து விட்டார்கள்.*

*"ஏன் இப்படி செய்தீர்கள்?" என்று படைத்தரப்பைக் கேட்டால் "அரசாங்க அதிபர் மூலமாக புலிகள் நெல் வியாபாரம் செய்ய முயற்சித்தார்கள். அதனால் தான் தடை விதித்தோம்" என்று காரணம் சொல்லப்படுகிறது.*

*எது எப்படியிருந்தாலும் இதனால் கடைசியில் பாதிக்கப்படுவது தமது தோட்டத்தில் விளையும் உற்பத்திகளை கால் நடையாகவும், சைக்கிளிலும் சுமந்து வந்து வவுனியாவில் விற்று வாழ்க்கை ஓட்டிய அப்பாவி விவசாயிகள்தான்.*

*கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து பொருட்களை வவுனியாவுக்கு கொண்டு வர மீண்டும் தடை-காரணம் தெரியவில்லை என்கிறார்கள் அதிகாரிகள் இப்படித்தான் பத்திரிகைகளில் செய்தி வந்தது.- அவர்களுக்கு எதற்குத்தான் காரணம் தெரிந்தது..?* ●

# அண்டை மண்டலத்தில்....


## தி.மு.கவின் திண்டாட்டம்

எந்தக் கூட்டணியில் சிக்கல் ஏற்பட்டு அதன் விளைவாக மூன்றாவது அணி உருவாகும் என்று கருதப் பட்டதோ அந்த அ.தி.மு.க அணி இன்று பிரச்சனைகளைக் களைந்து தொகுதிகளை ஒதுக்குவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடு பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் வெண்ணை திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி தற்போது உடைந்து விட்டது. தான் கேட்ட தொகுதிகளை ஒதுக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி வை.கோ. தலை மையிலான ம.தி.மு.க, தி.மு.க கூட்டணி யில் இருந்து விலகித் தனியாகப் போட்டியிடப் போவதாக அறிவித்து விட்டது.

வை.கோ. தன்னுடைய முடிவை அறி வித்த அதே நேரத்தில் தமிழக முதல்வரும் தி.மு.க தலைவருமான கருணாநிதி தி.மு.க மற்றும் இதர கூட்டணிக் கட்சிகள் போட்டி யிடும் தொகுதிகளின் பட்டியலை சனிக் கிழமை இரவு வெளியிட்டார். தி.மு.க 177 தொகுதிகளில் போட்டியிட இருக்கிறது. இந்தத் தொகுதிகளில் ஏற்கனவே ம.தி. மு.கவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளும் அடங்கும். தி.மு.க.வை கடுமையாக விமர்சித்த வை.கோ, 213 தொகுதிகளில் தன்னுடைய கட்சி போட்டியிடும் என்று அறிவித்தார். "ஆனால் பாரதீய ஜனதாக்கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக தன் கட்சி போட்டியிடாது என்று அவர் கூறினார். இதில் ஆச்சரியம் என்னவென்றால் ம.தி.மு.க தொண்டர்கள் வெளிப்படுத்திய மகிழ்ச்சி தான். தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வை.கோவை நிர்ப்பந்தித்த அவர்கள் அது குறித்து முடிவு வெளியானதும் பட்டாசுகள் வெடித்தார்கள். கருணாநிதிக்கு எதிராக கோஷம் முழங்கினார்கள்.

ஆனால் பிரச்சனை திடீரென்று எழுந் தது அல்ல. தமிழகத்தில் முதல் முறையாகக் கூட்டணியில் இருந்து சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்திக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு 23 இடங்களை தி.மு.க ஒதுக்கிய போதே ம.தி.மு.க கொதித்து எழுந்தது. பா.ஜ.கவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை அதிகம் என்பது ஒருபுறமிருக்க, கூட்டணியில் தி.மு.க.வுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய கட்சி தன்னுடையது தான் என்று பேசி வந்த வை.கோவுக்கு இது பெரிய அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. இறுதியில் ஆளுக்கு 21 தொகுதிகள் என்று வை.கோவை சமாதானம் செய்தார் கருணாநிதி. தீர்ந்தது பிரச்சனை என்று முடிவுக்கு வந்த போது யார் யார் எந்தத் தொகுதியில் போட்டியிடுவது என்ற கேள்வி மறுபடியும் பூதாகரமாக எழுந்து கூட்டணி முறிந்து விட்டது. ம.தி.மு.க கேட்ட 21 தொகுதிகளில் 18 தொகுதிகளை அக்கட்சியின் விருப்பப்படியே தி.மு.க ஒதுக்கித் தந்தது. மீதமுள்ள 3 தொகுதிகளை ஒதுக்குவதில்தான் பிரச்சனை. நிலைமை மிகவும் நெருக்கடியை நோக்கி நகர்ந்த போது, பா.ஜ.க தலைவர்கள், குறிப்பாக புதுடில்லியில் உள்ள பிரதமர் வாஜ்பாய் உள்பட இப்பிரச்சனையில் தலையிட்டு ஒரு சுமுக மான உறவைக் கொண்டு வருவார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால் அது நடைபெற வில்லை. டில்லி பா.ஜ.க தலைவர்கள் தன்னிடம் பேசவில்லை என்பதை முதல்வர் கருணாநிதியும் ஒப்புக் கொண்டார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இதுபோல தொகுதிப் பங்கீடு பிரச்சனை ஏற்பட்டபோது பா.ஜ.க தலைவர்கள்தான் சம தான முயற்சியில் ஈடுபட்டு பிரச்சனையைத் தீர்த்தனர். ஆனால் தற்போது நடப்பது சட்டப்பேரவைக்கான தேர்தல் என்பதால், மாநிலக் கட்சியான ம.தி.மு.க.வுக்கு தன்னு டைய பலத்தை நிரூபித்தே ஆக வேண்டிய



கட்டாயம் இருக்கிறது. தேர்தல் களத்தில் முன்னெப்போதையும்விட அதிகக் கட்சிகள் இருப்பதால் யார் அதிக இடங்களைப் பெறுகி றார்கள் என்பது எதிர்கால அரசியலுக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதால்தான் இந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. குறிப் பாக ம.தி.மு.க.வுக்கு இந்த நிர்ப்பந்தம் சற்றே அதிகம் என்பதை மறுப்பதற்கில்லை.

ம.தி.மு.க.வின் முடிவால் பெரும்பாதிப் புக்கு உள்ளாக இருப்பது தி.மு.க மட்டும் அல்ல, ம.தி.மு.க.தான். கடந்த சட்டப்பேர வைத் தேர்தலில் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாத ம.தி.மு.க இந்தத் தேர்தலில் சில தொகுதிகளில் வெற்றி பெற்று சட்டப்பேரவையில் நுழையும் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் தனித்துப் போட்டியிடும் பட்சத்தில் எத்தனை தொகுதிகளில் வெற்றி பெற முடியும் என்ற கேள்விக்கு பதில் இல்லை. ஆனால் எந்த விஷயத்தையுமே உணர்ச்சிபூர்வமாக அணுகும் வை.கோ தேர்தல் உடன்பாடு விஷயத்திலும் அப்படி நடந்து கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் தொகுதிப் பங்கீடு விஷயத்தில் தி.மு.க.வுடன் உறவு கெட்டுப்போய் நிற்கும் கட்சி ம.தி.மு.க மட்டுமல்ல. ஏற்கனவே தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும் இரண்டு வன்னிய இனத் தலைவர்களும் தி.மு.கவுடனான தங்கள் உறவை முறித்துக் கொண்டு விட்டார்கள். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு வரை கருணாநிதிக்குத் துதிபாடி, பாட்டாளி மக்கள் கட்சியையும் அதன் தலைவர் ராமதாசையும் மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து வந்தவர் வாழப்பாடி ராமமூர்த்தி. ஆனால் கட்சி ரீதியாக வாழப்பாடியாரின் பலம் என்ன என்பது கருணாநிதிக்குத் தெரியும். தன் எதிரியை விமர்சிக்கிறான் என்பதற்காக வாழப்பாடிக்கு தொகுதிகளை அள்ளி வழங்கி விடவில்லை அவர். ஒரே ஒரு தொகுதியை ஒதுக்க முன்வந்தார் கருணாநிதி. அவமானப் பட்டுப் போன வாழப்பாடியார் தற்போது எந் தக் கூட்டணியிலும் இல்லாமல் திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கிறார். மறுபடியும் ஜெய லலிதா பக்கம் அவர் போகலாம் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் அது உறுதி செய்யப்பட வில்லை.

அடுத்ததாக இன்னும் பேச்சுவார்த்தை அளவிலேயே நின்று கொண்டிருக்கும் கட்சி என்பது புதிய நீதிக் கட்சிதான். தமிழகத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த முதலி யார்களையும் பிள்ளைமார் இனத்தவரையும் பிரதிநிதிப் படுத்துவதாகக் கூறும் இக்கட்சி எதிர்பார்க்கும் இடங்களை ஒதுக்குவதில் தி.மு.க.வுக்கு சிக்கல் இருக்கிறது. தற்போது ம.தி.மு.க வெளியேறி விட்ட நிலையில் புதிய நீதிக் கட்சிக்கு போதுமான இடங்கள் கிடைக்கலாம். சனிக்கிழமை இது குறித்து கருணாநிதியிடம் கேட்டபோது கூட்டணியில் வந்து சேராததற்கு புதிய நீதிக்கட்சித்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றார். தாங்கள் வரவேற்கத் தயாராக இருந்தபோதும் புதிய நீதிக்கட்சித் தலை வர்கள் கூட்டணியில் சேரவில்லை என்றார். இது போலத்தான் முன்னாள் அமைச்சர் திரு நாவுக்கரசு தலைமையிலான எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவும், இக்கட்சியும் தொகுதிப் பங் கீடு விஷயத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக தி.மு.க கூட்டணியில் சேரமுடியவில்லை. தற்போது இந்த இரு கட்சிகளும் தி.மு.க கூட்டணிக்குத் திரும்ப வாய்ப்பிருக்கிறது.

இந்நிலையில் எல்லோரும் எழுப்பும் கேள்வி இதுதான். கருணாநிதி கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால் பிரச்சனையைத் தவிர்த்திருக்கலாம் அல்லவா என்பதுதான். விட்டுக்கொடுப்பது, கொடுக்காமல் போவது என்பதல்ல பிரச்சனை. பேச்சுவார்த்தையின் போது ம.தி.மு.க தலைவர்களும் தொண்டர் களும் நடந்து கொண்ட விஷயம்தான் தி.மு.க.வை பெருமளவு சங்கடத்தில் ஆழ்த் தியது என்று கூறப்படுகிறது. கருணாநிதி யைக் குறித்து மிகவும் தரக்குறைவாக ம.தி.மு.க தலைமை பேசியதாக கருணா நிதியே தன்னைச் சந்திக்க வந்த மற்றொரு கூட்டணிக் கட்சித் தலைவரிடம் வருத்தப்பட்டி ருக்கிறார்.

இப்பிரச்சனை ஒருபுறமிருக்க, தொகுதி கள் ஒதுக்கீடு விஷயத்தில் தி.மு.க வேறு கோணத்தில் சிந்தித்தது. குறைந்த பட்சம் 155 தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்பது அக்கட்சியின் விருப்பம். அதற்கும் குறைவாகப் போட்டியிட்டால் தனக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காமல் போய் விடும் என்று அக்கட்சி அஞ்சுகிறது. தனிப்பெரும் பான்மை இல்லாமல் போகும் பட்சத்தில் கூட்டணிக் கட்சிகள் தன்னை நிர்ப்பந்தித்து, அரசில் பங்கு கேட்கும் என்பது தி.மு.கவின் பயத்தின் அடிப்படையாகும். இதே பயம் அ.தி.மு.கவுக்கும் இருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

எப்படி இருப்பினும் ஒரு வலுவான ஒற்றுமையான கூட்டணி என்ற தோற்றத்தை தொடக்கத்தில் உருவாக்கிய தி.மு.க கூட் டணி, தற்போது அதை இழந்து விட்டது என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்ற னர். ம.தி.மு.க அக்கூட்டணியில் இருந்து விலகியது பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள் ளது என்பதில் சந்தேகம் இல்லை. தமிழகத் தில் அரசியல் கட்சிகள் என்ற போர்வையில் உலவும் சாதியக் கட்சிகள் போல ஒரு குறிப் பிட்ட பகுதியில் கனிசமாக வாக்குகளைப் பெறும் கட்சியாக இல்லாமல் ம.தி.மு.க இருக்கலாம். ஆனால் தமிழகம் முழுவதும் பரவலாக வாக்குகளை அக்கட்சியால் பெற முடியும். சட்டப்பேரவைத் தேர்தலைப் பொறுத்த வரை சுமார் 500 வாக்குகளே வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியும் என்பதால் ம.தி.மு.கவின் வெளியேற்றம் தி.மு.க.வின் வெற்றி தோல்வியை கட்டாயம் நிர்ணயிக்கும்.

**கண்ணன்**

ஏற்கனவே, தங்கள் கட்சியை அழிக்க சதி செய்வதாகக் கூறி, வன்னியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ், தி.மு.க கூட்டணியில் இருந்து வெளியேறி விட்டார். தி.மு.கவில் புதிதாகச் சேர்ந்த தலித்துக ளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விடுதலைச் சிறுத்தைகள், தி.மு.க இழந்து போன வன்னியர் வாக்கு வங்கியை சரி செய்ய முடியும் என்று நம்பப்படுகிறது. ஆனால் வாழப்பாடி ராமமூர்த்தி, வன்னி அடிகள், தமிழ் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் நீலன் ஆகியோரும் தி.மு.கவுடனான உறவை முறித்துக் கொண்டதால் ஒட்டுமொத்தமா கவே வன்னியருக்கு எதிரான கட்சி என்ற தோற்றத்தை தி.மு.க ஏற்படுத்திக்கொண்டி ருக்கிறது.

தமிழகத்தின் வட மாநிலங்களில் நிலமை இதுவென்றால் தென்மாவட்டங்களிலும் இதே நிலைமைதான். அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் பிரிக்க முடியாத உறவு ஏற்பட்ட காலத்தில் இருந்து தென் மாவட்டங்களில் செல்வாக்கு மிக்க சமுதாயமாக இருக்கும் தேவர் இனத்தவர்கள் அ.தி.மு.கவுடன் தங்களை அடையாளப் படுத்திக் கொண்டுள்ளனர். முழுக்க முழுக்க அ.தி.மு.கவுக்குத்தான் அவர்கள் வாக்களிப் பார்கள் என்று கூற முடியாவிட்டாலும் தேவர்கள் வாக்கு வங்கியும் அ.தி.மு.கவுக்கு சாதகமாகத்தான் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் வட மாவட்டங்க ளில் விடுதலைச் சிறுத்தைகளைப் போல், தென் மாவட்டங்களில் டாக்டர் கிருஷ்ணசாமி யின் தலைமையிலான புதிய தமிழகம் கட்சி யின் வாக்காளர்களான தலித்துகள் தி.மு.க பக்கம் இருக்கிறார்கள். இது தி.மு.க.வுக்கு பலம்தான் என்பதை மறுக்க முடியாது.

இது தவிர யாதவர்களை முன்னிலைப் படுத்தும் முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் தலைமையிலான மக்கள் தமிழ் தேசம் கட்சி யும் தி.மு.கவுடன் இருக்கிறது. ஆனால் இக்கட்சி எவ்வளவு தூரம் தி.மு.க.வுக்கு வாக்குகளைப் பெற்றுத் தரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். கண்ணப்பனைப் பொறுத்தவரை நிலக்கரி இறக்குமதி ஊழலில் நீதிமன்றத்தில் வழக் கைச் சந்தித்துக் கொண்டிருப்பவர். ஜெயலலி தாமீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வரும் தி.மு.க, கண்ணப்பனோடு எப்படி கூட் டணி வைத்துக் கொள்ள முடியும் என்று விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இன்றைய தமிழக அரசியலில் மிகப் பெரிய வெற்றியை பெற்றிருப்பவர்கள் அரசி யல் கட்சிகள் என்ற போர்வையில் உலாவரும் சாதிக் கட்சிகள்தான். மக்கள் தமிழ் தேசம் கட்சியின் தலைவரும் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சருமான கண்ணப்பன் கூட ஆறு தொகுதிகளை தி.மு.க.விடம் இருந்து பெற் றிருக்கிறார். இதனால் தி.மு.க. அமைச்சர் களில் ஒருவரான யாதவர் இனத்தைச் சேர்ந்த தமிழ்க்குடிமகன் போர்க்கொடி உயர்த்தியுள் ளார். ஏனெனில் கடந்த தேர்தலில் அவர் போட்டியிட்டு வென்ற இளையான்குடி தொகுதி, மக்கள் தமிழ் தேசம் கட்சிக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. அவர் அ.தி.மு.க.வில் சேர இருப்பதாக பரவிய செய்தியில் உண்மை இல்லாமல் இல்லை. ஒருவேளை அவர் அ.தி.மு.க. வில் சேர்ந்தால் தி.மு.க.வின் ஒட்டு மொத்த மரியாதையை அது பாதிக்கும். மறுப்பதற்கில்லை.

அ.தி.மு.க கூட்டணியில் இதை விட அதிகமான முரண்பாடுகளும் உரசல்களும் இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை . ஆனால் தமிழகத்தில் மட்டுமல்ல பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில்கூட ஒரு ஒன்றுபட்ட கூட்டணியை உருவாக்குவதில் அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய முடிவுக்குக் கட்டுப்பட்டுத்தான் அகில இந்தியக் கட்சியான காங்கிரஸ் செயல்பட்டு வருகிறது.

ஒன்று மட்டும் உண்மை. திடீரென ஏற் பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் தி.மு.க. வுக்குச் சாதகமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மே மாதம் 10-ம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக தற்போது நிலவும் கருத்து என்னவென்றால் தமிழகத்தில் எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்காது என்பதுதான். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் தமிழகத்தில் முதல் முறையாக கூட்டணி அரசு ஏற்படும். தி.மு.க., அ.தி.மு.க தவிர மற்ற எல்லாக் கட்சிகளும் இதைத்தான் எதிர்பார்க்கின்றன. களத்தில் பணியாற்றும் போது அதை கவனத்தில் கொண்டே அவர்கள் செயல்படலாம் என்ற கருத்துக் கூட நிலவுகிறது. அதைப் பொறுத்தி ருந்துதான் பார்க்க வேண்டும்.

## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

தலைப்பாக்கட்டி அரசியல் தான் அன்றுமுதல் இன்று வரை தமிழர் அரசியல் நிலை யாகிவிட்டது. அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி யைத்தான் அண்மையில் நடந்த அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்திலும் பார்த் தேன்.

ஒரு மனிதன் தன் சமூகத்திற்கும் இனத்திற்கும் செய்த பணியை நினைவு கூரல் என்பது நன்றியுணர்வுள்ள எவருக் குமே ஏற்றதொரு செயல்தான்.

ஆனால் அவரது செயலை நினைவு கூருவதாகக் கூறுபவர்கள், அவர்செய்த பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல தாம் முன்வராது, வெறுமனே அவர் பற்றிய புகழ்பாடுவதோடு, வீர வசனங்களைப் பேசி பார்வையாளரை உணர்ச்சிவசப்படுத்தி கைதட்டல் வாங்கு வதோடு, அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது எனக் கூறி தங்கள் இயலாத் தனத்தைப்பற்றி தாமே அங்கலாய்ப்பதும் தான் ஏற்றுக்கொள்ள முடியாதது.

அமரர் குமார் அவர்களின் தொழில் சார் நிலைப்பாடுபற்றி எவரும் விமர்சிக்க முடியாது. ஏனென்றால் ஒரு வக்கீலாக அவர் தம் சேவையை சிறப்பாக செய்த தோடு, தான் சார்ந்த சமுக இளைஞர் களுக்காகவும் தன் இலவச சேவையை வழங்கியவர். குறிப்பாக பயங்கரவாதத் தடை சட்டவழக்குகளில் அவர் செய்த பணியால் பயன்பெற்ற பல இளைஞர்கள் இன்றும் அவரை நன்றியோடு நினைவு கூர்வர். இனரீதியான முரண்பட்ட அறிக் கைகள் வந்தபோதெல்லாம், தான் ஒரு 'தமிழன்' என்ற அடிப்படையில் அதற் கான பதிலை சம்பந்தப்பட்டவர்களுக்கு காத்திரமாகவும், பகிரங்கமாகவும் மறு தலித்து வெளிப்படுத்தியவர். அதனால் பலரின் விசனத்திற்கும் பேரினவாதிகளின் விமர்சனத்திற்கும் உட்பட்டவர்.

ஆனால் அவரது அரசியல் நிலைப் பாடு பலவிதமான விமர்சனத்திற்கு உட் பட்டது.

தமிழர் அரசியல் தமிழ் காங்கிரஸ் என்றும் தமிழரசுக்கட்சி என்றும் இரு முகாங்களில் பிரிந்து இருந்ததால் இழந் தவை ஏராளம். அதனை காலம் கடந்தா வது உணர்ந்ததால் ஏற்பட்டது கூட்டணி; மக்கள் ஆணைவேண்டி 77ல் ஒரணியாக நின்றபோது தனிப்பட்ட காரணங்களால் காங்கிரஸ் வழிவந்த குமார் யாழ்ப்பாணத் தில் சுயேச்சையாக களம் இறங்கியது கனவு அல்ல; அது நிஜம்.

இணைந்த கட்சிகளால் உருவான கூட்டணியில் இருந்து தந்தை வழிவந்த கட்சி என காங்கிரசை தன் தலைமையில் சுவீகரித்துக் கொண்டதும் உண்மை. தனிநபர் முரண்பாடுகள் கட்சி முரண் பாடுகளானதும் யாவரும் அறிந்ததே.

உண்மை கசக்கும். ஆனால் மறுக்க முடியாது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பகி ரங்கமாக புறக்கோட்டை கூட்டத்தில் எதிர்த்து பேரணியில் போன சிறிமா அம்மையாருடன் தானும் சேர்ந்து தயா ரித்த பொதியை முன்வைத்து "தேர்தலின் பின் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கலாம், அதற்கு முன்னோடியாக சிறிமா அம்மை யாரை, 89 ஜனாதிபதி தேர்தலில் ஆதரியுங் கள்!" என புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச, அவர்கள் பொதியை பார்வையிடா மலேயே "தேர்தலின் பின் பார்ப்போம்; போய் வாருங்கள்!" என ஆதரவு தராமல் திருப்பி அனுப்பியதால் குழம்பியதும், கோபமடைந்ததும் நடந்த கதைதான்.

அப்போதெல்லாம் அவரைப் பற்றி பலவிதமாக விமர்சித்துத் திரிந்தவர்களே, அவரது அண்மைக்கால நடவடிக்கையின் பின்னர் அவரை 'ஒரு துணிந்த தமிழன்' என்றும், 'அஞ்சா நெஞ்சன்' என்றும், 'தமிழருக்காய் குரல் கொடுக்கும் பீரங்கி பேச்சாளன்' என்றும் தமது தலைப் பாக்கட்டி அரசியலை ஆரம்பித்தனர்.

முன்னாள் ஜனாதிபதியின் மரம், செடி கொடி பேச்சிற்கும், இன்றைய ஜனாதிபதியின் தென்னாபிரிக்கப் பேட்டிக் கும், TNL தொலைக்காட்சி விவாதத் திற்கும், செம்மணி விசாரணை முன் முயற்சி, சுவர்ணவாகினி நேர்காணல், யாழ்போக்குவரத்து பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழக்கு என 'தமிழன்' என்ற வகையில் தன்னை முன்னிலைப்படுத்தி வெளிப்படையாக அவர் செயல்பட்ட வுடன்தான் அவருக்கு கொடி, குடை, ஆலவட்டம் பிடிக்கப்பட்டது.

இதேபோல் தான் இனத்தின் மீதான அநீதிக்கெதிராக அமரர் அமிர்தலிங்கம் ஆரம்பமுதலே செயல்பட்டுவந்தார்.

ஆனால் அவர் பலி எடுக்கப்பட்டதும் துரோகியானார். தன் இனத்திற்காக தன்னை அர்ப்பணித்தபோது, அவருக்கு தலைப்பாக்கட்டியவர்களே அதே இனத் தின் விடுதலைப் போர் என்ற பெயரில், படுகொலை செய்யப்பட்டவர்களால் வழங் கப்பட்ட 'துரோகி' என்ற பட்டத்தையும் ஏற்றுக் கொண்டார்கள்.

**~குத்தியன்~**

தன்னை தமிழன் என்ற அடிப்படை யில் வெளிக்காட்டியதால், பேரினவாதி களால் படுகொலை செய்யப்பட்டதால் அமரர் குமார் 'மாமனிதர்' ஆனார். தலைப்பாக்கட்டிகள் இப்போது இன் னொரு தலையைத் தேடுகிறார்கள். அதைத்தான் அன்றைய அஞ்சலிக்கூட்டத் தில் பார்த்தேன்.

அமரர் குமார் பற்றிய சிந்தனை களையோ செயல்களையோ விமர்சிக்க முடியாது. அதற்கான தகுதி எனக்கு கிடை யாது. ஆனால் அவரது பணிகளை சிலா கித்தவர்கள், சிறிதளவேனும் அப்பணி களை "நாம் தொடர்வோம்" என சிறுவாய் மலர்ந்தருளியிருக்கலாமல்லவா?

"குமார் இருந்திருந்தால் அப்படிச் செய்திருப்பார்;" "குமார் இருந்திருந்தால் இப்படிச் செய்திருப்பார்", என புகழாரம் சூட்டியவர்கள் ஒன்றும் சாமானியர்கள் அல்ல. பத்திரிகைத் துறை ஜாம்பவான்கள், சட்டத்துறை விற்பன்னர்கள், அரசியல் வாதிகள், ஐ.நா.சபை முன்னாள் ஆலோச கர்கள் என பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

அரசியல்வாதிகளை விட்டுவிடுவோம். அவர்கள் அரசியல் விபத்தால் பதவிக்கு வருவார்கள், போவார்கள்.

ஆனால் இந்த மேதாவிகள், தமிழ் சமூகத்தின் புத்திஜீவிகள் கூட, தம்பணி ஆலோசனை சொல்வதும், ஆதங்கப்படு வதுமே தவிர செயல்படுவதல்ல, என் பதையே அன்று சொல்லாமல் சொல்லிப் போனார்கள்.

இந்தச் சீத்துவத்தில் இருக்கும் மாற் றுக் கட்சியினரை தரக்குறைவாக, ஆனால் நேரடியாக அன்றி மறைமுகமாக சாடி; சனத்தின் கைதட்டலைப்பெற்றதை பெரும் பேறாகக் கொண்ட கேவலத்தையும் பார்த் தேன். என் நினைவுகள் 70ம் ஆண்டுகளை நோக்கி பின்போனது. அன்றும் கொழும் பில் நாம் இவ்வாறான கூட்டங்களைப் பார்ப்போம். உணர்ச்சிகரமாகப் பேசு வார்கள். கைதட்டி ஆர்ப்பரிப்போம். இன்று அந்த அடலேறுகள் எல்லாம் எங்கே என்று எண்ணிப்பார்க்கின்றேன்.

அமரர் குமார் போட்ட பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு எதிரான வழக் கைக்கூட தொடர முடியாத இந்த அஞ் சலிக் கூட்டத்தின் மேதாவிகள், ஜாம்ப வான்கள், அறிவுஜீவிகள், ஆலோசகர்கள் அனைவரிடமும் கேட்க விரும்புவது ஒன்றே ஒன்றுதான். உங்கள் அறிவுகளை யும், புலமைகளையும் ஏன் குடத்தில் இட்ட விளக்காக வைத்திருக்கிறீர்கள்?

நீங்கள் தமிழர்கள் இல்லையா? அல் லது உங்களுக்கு உணர்ச்சி இல்லையா? அல்லது ஆளுமை இல்லையா?

எல்லாவிடயங்களிலும் கழுவிய மீனில் நழுவிய மீனாக நீங்கள் செயல்படுவதும், எவராவது ஒருவருக்கு தலைப்பாக்கட்டி அவரை பலிக்கடா ஆக்குவதும் தான் உங்கள் தொடர் செயலா?

உங்களைப்பாதுகாக்க, நீங்கள் ஒளித் துக் கொள்ள, நீங்கள் பயன்படுத்தும் உங் கள் மேதாவிலாச படிப்புகளும், பதவி களும், பூசிமெழுகும் உங்கள் பேச்சுக் களும்தான் தமிழினத்தின் தலைமைத்துவ வெற்றிடத்திற்கான காரணம் என்பதை நீங்கள் அறியாதவர்களா? ஒளித்துப் பிடித்து விளையாடும் உங்கள் செயல் களால் எதுக்கோ வாலாக அல்லாமல் இனத்திற்கு தலைமை தாங்க எப்போது நீங்கள் வெளிப்படுவீர்கள்?

## அலசுவது - இராஜதந்திரி

# கட்டுப்பாடற்ற சட்டம்-ஒழுங்கு

இலங்கை இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக நிறையவே எதிர்பாக்கப்பட்டு வருகின்ற இத்தருணத்தில் அப்பாவி வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்பென்பது தொடர்ந்து அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

அரசியல் உரிமைகளைப் பெறத் தவறிய வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள்மீது அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்பது ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

வேடுவனுக்கும், வேங்கைக்குமிடையே அகப்பட்ட ஒரு புள்ளிமானின் நிலையிலேயே வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் இருந்து வருகின்றனர்.

கடந்த இருபது வருடகாலமாக இடம் பெற்று வரும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில், எதுவுமறியாத அப்பாவித் தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்களே சொல்லொணாதவையாக இருக்கின்றன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களை எடுத்துநோக்கும்போது இரு வேறு பிரிவுகள் அப்பிரதேசங்களில் இருந்து வருகின்றன. இதில் ஒரு பிரிவு கட்டுப்பாடற்ற பிரதேசம் என்றழைக்கப்படுகின்றது. இங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நடமாட்டமே பெரிதும் காணப்படுவதுடன், அவர்களின் நெறிப்படுத்தலின் கீழேயே அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

மற்றய பிரிவு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்றழைக்கப்படுவதுடன் அரச படையினரின் நடவடிக்கைகளே இப் பிரதேசத்தில் பெரிதும் காணப்படுகின்றன.

எனவே வடக்கு, கிழக்கில் கட்டுப்பாடற்ற மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் என இரு வேறாக இருந்து வருகின்ற போதிலும் இவ்விரு தரப்பிலும் வாழுகின்ற அப்பாவிப்பொதுமக்கள் ஏறத்தாழ ஒரே விதமான இன்னல்களுக்கே முகங்கொடுத்தவர்களாக இருக்கின்றனர்.

உணவு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு போன்றவை அனைத்துமே வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பெருமளவிலான பாதிப்பை எதிர்நோக்கியவையாக இருக்கின்றன.

இதில் கட்டுப்பாடற்ற பகுதிகள் மிகமோசமான பாதிப்பையே எதிர்நோக்கியவையாக இருக்கின்றன.

உணவின்றி-போஷாக்குக்குன்றிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் யுத்தக் கெடிபிடி, வீடு வாசல்களைத் தரைமட்டமாக்கி மக்களை அகதிகளாக்கிவிட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் போதியளவு மருந்து வகைகள் காணப்படவில்லை. அத்துடன் தரமான வைத்தியர்களும் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பணியாற்றத் தயக்கம் காட்டியோராகவே இருக்கின்றனர்.

கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள், மற்றும் படைத்தரப்பினருக்கிடையே நிலவி வருகின்ற கெடுபிடி, ஒரு பெரும் இடைஞ்சலாகவே இருக்கின்றது.

இதேவேளை கட்டுப்பாட்டிலுள்ள பகுதி என்று அரசாங்கத்தின் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசம் அழைக்கப்படுகின்ற போதிலும் அங்குள்ள அப்பாவிப் பொதுமக்கள் ஏராளமான பிரச்சனைகளை எதிர்நோக்கியவர்களாகவே இருக்கின்றனர்.

அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் பெருமளவு நெருக்கடிகளை சந்தித்துவருதோடு, பெரும்பாலான மக்கள் அடிப்படை வசதிகளைப் பெறுவதில் பெருஞ் சிக்கல்களை எதிர்நோக்கியோராகவே இருக்கின்றனர்.

இதுதவிர அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படைத்தரப்பினரால் ஏற்பட்டுவரும் பிரச்சனைகளும் அப்பாவிப் பொது மக்களிடையே அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியவையாகவே இருக்கின்றன.

கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்று வரையறை செய்யப்பட்டுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற மக்களின் எண்ணிக்கை, கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருப்பதைவிடக் கூடுதலாகவே இருக்கின்றது.

ஒரு நிம்மதியான வாழ்க்கையைத் தேடியும் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு விரைவில் ஒரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையிலுமே கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மக்கள் இருந்து வருகின்றனர்.

வெறுமனே தமது அத்தியாவசியத் தேவைகள் மட்டும், பூர்த்தி செய்யப்பட வேண்டுமென கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்கள் எதிர்பார்க்கவில்லை. தாம் மீளவும் கௌரவமான முறையில் தமது சொந்தப் பிரதேசங்களில், சொந்த வீடுவாசல்களில் பாதுகாப்பாக வாழவேண்டுமென்பதையே அம்மக்கள் தமது பிரார்த்தனையாகவும் கொண்டுள்ளனர்.

ஆனால் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை பகுதி என்ற பகுதிகளில் சட்டம்,ஒழுங்கு என்பவை எவ்வளவு தூரம் கட்டுப்பாடான முறையில் இருந்து வருகின்றதென்பதே முக்கிய வினாவாக இருக்கின்றது.

1995ம் ஆண்டில் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம் பெற்ற 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை அப்பாவிப் பொது மக்களின் எதிர்பார்ப்பை நாடி பிடித்தறியச் செய்வதாகவே அமைந்திருந்தது.

யாழ்குடாநாட்டில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை முடுக்கி விடப்பட்டபோது, தமது உயிரைக் கையில் பிடித்தவர்களாக இலட்சக்கணக்கான அப்பாவி யாழ்ப்பாண மக்கள் தென்மராட்சிப் பிரதேசத்தினுள் தஞ்சம் புகுந்திருந்தனர்.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள் ஆயுதப்படையினர் நிலை கொள்ள ஆரம்பித்ததையடுத்து தென்மராட்சியில் தஞ்சம் புகுந்த மக்கள் சாரை, சாரையாக மீளவும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

இதன்மூலம் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் என்ற வரையறைக்குள் அமைதியாக வாழமுடியும்; அத்துடன் காலப்போக்கில் ஒரு கௌரவமான அரசியல் தீர்வைக் கூடப் பெறமுடியும் என்றே சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையையடுத்து மீளவும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய மக்கள் கருதினர்.

ஆனால் அந்த அப்பாவி மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிர் மாறான விதத்திலேயே பல்வேறு வடிவிலும் இன்னல்கள் யாழ்குடாநாட்டில் தோன்றியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாயார் ஆகியோர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்தனர்.

இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் பகுதியில் ராஜினி என்ற மற்றுமொரு பாடசாலை மாணவியும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவங்கள் அமைதியாகவும், பாதுகாப்புடனும் வாழலாமென்ற எண்ணிய வடபகுதி மக்களின் எதிர்பார்ப்பைச் சிதறடிப்பதாகவே இருந்தன.

இவற்றையடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயிருந்தனர். விசாரணைகளுக்கென அழைத்துச் செல்லப்பட்ட நிலையிலேயே நூற்றுக்கணக்கானவர்களுக்கு என்ன நேர்ந்ததென்று தெரியாமல் போயிருந்தது.

இவ்வாறு காணாமல் போனவர்கள் பற்றிய மர்மத்தைத்துலக்குவதாகவே யாழ்ப்பாணத்தின் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் பல கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை கிழக்கில் கூட கோணேஸ்வரி என்ற பெண்மணி ஒருவர் மிக மூர்க்கமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவற்றையடுத்து கடந்த ஆண்டில் வடக்கே புங்குடுதீவுப்பகுதியில் சாரதாம்பாள் என்ற பிராமணப் பெண் கடற்படையினர் சிலரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட நிலையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

ஒரு பெண் குழந்தைக்குத் தாயான சாரதாம்பாளின் இக்கொடூரக் கொலை யாழ்ப்பாணப்பகுதி மக்களைப் பெரிதும் உலுப்பி விடுவதாகவே இருந்தது.

இது இவ்வாறிருக்க கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் பண்டாரவளையிலுள்ள பிந்துனுவெவ புனர்வாழ்வு மையத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் இருபதுக்குமதிகமானோர் மிகமூர்க்கத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

எனவே அப்பாவித் தமிழ் மக்கள்மீதான வன்முறைகள், அடாவடித்தனங்களின் தொடர்ச்சியாகவே மன்னார் உப்புக்குளம் பகுதியில் இரு இளம் பெண்கள் மூர்க்கத்தனமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவமும் விளங்குகின்றது.

சிவமணி, விஜிகலா என்ற அவ்விருவரும் திருமணமான பெண்கள். மன்னார் உப்புக்குளம் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயத்திலேயே இப்பெண்கள் இருவரும் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களினால் விசாரணை என்றழைத்துச் செல்லப்பட்டு வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு பெண்களும் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்தே மன்னார் பகுதிக்கு வந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் எனத் தெரிவிக்கப்படும் மன்னார் உட்புக்குளம் பகுதியில் இந்த அப்பாவிப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்டுள்ள பலாத்காரம், சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டியவர்களிடையே குடிகொண்டிருக்கும் மிருகத்தனத்தை வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.



இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், அவரது பரிவாரத்தினரும் அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணஞ் செய்திருந்தனர்.

அப்போது ஜனாதிபதி சந்திரிகா இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதில் கவனஞ் செலுத்தியிருந்தார்.

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் பெரிதும் பாதுகாக்கப்படுவதாகவும், சாதாரண மக்களின் பாதுகாப்பு நல்ல முறையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவுமே ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால் மன்னார் உப்புக் குளத்தில் சிவமணி, விஜிகலா என்ற இரு பெண்கள்மீதும் நடத்தப்பட்டுள்ள கொடுமைகள், நிச்சயம் மனிதர்களாலல்ல. மிருகங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையே எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

எதுவுமறியாத அப்பாவிப்பொது மக்கள், நீடித்துச் செல்லும் வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாகச் சந்தித்துள்ள இழப்புக்கள், அவலங்கள் என்பவை எண்ணிலடங்காதவையாகும்.

'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'போன்றே பல்வேறு அவலங்களுக்குமுள்ளான மக்கள்மீது, மிருகத்தனமான முறையில் வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஒரு யுத்தமாக வெடித்து அந்த யுத்தம் ஒரு மூர்க்கத்தனமான கட்டத்தை எட்டியிருப்பதற்கு அரசியல் ரீதியான பிரச்சனைகள் மட்டுமல்ல; அப்பாவித் தமிழ் மக்கள்மீது காலத்துக்குக் காலம் பிரயோகிக்கப்பட்டுவந்த அடாவடித்தனங்களும், அட்டூழியங்களும் கூட யுத்தம் மூண்டமைக்கான முக்கிய காரணங்களாகவே இருக்கின்றன.

சர்வதேச கவனத்தை இலங்கை இனப்பிரச்சனை தற்போது ஈர்த்துள்ள நிலையில், அரச தரப்பின்மீது வெறுப்பையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துவதாகவே மன்னார் உப்புக்குளத்தில் இடம்பெற்ற சம்பவம் விளங்குகின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக பரஸ்பர நம்பிக்கை, புரிந்துணர்வு, கருத்தொருமிப்பு என்பவை கட்டியெழுப்பப்படவேண்டிய இத்தருணத்தில், மன்னார் உப்புக் குளத்தில் நடந்தது போன்ற சம்பவங்கள் கசப்புணர்வுகளைத் தோற்றுவிப்பவையாகவே இருக்கும்.

தனிமனித சுதந்திரம், பாதுகாப்பு என்பவை உறுதிப்படுத்தப்படாத நிலையில் ஆரோக்கியமான அரசியல் தீர்வுகளை எட்டமுடியும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஒவ்வொரு தனிநபரினதும் அடிப்படை மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் என்பவை கௌரவமான முறையில் உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே ஆக்கபூர்வமான முறையில் நிரந்தரமான தீர்வுகளை நோக்கிச் செல்ல முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**முதலீட்டுச்சபைக்கு** முன்னர் பொறுப்பாக இருந்தவரின் குட்டுக்கள் இப்போதுதான் அம்பலமாகத் தொடங்கியுள்ளன. படுநேர்மையான அதிகாரி போன்று சகல தரப்பினரதும் நன்மதிப்போடு காலம் கடத்தியவர் கடைசியில் அகப்பட்டுப்போனார். 'தொழிற்சாலை திறக்க அனுமதி வேண்டுமென்றால் ஐம்பதாயிரம் டாலர் சுவிஸ் வங்கிக்கு போக வேண்டும்' என்று வர்த்தகர் ஒருவருக்கு கையெழுத்திலேயே கடிதம் எழுதியிருக்கிறார். அந்த வர்த்தகர் சுவிஸ் வங்கிக்கு பணம் அனுப்பவில்லை, கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு. தள்ளாடிப் போனாராம் அந்தத் தில்லானாப் பேர்வழி!

**இதுவும் ஒரு** பெருந்தலைவரின் கைவரிசைதான்... அதிகாரத்தில் உள்ளவர்கள் ஊழல் பேர்வழிகளாக இருப்பது ஒன்றும் புதிய செய்தியல்ல; ஆனால்... வங்கிகளில் கொள்ளையிட்டதாக கேள்விப்பட்டிருக்கிறீர்களா..? கம்பஹா மாவட்டத்தின் மஹர தொகுதியில் அவர் பெரும்புள்ளி. முன்னர் சிவப்புப் புரட்சிக்காரர்களோடு சேர்ந்திருந்து பின்னர் அதிகாரத் தரப்போடு இணைந்து கொண்டவர். அன்னாரை பாதுகாக்க அரசு கொடுத்த ஆயுதத்தின் உதவியுடன்தான் பிரதேசத்தில் பல வங்கிக்கொள்ளைகள் நடந்துள்ளனவாம். வாழ்க முன்மாதிரி!

**அண்மையில் தந்தை** செல்வாவுக்கு விழா எடுத்தார்கள். "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னாரே சொன்னார். கடவுளால்கூட காப்பாற்ற முடியாத நிலைக்கு அந்த மக்கள் ஆளாகிக் கொண்டிருப்பது தெரிந்தால் அடுத்த ஜென்மம் முழுக்க துக்கம்தான் கொண்டாடவேண்டிவரும். அது போகட்டும்... அந்த மனுசனின் நல்ல நேரம் நேரகாலத்தோடு போய்ச்சேர்ந்துவிட்டார்... இன்று வரை இருந்திருந்தால் "துரோகி" என்று பட்டம் சூட்டி மண்டையில் போட்டிருந்தாலும் போட்டிருப்பார்கள், அன்னாருக்குப் பின்னால் வந்தவருக்கு நடந்தது போல வென்கிறது பட்சி!

**மின்சாரத்தை** சிக்கனமாக்கும்படி அம்மணி கட்டளையிட்டிருக்கிறார். பாராளுமன்றத்துக்கு போகும் பாதையோர மைதானங்களில் ஆயிரம் விளக்கு அலங்காரங்களோடு "காணி வேல்" நடக்குது. யார் கண்ணில்பட்டது..?

**குருணாகலை நகரில்** சக்தி வாய்ந்த சங்கீத குண்டொன்று வெடித்திருக்கிறது. கிராமப்புற இளைஞர்களின் கைவரிசை என்கிறார்கள்! குண்டு வைத்து சனத்தைக் கொன்று குவிக்கும் கலையில் தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்திருக்கிறார்கள். குழுச்சண்டையின் பிரதிபலிப்பாம். போகிற போக்கில் கிட்டிவிளையாட்டில் தகராறு வந்தாலும் குண்டு வெடிக்கும் காலத்துக்குத்தான் சென்று கொண்டிருக்கிறது நாடு. முன்னேற்றம்தான்!

**கிரிக்கெட் கட்டுப்பாட்டுக்காரரை** கடைசியில் சந்தி சிரிக்க வைத்து விட்டார் அதிகாரத்தரப்பார். தலைவரை தெரிவு செய்யும் அடுத்த தேர்தல் ஒரு உள்நாட்டு யுத்தமாக உருவெடுப்பதை தவிர்க்கவே அப்படி செய்ததாக வெளியில் சொன்னாலும் உள்ளுக்குள் வேறு பல மனக்கசப்புக்களும் உண்டாம்! விளையாட்டிலும் வினைதானா?

## உண்மைத் தொடர் 02

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்

தாயாரின் மரணத்தோடு இனிமேல் தன்னை 'கேட்கப் பார்க்க' யாருமில்லை என்ற நிலைக்கு ஆளாகிவிட்ட ஹிட்லருக்கு தந்தை சேர்த்து வைத்த சொத்துக்கள் கொஞ்சம் மீதமிருந்தது. ஜெர்மனியில் என்றால் சாதாரண ஒரு நடுத்தர வகுப்பு குடும்பத்தைச் சேர்ந்த இளைஞனாக வாழப்போதுமான அளவு பணம் அவனுக்குக் கிடைத்தது. பணம்சம்பாதிப்பது எத்தனை சிரமமான காரியம் என்பதை ஹிட்லர் நன்குணர்ந்திருந்தான். ஆயுளின் பெரும் பகுதியை ஒரு சிரேஷ்டசுங்க அதிகாரியாக செலவு செய்திருந்தபோதும், தனது தந்தையால் ஒரு பெரும் செல்வந்தனாக வரமுடியாமல் போனதிலிருந்து பொருளீட்டுதலின் சிரமம் குறித்து அவன் உணர்ந்து வைத்திருந்தான். எனவே கையிலிருக்கும் பணம் வீணே செலவழிந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தது மாத்திரமன்றி, பொருளாதாரம் குறித்து எச்சரிக்கை உணர்வு மிக்கவனாகவும் நடந்து கொண்டான். தன்னை வறுமை பலவீனப்படுத்தி விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தாலும், தானொரு செல்வந்தனாக வளர வேண்டும் என்பதிலெல்லாம் அவனுக்கு பெரும் ஆர்வமிருக்கவில்லை.

லின்ஸ் நகர பாடசாலைக்கு தினமும் போய்வருவது ஹிட்லருக்கு அலுத்துப் போனது. தனக்கு மாறுதல் தேவை என்று உணர்ந்தான். ஆஸ்திரிய நாட்டின் தலைநகரமான வியன்னாவுக்குச் சென்று கல்வி கற்பதென்று தீர்மானித்தான். ஆனால் தனது சொந்த மண்ணைவிட்டு வெளியேறிச் செல்வதை எண்ணும்போது அவனுக்கு ஒரு சலிப்பு ஏற்பட்டது. என்றாலும் லின்ஸ்சில் தனிமையில் வாடுவதை விடவும் வியன்னா சென்று படித்துக் கொண்டே வேறேதும் தொழில் செய்து காலத்தை ஒட்டுவது என்ற முடிவுக்கு வந்தான்.

வியன்னா சென்றடைந்த ஹிட்லர் அங்குள்ள பிரபலமான நுண்கலைக்கல்லூரியில் இணைவதற்காக விண்ணப்பித்தான். கட்டடக்கலையில் பயில வேண்டும் என்று அவன் திட்டமிட்டிருந்தான். அந்தக் கல்லூரி பல சர்வதேச புகழ்பெற்ற கட்டடக் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியது என்பதால் அதில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டி மிகவும் தீவிரமாக இருந்தது. கல்லூரி நிருவாகம் ஹிட்லர் ஒரு பெரும் திறமைசாலி என்ற எதிர்பார்ப்போடு அவனையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்தது. ஆனால் அங்கு கேட்கப்பட்ட எந்தக் கேள்விக்கும் அவன் சரியாக பதிலளிக்கவில்லை. கல்லூரி ஹிட்லரை நிராகரித்தது. 1907ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த சம்பவத்தை அடுத்து பாடசாலை ஒன்றில் சேர்ந்து முழுநேரமாணவனாக ஏதேனும் ஒரு துறையில் பயில வேண்டும் என்று அவனுக்குள் இருந்த கொஞ்சநஞ்ச ஆர்வமும் மெதுவாக வற்றிப்போக ஆரம்பித்தது.

வீட்டிலிருந்து கொண்டு வந்த பணத்தின் துணையுடன் வியன்னாவில் உயர்ந்த தரத்திலான ஹாஸ்டல் ஒன்றில் இடம் தேடிக் கொண்ட ஹிட்லர் சிறு சிறு வியாபாரங்களை செய்து கொண்டு காலம் கடத்தினான். 'போனால் போகுது' 'மீண்டும் ஒரு முயற்சி' என்ற சிந்தனையோடு அடுத்த ஆண்டும் அதே கலைக்கல்லூரிக்கு ஹிட்லர் விண்ணப்பஞ் செய்தான்.

நேர்முகப் பரீட்சைக்கான நாள் வந்தது. அழகாக உடுத்திக்கொண்டு, ஒரு மாணவனுக்கான தோற்றத்தை செயற்கையாக வரவழைத்துக் கொண்டு கல்லூரி அதிகாரிகள் முன்னால் போய் அமர்ந்தான். ஏற்கனவே மொழிப்பரீட்சை ஒன்றுக்கு ஹிட்லர் தோற்றியிருந்தான். அதன் பெறுபேறுகள் அடங்கிய ஃபைல் மேசைமேல் இருந்தது. அதிகாரிகள் ஆளாளுக்கு கேள்வி கேட்டார்கள். கட்டடக்கலை தொடர்பாக பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஒன்றுக்கும் ஹிட்லரிடமிருந்து பதிலில்லை. இந்த அதிகாரிகள் ஏற்கனவே தயாரித்துக் கொண்டுவந்த கேள்விகளை வைத்து தன்னை முட்டாளாக்குவதை நினைத்தால் ஹிட்லருக்கு எரிச்சலாக இருந்தது. ஒரு மாணவருக்கு ஒரே கல்வித் துறைக்காக இரண்டு தடவைகளுக்கு மேல் விண்ணப்பிக்க முடியாது என்பது அந்த கல்லூரியின் விதிமுறை. அதனால் இம்முறையும் தான் நிராகரிக்கப்பட்டால் கட்டடக் கலைஞராகும் கனவை முற்றிலும் களைத்துவிட வேண்டிய நிலையில் ஹிட்லர் இருந்தான்.

முடிவும் அப்படியேதான் இருந்தது. 1908ஆம் ஆண்டும் ஹிட்லரை ஒரு மாணவனாக அங்கீகரிக்க அந்த கல்லூரி மறுத்து விட்டது.

இந்த தீர்மானம் அவனுக்கு ஒரு பெரும் தலையிடியைக் கொடுத்தது. சொந்த ஊருக்கு திரும்பிப் போவதா தொடர்ந்தும் வியன்னாவிலேயே தங்கியிருப்பதா என்ற மனப் போராட்டம் ஹிட்லரை பீடித்துக் கொண்டது. லின்ஸ்சில் தான் ஏற்கனவே படித்த பாடசாலையை விட்டு விலகி உயர் கல்வி பயில வேறு நாட்டுக்கு செல்வதாக புறப்பட்டு அங்கு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று சொல்லி எவ்வாறு மீண்டும் ஊர் திரும்புவது என்ற சிக்கல் ஹிட்லருக்கு இருந்தது. உடனடியாக ஜெர்மனிக்கு திரும்பிச் செல்வதில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

வியன்னாவில் ஒரு நல்ல தொழிலை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பல கட்டடங்களின் வாசற்படிகளை ஏறி இறங்கிய போதுதான் தன்னைப்போலவே கல்லூரி அனுமதி கிடைக்காமல் வெளியிடங்களில் இருந்து வந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வியன்னா நகரில் தொழிலுக்கு அலைவது ஹிட்லருக்குப் புரிந்தது.

ஏதேனும் ஒரு சுயதொழில் செய்ய வேண்டும் என்று ஹிட்லர் நினைத்தான். ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் முக்கிய நிலையமாக வியன்னா விளங்கியதால் அதனுடன் தொடர்புடைய தொழிலொன்றை செய்து வயிற்றுப் பிழைப்பை சமாளிப்பது என்ற முடிவுக்கு வந்தான்.

முதலில் 'வாட்டக்கலர்' என்ற வர்ணக் கரைசல்களை சுற்றுலா பயணிகளுக்கு விற்று வாழ்க்கை நடத்தினான். ஆனால் அந்த தொழில் நெடுகாலம் சரிப்பட்டுவராது என்று எண்ணி சிறிது காலத்திலேயே அதனை கைவிட்டான். பின்னர் வேறு சில உள்ளூர் உற்பத்திகளை வெளிநாட்டவர்களுக்கு விற்றுப் பார்த்தான். அதுவும் நிலைக்கவில்லை. மாதாமாதம் தொழிலை மாற்றிக் கொண்டிருப்பது ஹிட்லருக்கு கஷ்டமாக இருந்தது. அதைவிட தனிமை அவனை மிகவும் சிரமப்படுத்தியது. குறிப்பிட்டுக் கூறும் அளவு நெருங்கிப் பழகக்கூடிய நண்பர்கள் எவரும் இந்த காலகட்டத்தில் ஹிட்லருக்கு இருக்க வில்லை.

இவ்வாறான நிலையில் சுற்றுலா பயணிகளுக்கு கம்பளியினாலான குளிர்கால ஆடைகளை விற்கும் போது ஹிட்லருக்கும் ஜெர்மன் நாட்டு யுவதி ஒருவருக்கும் இடையில் நட்பு ஏற்பட்டது. லிண்டா என்ற அந்த யுவதியின் குடும்பம் வியன்னா நகர எல்லையில் உள்ள ஃபைன் மரத்தோட்டம் ஒன்றில் வசித்து வந்தது. ஹிட்லர் தொழில் நிமித்தம் அது வழியாக காலையும் மாலையும் போய்வந்தான். வியன்னாவில் தான் அனுபவிக்கும் தனிமையின் கொடுமைக்கு அழகிய லிண்டா ஒரு ஆறுதலாக இருப்பதாக ஹிட்லர் உணர ஆரம்பித்தான். அதனால் ஏதேனும் ஒரு காரணத்தை சொல்லி லிண்டாவை சந்திப்பதும் அவனது நாளாந்த செயற்பாடுகளின் ஓர் அங்கமாக மாறி விட்டது.

லிண்டா வெள்ளையாக இருப்பாள் என்பதை சொல்ல வேண்டியதில்லை. செர்ரிப் பழங்களைப் போல் சிவந்த உதடுகள். செல்வச் செழிப்பில் வளர்ந்ததற்கு சாட்சியம் கூறும் உடம்பு. தனது 18 ஆவது வயதை தாண்டிக் கொண்டிருந்தான் ஹிட்லர்.



லிண்டாவின் நட்பு இதயத்துக்கு இதமாக இருந்தது. இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். தான் ஜெர்மனியில் இருந்து வந்த கதையையும், இரு தடவைகள் தனக்கு கல்லூரி அனுமதி மறுக்கப்பட்டதையும் லிண்டாவிடம் சொல்லி கவலைப்பட்டான் ஹிட்லர். தனக்கு கல்வி மேல் இருந்த ஆசை போய் விட்டதாக அவன் சொன்னான். அவள் ஆறுதல் சொன்னாள்.

ஐரோப்பா முழுவதிலும் இருந்து வந்துள்ள குடியேற்றவாசிகளால் நிரம்பியிருந்த வியன்னாவின் வாழ்க்கை முறையில் ஹிட்லர் அறியாத பல விடயங்களை லிண்டா அவனுக்கு சொல்லிக் கொடுத்தாள். அந்த நகரத்தில் பலஹீனமானவர்கள் எப்படி மேலும் மேலும் பலவீனமாக்கப்படுகிறார்கள் என்பதையும், பலசாலிகள் எவ்வாறு தங்களை உறுதி செய்து கொள்கிறார்கள் என்பதையும் ஹிட்லர் உணர ஆரம்பித்தான்.

வியன்னாவின் குடிசனப் பரம்பல் குறித்து ஹிட்லர் சில விடயங்களை புரிந்து கொண்டான். அங்கு யூதர்களின் ஆதிக்கம் தொடர்பாக அவனது சிந்தனை சென்றது. அவனுக்குள் உறங்கிக்கிடந்த தேசியவாத சிந்தனை அந்நிய தேசமொன்றில் முளைவிடத் தொடங்கியது.

**வருவான்...**

**ஷானு**

## பெண்களுக்கு ஓரிரவுச் சுதந்திரம்



மேலை நாடுகளில் தலைவிரித்தாடும் ஆணாதிக்கம் எந்த அளவில் இருக்கிறது என்பதற்கு இச்சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

வட அமெரிக்காவில் உள்ள கொலம்பியா நாட்டில் உள்ள பொகாடோ நகரில் இன்றும் கூட பெண்கள் அடிமைகளாக மிதிக்கப்படுகிறார்கள். மாலை நேரமாகி விட்டால் பெண்கள் வீட்டிற்குள் முடங்கி விட வேண்டும்.

அதை மீறி எந்தப் பெண்ணாவது வெளியே நடமாடினால், அவளின் கணவன் பின்னி எடுத்து விடுவான். யாருக்கும் இந்த அநீதியைத் தட்டிக் கேட்கும் துணிவு இருக்கவில்லை.

பொகாடோ நகர மேயர் ஒருநாள் இரவு மட்டும் அந்நகரப் பெண்களுக்கு பரிபூரண சுதந்திரம் கொடுத்து விட்டார். பெண்களைத் தவிர வேறு எந்தவொரு ஆணும் அன்றைய இரவு வெளியே நடமாடக்கூடாது என்று ஊரடங்குச் சட்டமும் போட்டு விட்டார்.

வீட்டை விட்டு வெளியே வராமல் பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டு ரீ.வி.பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கடுமையாகச் சொல்லப்பட்டது.

அந்த ஓரிரவுச் சுதந்திரத்தை நகர வீதிகளில் அமர்க்களமாகக் கொண்டாடினார்கள் அத்தனை பெண்களும். ஆடல், பாடல், உற்சாகத் துள்ளல், விருந்துகள், கார்ப்பயணம், சைக்கிள் சவாரி என்று அந்நகர் முழுவதும் திருவிழாக் கொண்டாட்டமே நடத்தி விட்டார்கள்.

சண்ட்ரா மொனினோ என்ற 25 வயது இளம்பெண் கொடுத்த ஆனந்த வாக்குமூலம் இது:

"அப்பாடா அந்த ஆள் (கணவனைத் தான் இப்படிக் குறிப்பிடுகிறார்) இல்லாமல் சுதந்திரமாக நடமாடுவது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? அவருடைய முதுகுப் பக்கம்கூட நின்று பேச முடியாது."

இப்படி மொனினோ கூற, இன்னொரு பெண்ணோ வீட்டை விட்டு வெளியே வர மறுத்து,

இன்றிரவு ஆனந்தமாக வெளியே சுற்றலாம். நாளை மறுபடி வீட்டுக்குள் வந்து விட்டால் புருஷனிடம் அடிவாங்குவது நான் தானே! அதனால் எனக்கு இந்தச் சுதந்திரம் வேண்டாம்" என்று கூறி அறைக்குள்ளே அடங்கி விட்டாள்.

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் இப்படி நடக்கிறதா? என்று நம்ப முடியாமல் இருக்கிறல்லவா?

## தவறான மருந்தால் கரடி முகமாகிய பெண்

ஹொங்கொங் மருத்துவர் ஒருவர் கொடுத்த தவறான மருந்தால் இளம் பெண் ஒருவரின் முகம் முழுவதும் முடி முளைத்துக் 'கரடி'.போல ஆகி விட்டது. இதனால் அந்த மருத்துவர், மருத்துவ சிகிச்சை அளிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறார்.

தவறான மருத்துவத்தால் 'கரடி' முகமாக மாறி இருக்கும் பெண்ணின் பெயர் ஹங். வயது-20. இப் பெண்ணின் முகத்தை அகோரமாக்கிய மருத்துவரின் பெயர் ஜுயாட் மிங்.

ஹங் நீண்ட நாட்களாக மூக்கு அழற்சியினால் பாதிக்கப்பட்டிருந்தார். அடிக்கடி தடிமன் வந்து அவரைத் தொல்லைப் படுத்த, தொண்டை-காது-மூக்கு ஸ்பெஷலிஸ்ட்டான டாக்டர் மிங்கிடம் சென்றார்.

மிங்கும் ஹங்கைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு 'ஸ்டெரோய்ட்' என்ற மருந்தை வாங்கி உட்கொள்ளும்படி கூறினார். இதனால் ஏற்படும் பக்க விளைவுகள் பற்றி அவர் ஹங்கிடம் எதுவும் கூறவில்லை.

ஹங்கும் தினமும் இரண்டு தடவைகள் இந்த மருந்தைக் குடித்து வந்தார். இந்த மருந்தை உட்கொண்டு ஒரு மாதம் ஆவதற்குள் இது தனது வேலையைக்காட்ட ஆரம்பித்துவிட்டது.

ஹங்கின் முகத்தில் மெல்ல மெல்ல முடிகள் முளைத்துவிட, பயந்து போனார். நாளாக நாளாக முடி அதிகமாக வளர்ந்து விட்டது. இதற்குக் காரணம் என்னவென்று ஹங் மூளையைக் கசக்கி, டாக்டர் மிங் கொடுத்த மருந்துதான் பின்விளைவை ஏற்படுத்தி விட்டது என நினைத்து வேறு ஒரு மருத்துவரிடம் சென்றார்.

அவர் ஹங்கைப் பரிசோதித்து விட்டு டாக்டர் மிங் கொடுத்த மருந்துதான் இதற்குக் காரணம் என்று கூறிவிட்டார். டாக்டர் மிங்தான் தன்னைக் 'கரடி' முகமாக்கி விட்டார் என்று கோபப்பட்டு ஹொங்கொங் மருத்துவக்குழுத் தலைவரைச் சந்தித்து, புகார் செய்தார் ஹங்.

ஹொங்கொங் மருத்துவக் குழுத் தலைவர் அதிரடிச் சோதனை நடத்தி, தவறான மருந்தைப்பரிசீலனை செய்த டாக்டர் மிங்கின் லைசென்ஸை பறிமுதல் செய்து, ஒரு வருடம் சிகிச்சை அளிப்பதற்குத்தடை விதித்துள்ளார்.

## நரகத்தில் கருகும் மொட்டுக்கள்



பங்களாதேஷ் என்றால் அதிக வெள்ளப்பெருக்கால் அடிக்கடி அல்லல்படும் நாடு என்பது பலரது மனக்கண்ணின் முன்னால் வரும். போதிய வாழ்க்கை வசதியின்மை, அதிக மக்கள் தொகை இப்படிப் பல பிரச்சனைகள் இங்கு. இதைப் போல் பல வளர்முக நாடுகளில் பிரச்சனைகள் இல்லாமல் இல்லை.

இருப்பினும் 5 வயது முதலான இளம் மொட்டுக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டு, விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு இளம் வயதிலேயே நோய்களுக்குள்ளாகிக் கருகிப்போகும் கொடுமைகள் இந்நாட்டைப் போல் வேறு நாடுகளில் இல்லையென்றே சொல்லலாம்.

பங்களாதேஷில் டோலோடியா என்ற இடத்தில் உள்ள ஆற்றங்கரை யோரமாக இருக்கும் சிறுகிராமம் ஒன்றி லேயே இந்தக் கொடுமைகள் நடக்கின்றன.

இந்தக் கிராமத்தில் 700க்கும் மேற்பட்ட சின்னஞ்சிறு மொட்டுக்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு சின்னாபின்னமாக்கப்படுகிறார்கள். இவர்களை இப்படி அடக்கி ஆண்டு அடிமைகளாக வைத்திருப்பவர்கள் அவ்வூரைச் சேர்ந்த தாதாக்கள் சிலர்.

சிறுவயது முதல் இந்த இடத்திற்கு அழைத்து வரப்படும் இச் சிறுமிகளுக்கு வயதுக்கு மீறிய வளர்ச்சி அடைய ஹோர்மோன் ஊக்கி மாத்திரைகள், ஊசிகள் போடப்படுகின்றன.


ஆனால் நாளடைவில் இவை இவர்களது உடலில் பல பக்க விளைவுளை ஏற்படுத்துகின்றன. வாந்தி, மயக்கம், பசியின்மை போன்றவை ஏற்படும். போதிய உணவின்மை, இடையறாத பாலியல் வன்முறைகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு இவர்கள் இளம் வயதிலேயே நோய் வாய்ப்பட்டு இறக்கின்றனர்.

இப்படி இறக்கும் பெண்களை என்ன செய்வார்கள் தெரியுமா? அருகில் ஓடும் ஆற்றில் பெண்களின் உடலைக் கட்டித் தூக்கிப் போட்டு விடுவார்கள்.

இவர்களின் வியாதிகளை அறிந்து மருந்து கொடுக்கச் செல்லும் தொண்டு நிறுவனங்களைத் தவிர வேறு வெளியாட்கள் யாருக்கும் இங்கே அனுமதி இல்லை. அப்படி உள்ளே செல்லும் தொண்டு நிறுவனங்களும் பேசாமல் மருந்து கொடுத்து விட்டு வெளியே வந்து விட வேண்டும். மேற்கொண்டு ஏதாவது பேசி விட்டால் அவ்வளவுதான் உயிருடன் வெளியே திரும்ப முடியாது.

இங்கு வாழும் பல சிறுமிகள் சில ஆயிரம் ரூபாய்க்கு அவர்கள் பெற்றோர்களிடமிருந்த வாங்கப்பட்டவர்கள். இவர்கள் எங்கே செல்வார்கள்? இவர்களுக்கு என்ன ஆகும்? என்பது பெற்றோருக்குத் தெரிந்தும் வறுமை காரணமாக இவ்வாறு பெற்ற குழந்தைகளை விற்று விடுகிறார்கள்.

விற்கப்படும் சிறுமிகளும் இங்கிருந்து தப்ப முடியாது. அப்படித் தப்பியோட முயன்று பிடிபட்டால் உயிர்போகுமளவுக்குச் சித்திரவதை செய்வார்கள்.



## மிகப் பெரிய கட்டில்

← எப்படித்தான் நெருக்கியடித்துக் கொண்டு படுத்தாலும் ஒரு கட்டிலில் 4 பேருக்கு மேல் படுக்க முடியாது.

ஆனால் இந்தக் கட்டிலில் 201 பேர் படுத்துச் சாதனை படைத்துள்ளார்கள். உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடிப்பதற்காகத்தான் பெரியதொரு கட்டிலைச் செய்து இத்தனை பேரையும் படுக்க வைத்தார்கள்.

இந்தக் கட்டிலின் நீளம் 9 மீட்டர். அகலமும் 9 மீட்டர் தான். சதுர வடிவமான இத்தனை பேர் படுக்கக் கூடிய இந்தப் பென்னம் பெரிய கட்டில் இது ஒன்றுதான் உள்ளது என இதை வடிவமைத்தவர்கள் கூறியிருக்கின்றனர்.

கடந்த வருடம் ஹங்கேரி நாட்டில் நடந்த அறைகலன் கண்காட்சியில் இந்தக் கட்டில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. ■

## தகவல் பெட்டி

↓ ஜப்பான் நாட்டில் சோனி நிறுவனம் கடந்த வருடம் தயாரித்து வெளியிட்ட ரோபோக்கள் தான் இவை.

'ஐபோ' எனப்படும் இந்த ரோபோக்கள் சிறார்களைக் குஷிப் படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டன. நாய்கள், மனிதர்கள் போன்ற வடிவங்களில் தயாரிக்கப்பட்ட இந்த ரோபோக்கள் கடந்த வருட இறுதியிலிருந்து விற்பனைக்கு விடப்பட்டன.

இந்த ரோபோ ஒன்றின் விலை ஒன்றரை இலட்சம் யென் ஆகும். நம்நாட்டு மதிப்பில் சுமார் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்.

## குஷிப்படுத்தும் ரோபோக்கள்



## கையடக்கச் சங்கதி

↓ முன்பெல்லாம் வீட்டில் பாவனைப் பொருட்கள் பெரிய அளவில் இருந்தால் தான் ஃபாஷன். வானொலிப் பெட்டி என்றாலும் அதுவும் ஓர் அலுமாரி அளவிலிருக்க வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் பொருட்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிறிதாக இருக்குமானால், அதற்குத்தான் மதிப்பும் மவுசும் அதிகம்.

படத்தில் காணப்படுவது கையடக்கத் தொலைபேசிதான். அதுமட்டுமல்ல, பண்பலை வரிசைகள் கொண்ட வானொலி சாதனமும் இதில் அடக்கம். ஜெர்மன்- ஹனோவர் கண்காட்சியில் 'நொகியா' செல்லிடத் தொலைபேசி இல. 8310 அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வருட இறுதியில் இச்சாதனம் சந்தைக்கு வந்துவிடும். ■






## பனிக்கட்டிச் சிற்பக் கண்காட்சி

→ கனடா நாட்டுத்தலைநகர் ஒட்டாவாவில் அண்மையில் பனிக்கட்டிகளால் வடிவமைக்கப்பட்ட சிற்பக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

இக்கண்காட்சியில் இடம்பெற்ற மிகப் பிரமாண்டமான சிற்பம் தான் இது. பெரிய பனிக்கட்டிப் பாறை ஒன்றைத் தேர்ந்தெடுத்து இந்த இரண்டு கங்காரு சிற்பங்களை வடிவமைத்தவர்கள் மொத்தம் ஆறுபேர்.

கங்காருவைத் தமது நாட்டின் தேசிய மிருகமாகக் கொண்ட அவுஸ்திரேலிய நாட்டுச் சிற்பிகளே இதைச் செதுக்கினார்கள். ■

# சினி விசிட்


ஷகீலா

## எங்கே மந்த்ரா?

'மாமி' படத்தில் ஒரு பாடல் காட்சியில் குலுக்கல் நடனமாடிய மந்த்ரா அதன் பின் எங்கே என்று தேடுமளவுக்குத் தமிழில் ஒரு படத்திலும் தலை காட்டவில்லை.

ஆனால் இவர் தெலுங்கில் ராசி என்ற பெயரில் பிஸியாக நடித்து வருகிறார். தமிழில் கிறங்கடிக்கும் உடைகளில் கிளுகிளுப்பாக நடிக்கும் மந்த்ரா தெலுங்கில் தழையத்தழையப் புடவை கட்டிக் கொண்டு அடக்க ஒடுக்கமான குடும்பப் பாங்கான வேடங்களில் நடிக்கிறார்.

தெலுங்கில் ஜெகபதிபாபு, ஸ்ரீகாந்த், நவீன், வேணு ஆகியோருக்கு ஜோடியாக நடித்து வரும் இவர் இனிமேல் தமிழில் பெரிய இயக்குநர்களின் படங்களில் மட்டும் தான் நடிப்பாராம்.

## நிர்வாண அஜித்

பல செட்-அப்களில் அஜித் நடித்து வரும் 'சிட்டிசன்' படத்திற்கு நாளுக்கு நாள் எதிர்பார்ப்புக் கூடிக் கொண்டே வருகிறது. இதில் 'நாயகன்' மற்றும் 'இந்தியன்' படங்களில் வரும் கமலைப் போன்ற செட்-அப்களும் அஜித் நடிக்கும் செட்-அப்களில் அடங்குகின்றன. இப்போது கமல் 'ஆளவந்தான்' படத்தில் முழு நிர்வாணமாக நடிப்பது போன்று 'சிட்டிசன்' படத்தில் அஜித்தும் நிர்வாணக் காட்சி ஒன்றில் நடிக்கிறார்.


லிவிங்ஸ்டன்-கௌசல்யா படம்: எங்களுக்கும் காலம் வரும்

## ஏ.வி.எம். படத்தில் விஜய்

1945ம் ஆண்டு தொடங்கப்பட்ட படநிறுவனம்தான் ஏ.வி.எம். இந்தப் பழம்பெரும் நிறுவனத்தோடு போட்டி போட்டுப் படத்தயாரிப்பில் ஈடுபட்ட விஜயா-வாஹினி, ஜூபிடர் பிக்சர்ஸ், ஜெமினி, மொடர்ன் தியட்டேர்ஸ் போன்ற பழம்பெரும் நிறுவனங்கள் இப்போது படத்தயாரிப்பில் ஈடுபடுவதில்லை.

ஆனால் ஏ.வி.எம். நிறுவனம் மட்டும் தொடர்ந்து படத்தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. தமிழ்-தெலுங்கு -இந்தி-வங்காளம்-சிங்களம் ஆகிய மொழிகளில் 161 படங்களைத் தயாரித்த இந்நிறுவனம் கடைசியாகத் தயாரித்த படம் 'மின்சாரக் கனவு'.

4 வருடங்களுக்கு முன் 'மின்சாரக்கனவு' படத்தைத் தயாரித்தபின் படத்தயாரிப்பில் இருந்து சற்று விலகி சின்னத்திரையில் பல தொடர்களைத் தயாரிக்க ஆரம்பித்தது.

இப்போது மீண்டும் பெரிய திரையில் காலடி வைக்கும் ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் படத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இப் படம் பற்றிய ஏனைய அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகும்.



## சொர்ணமால்யாவுக்கு வாய்ப்பு

மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்த சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளினி-நடிகை சொர்ணமால்யாவுக்கு மறுபடி வெள்ளித்திரையில் நடிக்க வாய்ப்பளித்திருக்கிறார் இயக்குநர் மனோபாலா.

'புன்னகை' என்ற சின்னத்திரைத் தொடரில் சொர்ணமால்யாவை இயக்கிய மனோபாலா, இப்போது தான் இயக்கும் 'நான் பாட நினைப்பதெல்லாம்' என்ற படத்தில் நாயகியாக்கியுள்ளார்.

ரமேஷ் அரவிந்த் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் கஜாசினி முக்கிய வேடமொன்றில் நடிக்கிறார்.

அமிதாப்பச்சன்-ஜெயாபாதுரி இணைந்து நடித்த 'அபிமான்' என்ற இந்திப் படத்தின் 'உல்டா' தான் 'நான் பாட நினைப்பதெல்லாம்' என்று ஒரு கதையும் அடிபடுகிறது. உண்மையா மனோபாலா?

## மினி சினி

● 'காதலா காதலா' படத்தைத் தயாரித்த தேனப்பன், கமல் நடிக்கும் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறார். மௌலி இயக்கும் இப்படத்திற்கு 'பம்மல் சம்மந்தம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

● 'சாக்லெட்' படத்தில் அம்மா வேடத்தில் நடிக்க கௌதமி, பானுப்பிரியா, ரேவதி ஆகியோரை அணுகினார் தயாரிப்பாளர் மாதேஷ். இவர்கள் மறுத்துவிட கடைசியாக அம்மா வேடத்தில் சுஹாசினியை நடிக்க வைத்துள்ளார்.

● 'தம்பியுடையான்' படத்தில் சரத்குமாருக்குத் தம்பியாக அருண்குமார் நடிப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது. இப்போது அருண்குமார் விலகிவிட, இவருக்குப் பதிலாக பிரபுதேவா நடிக்கிறார்.

● 'எங்களுக்கும் காலம் வரும்' படத்தை இயக்கிய பாலகுமரன், அடுத்து 'பாட்டாளியா படிப்பாளியா' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப் படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார் மீனா.

● 'மந்திரவாசல்' என்ற தொலைக்காட்சித் தொடரை இயக்கி வரும் பிரபு நேபால் விரைவில் வெள்ளித்திரைக்காகப் படம் ஒன்றை இயக்கவுள்ளார். இதன் மூலம் ரீ.வி.இசையமைப்பாளர் இமான் திரைப்படத்தில் அறிமுகமாகிறார்.


● 'தலைமுறை' படத்தில் அறிமுகமான லட்சுமிக்குப் பெரிதாகப் படமெதுவும் வரவில்லை. பின் ரித்திகா என்ற பெயரை மாற்றிக் கொண்டு நடிக்க ஆரம்பித்தவுடன் 'பூங்குயிலே', 'சப்தம்' எனப் புதியபடவாய்ப்புகள் வரத்தொடங்கிவிட்டன.

● 'என் புருஷன் குழந்தை மாதிரி' படத்தை இயக்கிய எஸ்.பி.ராஜ்குமார் அடுத்து இயக்கும் படத்திற்கு 'ஒரு டைப்பான ஆளு' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை ஆர்.ஆர்.மூவி மேக்கர் நிறுவனம் தயாரிக்கிறது.

● 'கோமாளி' இது தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்படும் படமொன்றின் பெயர். தெலுங்கு இயக்குநர் கிருஷ்ணவம்சி இயக்கிய இப்படத்தில் நாகார்ஜுன்-இஷா கோபிகர்-ரம்யா கிருஷ்ணன் நடித்துள்ளனர்.

## சூர்யா எடுத்திருக்கும் முடிவு

'சேது' பாலா இயக்கும் 'நந்தா' படத்தில் நடிப்பதைத் தொடர்ந்து சூர்யாவுக்குப் பல படவாய்ப்புக்கள். இருப்பினும் 'நந்தா'வை முடித்துவிட்டுத்தான் மற்றப் படங்களை ஒத்துக் கொள்வது என்று முடிவெடுத்திருக்கிறார் சூர்யா.



## 'நாட்டாமை'க் கூட்டணியின் 'சமுத்திரம்'

'நாட்டாமை' படக் கூட்டணி மறுபடி ஒன்று கூடுகிறது. சரத்குமார் நடிக்க, கே.எஸ்.ரவிக்குமார் இயக்க, சௌத்ரி தயாரிக்கும் இப்படத்திற்கு 'சமுத்திரம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இந்த 'நாட்டாமை'க் கூட்டணி உருவாக்கும் 'சமுத்திரத்'தில் 'கடல் பூக்களும்' சேர்கின்றன. ஆம், 'சமுத்திரம்' படத்தில் 'கடல் பூக்களில்' இணைந்து நடித்த முரளியும் மனோஜும் நடிக்கிறார்கள். சரத்-முரளி-மனோஜ் மூவரும் இதில் அண்ணன் தம்பிகளாக நடிக்கின்றனர்.

## அப்பாஸின் சொந்தப்படம்

விழுந்து போன மார்க்கெட்டைத் தூக்கி நிறுத்துவதற்காக நடிகர்கள் சொந்தப்படம் தயாரித்து நடிப்பார்கள். அந்த வரிசையில் புதிதாக இப்போது இணைந்திருக்கிறார் அப்பாஸ்.

கதிரின் 'காதல் தேசம்' படத்தின் மூலம் அறிமுகமாகி, முதல் படத்தின் மூலமே நட்சத்திர அந்தஸ்தை எட்டிப் பிடித்தவர். சரியான கதைகளைத் தேர்வு செய்யாமல், கண்டபடி படங்களில் நடித்துத் தன் பெயரைத் தானே போக்கிக் கொண்டார் இவர்.

இப்போது இளம் நடிகர்களான அஜித், விஜய், விக்ரம், சூர்யா, அருண்குமார், பிரசாந்த் போல் செட்-அப்பை மாற்றிக் கொண்டு வித்தியாசமான படமொன்றில் நடிக்கவுள்ளார் அப்பாஸ்.

இதற்காக உண்மையில் நடந்த ரௌடிகளின் கதை ஒன்றைத் தெரிவு செய்திருக்கும் அப்பாஸ் இதைச் சொந்தமாகத் தயாரித்து ரௌடி வேடத்தில் நடிக்கவுள்ளார்.

## களமிறங்கத் தயாராகும் கதாநாயகன்

சகலகலா வல்லவன் டி.ராஜேந்தரின் மகன் சிலம்பரசன் கதாநாயகனாகக் களமிறங்கக் காத்திருக்கிறார். இவர் கதாநாயகனாக அறிமுகமாகும் 'காதல் அழிவதில்லை' வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

6 மாதக் குழந்தையாக இருந்தபோது 'உறவைக் காத்த கிளி' படத்தில் அறிமுகமான சிலம்பரசன் தொடர்ந்து பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தார்.

அதன்பின் 'மோனிஷா என் மோனாலிஷா' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடிய சிலம்பரசன் இப்போது 'சொன்னால்தான் காதலா' படத்தில் இரண்டு பாடல் காட்சிகளில் ஆட்டம் போட்டு சிறிய வேடத்தில் நடித்துவருகிறார்.

## சதம் அடித்த பாடலாசிரியர்

வேகமாக முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பாடலாசிரியர்களில் ஒருவர் பா.விஜய். 'ஞானப்பழம்' படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமான இவர் 'நரசிம்மா' படத்திற்குப் பாடல் எழுதியதன் மூலம் 100 வது பாடலை எட்டியிருக்கிறார்.

'கருப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு...', 'காதல் வெண்ணிலா கையில் சேருமோ...', 'சுவாசமே.. சுவாசமே..'

போன்ற சூப்பர் ஹிட் பாடல்களை எழுதியிருக்கும் பா.விஜய் இப்போது 'நந்தா', 'புன்னகை தேசம்', 'லவ்சேனல்' உட்பட 10 படங்களுக்குப் பாடல்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்.

பொன்...
நடிகைகளும் ...
ஒளிப்பதிவு-பி...
ராஜ்குமார், சண்டை...
இது முற்றிலும் பொழு...

# 'ஆள் மாறாட்டம் செய்தார் சாக்ஷி' அரசியல்வாதி கிளப்பி விட்ட புரளி!

இப்படியொரு பப்ளிசிட்டி ஸ்டன்ட் திரையுலகில் நடந்திருக்குமா என்று நினைக்குமளவுக்கு பரபரப்பான கதை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளார் யோகேஸ்வர் என்ற கன்னட நடிகர்-தயாரிப்பாளர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக யோகேஸ்வர் ஓர் அரசியல்வாதி. கர்நாடக மாநில சட்டசபை உறுப்பினர் (எம்.எல்.ஏ). இவர் கிளப்பி விட்ட புரளி என்ன தெரியுமா?

"நடிகை சாக்ஷியும் தமிழில் 'புதையல்' படத்தில் அறிமுகமாகி பின் தெலுங்கு தேசம் சென்று 'வாஞ்சிநாதன்' மூலம் தமிழில் மறுபிரவேசம் செய்த அதே சாக்ஷிதான்? அவரது சகோதரி ஷில்பாவும் இரட்டைப்பிறவிகள்.

சகோதரியின் உருவ ஒற்றுமையைப் பயன்படுத்திக் கொண்டு தனக்குப் பதிலாகத் தனது சகோதரியைப் படப்பிடிப்புக்கு அனுப்பி வைத்து விடுகிறார் சாக்ஷி. படங்களில் நடிக்க ஆரம்பித்ததில் இருந்து இந்த சகோதரிகள் இப்படி ஆள் மாறாட்டம் செய்து சினிமா உலகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்."

இப்படி நிருபர்களிடம் யோகேஸ்வர் கூற, அதைப் பரபரப்புச் செய்தியாக்கி விட்டார்கள்.

உண்மையில் நடந்தது இதுதான்.

பலகோடி ரூபாயில் யோகேஸ்வர் தயாரித்து நடிக்கும் 'சைனிகா' என்ற கன்னடப்படத்தில் சாக்ஷி கதாநாயகி. இப்படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்புகள் கர்நாடக மாநிலத்தின் தட்சிண என்ற பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அப்போது ஆறு சினிமாப் பத்திரிகையாளர்களை அழைத்து மேற்கண்ட செய்தியைக் கூறியிருக்கிறார் யோகேஸ்வர். இப்பேட்டியின்போது சாக்ஷியும் கூடவே இருந்திருக்கிறார்.

'சைனிகா' படத்திற்காகக் கிளப்பி விடப்பட்ட 'விளம்பர யுக்தி' என்று பத்திரிகையாளர்களுக்கு அப்போது புரியவில்லை. இந்த அரசியல்வாதி நடத்திய நாடகத்தில் சாக்ஷிக்கும் பங்குண்டு.

பொய்யாகப் புனையப்பட்ட செய்தி, பத்திரிகைகளில் வெளியாகி அதன் தாக்கம் சாக்ஷியைப் பாதிக்க, அதிர்ச்சியடைந்து விட்டார் அவர். தனது திரையுலக வாழ்வு இதனால் அஸ்தமித்து விடுமோ எனப் பயந்து யோகேஸ்வரின் செய்திக்கு மறுப்புத் தெரிவித்தார்.

"சாக்ஷியும் ஷில்பாவும் சகோதரிகளே தவிர இரட்டைப்பிறவிகள் அல்ல. இருவருக்குமிடையே உருவ, உயர ஒற்றுமைகள் கிடையாது. அந்த மனிதர் (யோகேஸ்வர்) மீது மானநஷ்ட வழக்குப் போடலாம். ஆனால் இதெல்லாம் சினிமா உலகில் சகஜம் என்பதால் அதை விட்டு விட்டேன்"

என்று ஒரு சப்பைக் கட்டுக் கட்டியிருக்கிறார் சாக்ஷியின் அம்மா பர்வீன்.

சாக்ஷியை வைத்து 'வாஞ்சிநாதன்' படம் எடுத்த தயாரிப்பாளர் காஜா மொய்தீனிடம் ஆள்மாறாட்டம் பற்றிக் கேட்டதற்கு, "அப்படியிருக்க வாய்ப்பே இல்லை" என்று கூறியிருக்கிறார்.

இப்படியெல்லாம் ஆள்மாறாட்டக் கதையை அவிழ்த்து விட்டால் படம் வெள்ளிவிழாக் கொண்டாடும் என யோகேஸ்வர் நினைத்தாரோ என்னமோ?

ஆனால் அதன் எதிர்விளைவுகள் எப்படியிருக்கும் என்று அவர் நினைக்கவில்லைப் போலும்.

இந்த ஆள்மாறாட்ட பப்ளிசிட்டி ஸ்டண்ட்டால் சாக்ஷிக்கு நஷ்டமே ஏற்பட்டிருக்கிறது. அர்ஜுன் ஜோடியாக 'வேதம்' படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த சாக்ஷி இந்தப் பிணக்குகளால் இப்போது அப்படத்தில் இருந்து தூக்கப்பட்டுள்ளார்.



சரத்குமார்-அபிராமி படம்: தோஸ்த்

## ஜோதிகாவின் வருத்தம்

தமிழில் ஒரு படத்திற்கு 30 இலகரம் சம்பளமாகப் பெறும் ஜோதிகா இப்போது முதலிடத்தில் இருக்கிறார். இருப்பினும் ஜோதிகா வருத்தத்தில் இருக்கிறார்.

காரணம் நாளுக்கு நாள் கூடிவரும் உடல் எடையால் மற்ற நடிகைகளைப் போல் தன் இடையைக் காட்டி நடிக்க முடியவில்லையே என்பதுதான்.

ஜோதிகாவுக்குக் கொடியிடைக்குப் பதில் அகல இடை. கொஞ்சம் தொப்பை வேறு. இதனால் இடை சற்றுத் தெரியுமாறு இடைவெளி விட்டு, வயிற்றை மறைக்கும் உடைகளை அணிந்தே நடித்து வருகிறார்.

உடல் எடையைக் குறைக்க ஆசைப்படும் ஜோதிகா அதற்காக வயிற்றைக் கட்டவும் முடியாமல், உடற்பயிற்சி செய்யவும் முடியாமல் இருக்கிறாராம்.

## 'ரோபோ' ஒத்திவைப்பு

'முதல்வன்' படத்தை 'நாயக்' என்ற பெயரில் இந்தியில் இயக்கி வருகிறார் ஷங்கர். 'நாயக்' படத்தின் படப்பிடிப்புகள் நீண்டு கொண்டே போவதால் 'ஆளவந்தான்' முடிந்த கையோடு கமல் நடிக்க ஷங்கர் இயக்குவதாக இருந்த 'ரோபோ' படத்திட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

'நாயக்' படம் முடிந்தவுடன் ஷங்கர் 'பவர்' என்ற தமிழ்ப் படத்தை இயக்கவுள்ளார். இதில் பிரசாந்த் கதாநாயகன். 'ஜீன்ஸ்' படத்திற்குப் பின் ஷங்கர்-பிரசாந்த் கூட்டணி மறுபடி இணையும் இப்படத்தில் உலக அழகி யுக்தா முகி நாயகியாக நடிப்பார் என்று தெரிகிறது.

## சகோதரர்களின் படங்களில் விஜய்

'பூவெல்லாம் உன் வாசம்' படத்தைத் தயாரித்து வரும் ரவிச்சந்திரன் விஜய் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

இதையடுத்து ரவிச்சந்திரனின் சகோதரர் வி.என்.சுந்தர் தயாரிக்கும் படமொன்றிலும் விஜய் நடிக்கவுள்ளார். ஏற்கனவே 'பகைவன்', 'ஜேம்ஸ்பாண்டு' ஆகிய படங்களைத் தயாரித்தவர் வி.என்.சுந்தர்.

ராதிகா சௌத்ரி

சிம்ரான்

முகப்பில்



வெங்கடேஷ்-அஞ்சலா படம்: பாப்பா

## சசி இயக்கும் 'ரோஜாக்கூட்டம்'

'வானத்தைப் போல' படத்தை அடுத்து அஜித்-ஜோதிகா ஜோடியாக நடித்து வரும் 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தைத் தயாரித்து வரும் ஆஸ்கார் ஃபிலிம்ஸ் ரவிச்சந்திரன் தயாரிக்கும் புதிய படமொன்றுக்கு 'ரோஜாக்கூட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

'சொல்லாமலே' படத்தைத் தயாரித்த சசி இப்படத்தை இயக்குகிறார். கதாநாயகனாக புதுமுகம் ஸ்ரீகாந்த் அறிமுகமாக இவருக்கு ஜோடியாக நடிப்பவர் பூமிகா. இவர் 'பத்ரி'யில் விஜய் ஜோடியாக அறிமுகமாகும் தெலுங்கு வரவு.

இவர்களுடன் பிரகாஷ்ராஜ், விவேக் மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடிக்கின்றனர். 'மின்னலே' புகழ் ஆர்.டி.ராஜசேகர் ஒளிப்பதிவு செய்ய வைரமுத்துவின் பாடல்களுக்கு இசையமைக்கிறார் பரத்வாஜ்.

இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் சசி.



...தா-விவேக் ஆனந்த்-அனுராதா படம்: விடிவதற்கு முன்னால்



வர்ஷா

## பிரபு ரம்பா நடிக்கும் 'மாம்ஸ்'

பொங்கலுக்கு வெளியாகி சுமாரான வெற்றியைப் பெற்ற 'லூட்டி' படத்தை இயக்கிய பரமேஷ்வர் அடுத்து இயக்கும் படங்களில் ஒன்றில் பிரபு-ரம்பா இணைந்து நடிக்கிறார்கள். 'உழவன்', 'சிவசக்தி' ஆகிய படங்களை அடுத்து பிரபு-ரம்பா ஜோடி சேரும் மூன்றாவது படமான இதற்கு 'மாம்ஸ்' என்று ...ரிடப்பட்டுள்ளது.

...ல் ராதாரவி, மணிவண்ணன், மனோரமா, சார்லி, வி.எம்.சி.ஹனீபா, ...லம், மயில்சாமி ஆகியோருடன் விவேக்கும் நடிக்கிறார். மேலும் இரு புதிய ...டிக்கின்றனர்.

...ணன், இசை-பரத்வாஜ், வசனம்-என். பிரசன்னகுமார், கதை-இணை இயக்கம்-பிருதிவி ...விற்சி-சூப்பர் சுப்பராயன்.

...போக்கு அம்சங்களுடன் முழு நீள நகைச்சுவைப்படமாகத் தயாராகி வருகிறது.

## காதோடு சொல்லுகிறோம்

மனைவிக்காக நினைவுச்சின்னம் எழுப்பிப் பேர் பெற்ற முகலாய மன்னனின் காதல் மனைவியின் பெயர் கொண்ட நடிகை, சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உள்ளவராம். அந்தச் சுருட்டு சாதாரண சுருட்டு இல்லையாம். போதையூட்டும் இலையால் அடைத்த சுருட்டாம். இந்தப் பழக்கத்தைக் கைவிட முடியாது இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறாராம் நடிகை. படங்களில் நடிகையின் பார்வையில் ஒரு போதை இருப்பதற்குக் காரணம் இதுதான் என்கிறது திரையுலக வட்டாரம்.

சூப்பர் நடிகருக்கு ஜோடியாக அறிமுகமான அந்த 'ஷக்கலக்க' குரலுக்குச் சொந்தக்காரியான அந்த நடிகை, இருபது லகரம் சம்பளம் கேட்கிறார் என்று யாரோ புரளியைக் கிளப்பி விட, அம்மணி அரண்டு போய் இருக்கிறாராம். 'ஆசை' நாயகனுடன் 'பிரஜை' படத்தில் நடிப்பதைத் தொடர்ந்து தமிழில் பல வாய்ப்புக்கள் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த அந்தப் பாடகி நடிகை இந்தச் சம்பள வதந்தியால் கலங்கிப் போய் இருக்கிறாராம்.

மும்பையில் இருந்து சென்னைக்கு வந்து 'காதல் கவிதை' பாடிய நடிகை படவாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் பண விஷயத்தில் படு கறாராம். அண்மையில் 'வெற்றி காந்த' நடிகருடன் ஜோடி சேர்ந்த நடிகை, அப்படத்தின் படப்பிடிப்புக்குச் செல்லாமல் இருந்தாராம். காரணம் கேட்டதற்கு 'முழுப் பணத்தையும் கொடுத்தால் படப்பிடிப்புக்கு வருவேன்' என்று முரண்டு பிடிக்க, பின் முழுப் பணத்தையும் கொடுத்து நடிகையைப் படப்பிடிப்புக்கு அழைத்துச் சென்றார்களாம்.

ஒரு காலத்தில் திரைக்கதை-இயக்கம் மற்றும் நடிப்பில் கொடி கட்டிப் பறந்தவர் அந்தப் 'பா' இயக்குநர். இப்போது அவருக்குப் போதாத காலம் போலும். சென்னையில் அவர் இருந்த பங்களாவைச் சில கோடிகளுக்கு விற்று விட்டாராம். கடைசியாக அவர் எடுத்த சில படங்களின் தோல்வியால் ஏற்பட்ட கடன்களை அடைக்கத்தான் குடியிருந்த பங்களாவை அவர் விற்றாராம்.

## கார்த்திக்-தேவயாணி இணையும் 'லவ்லி'

'என்னமமாக் கண்ணு' வெற்றிப்படத்தை வழங்கிய தயாரிப்பாளர் துரை-இயக்குநர் ஷக்தி சிதம்பரம் கூட்டணி மறுபடி இணைந்து தரவிருக்கும் படம் 'லவ்லி'. இதில் கார்த்திக்-தேவயாணி ஜோடியாக நடிக்கிறார்கள்.

அனைத்துத் தரப்பினரையும் கவரும் பல சிறப்பம்சங்களை இணைத்து வித்தியாசமான கதையுடன் தயாராகும் இப்படத்தில் இளமைத் துள்ளலான வேடத்தில் கார்த்திக் நடிக்கிறார்.

மேலும் விவேக், மணிவண்ணன், வினுச்சக்ரவர்த்தி, பொன்னம்பலம், அம்பிகா, கவிதா, பாண்டு, மதன்பாப் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

பி.கண்ணன் ஒளிப்பதிவு செய்ய, தேவா இசையமைக்கிறார். குறுகிய காலத் தயாரிப்பாக உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் வெகுவேகமாக நடைபெறுகின்றன.

# ஒரு 'நச்' ஃபோட்டோ



புகைப்படம் பிடிப்பது ஒரு தனிக்கலை. ஸ்ரூடியோக்களில் 'ப்ளீஸ்! ரெடி, ஸ்டெடி, ஸ்மைல் பிளீஸ் வன் டூ த்ரீ' என்று ஃபோட்டோ எடுப்பதைப் பார்த்திருப்பீர்கள்.


இயற்கையில் நடக்கும் சம்பவங்களை இயல்பாகவே ஃபோட்டோ எடுப்பதற்குப் புகைப்படக் கலைஞர்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

பல மணி நேரம் தவமிருந்து, பல நாட்கள் பொறுமையோடு காத்திருந்து எடுக்கப்பட்ட சாதனை ஃபோட்டோதான் இது. கடந்த வருடம் பி.பி.சி., வனவிலங்கு இதழும் இலண்டன் இயற்கை தேசிய அருங்காட்சியகமும் இணைந்து புகைப்படக் கண்காட்சியொன்றை நடத்தின.

இதில் விலங்குகளின் நடத்தைப் பிரிவில் பரிசு பெற்ற 'நச்' ஃபோட்டோதான் இது. இந்தப் புகைப்படத்தைக் 'க்ளிக்'கியவர் ஜெர்மன் நாட்டுப் புகைப்படக்கலைஞரான வின்பிரெட் விஸின்ஸ்கி என்பவர்.

தான்சானியாவில் மாடொன்று ஆற்றைக் கடக்கும்போது, அதைப்பிடித்துச் சாப்பிடும் முதலையின் இந்த அரிய படத்தை எடுத்தார் இவர்.

திருமணம் என்பது
முற்றுகையிடப்பட்ட கோட்டை.
வெளியே இருப்பவர்கள்
உள்ளே செல்லத்துடிக்கிறார்கள்
உள்ளே இருப்பவர்கள்
வெளியே வரத் துடிக்கிறார்கள்.
–அந்நியப் பழமொழி



## தொட்டுவிட்டேன் உன் கரங்களை!

இன்று தான்
முதன் முதலாய்–உன்
கரங்களின்
மென்மை உணர்ந்தேன்...
***
அதன்
தொடுதலில் உள்ள
ஈர்ப்பில்...
சில நொடிகள்
தடுமாறிப் போனேன்...!
***
என்ன பேசினாய் நீ
கரங்களால்..?
***
உன் விழிகளின்
வார்த்தைகள்
புரிந்த எனக்கு–உன்
விரல் வார்த்தைகள்
புரியவில்லை...!
***
உன்
விரல்களின்
விளிம்புகள் தான்
வீணையின்
தந்திகள் போலும்...!
***
அவ்வளவு
இனிமையாக
இருக்கிறது...
***
மொழி தெரியாத
இனிமையான
சங்கீதம் போல்–உன்
கரங்களின்
வார்த்தைகள் எனக்கு...
***
எத்தனை
பெண்களின் கரம்
தொட்டிருக்கிறேன்...
***
அன்னையின் பற்றுதலில்
அன்பின்
அரவணைப்பு...
***
தமக்கையின்
தழுவுதலில்
பாசத்தின் பரிதவிப்பு...
***
தங்கையின்
பிடிகளில் குறும்பின்
பிணைப்பு...
***
நண்பியின் கரங்களில்
நட்பின்
நனைப்பு...
இப்படி யாரிடமும்
ஏற்படாத
தடுமாற்றம்...
எப்படி?–உன்
தொடுகையில் மட்டும்..?
***
ஒன்று தெரியுமா
உனக்கு...?
***
நீ தொட்டதன் பின்
இன்னும்–என்
விரல்கள்
குவிந்து தான்
இருக்கின்றன....!
***
ஏன் தெரியுமா?
அது–உன்
விரல்கள் பட்டதன்
வெட்கம்
அதற்கு...!
***

தேவதாமன்–கெங்கல்ல.

## ஏழைப் பெண்கள் பாவம்

ஏழையாகப் பிறந்தது பாவம்
ஒல்லியாக இருப்பதென் தேகம்
கன்னியின் மடியில் நான் தவழ!
மணவாளன் தேடுகிறார் தந்தைதாயும்
வேலை செய்பவனுக்கு மாருதியும்
வேலை அற்றவனுக்கு வாழ்வூதியம்
சேலையோடு போட்ட நகைபத்தும்
செல்வமான வீடுமனை கேட்டு?
சீதனத்தின் சிறப்பியல்பை காட்டி!
ஓடுகிறார் வேறிடம் தேடி,
பார்த்தேன் பலநூறு மாதம்
கரைந்தாச்சு கல்யாணப் பருவம்
போவதற்கு இதுனல்ல தருணம்
போட்டாச்சு பாடத்திற்கு உருவம்
அமைஞ்சாச்சு மேரியென்ற 'நாமம்'
ஐய்யய்யோ 'ஏழைப் பெண்கள் பாவம்'.
அக்கரை செல்வா–தெகிவளை.

## ஒரு தங்கையின் கண்ணீர் துளி

சோதனைகள் பல கடந்து
சாதனைகள் சில படைக்க
சான்றாயிருந்த
என் உடன்பிறந்த
சோதரியே!
நீ
என்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து
என் கண்ணீர் கரைகிறது.
புண்பட்ட மனதை பண்படுத்த
நண்பியில்லை!
துக்கத்தில் துணை நிற்க பக்கத்தில்
நீயில்லை!
இரவில் அரவணைக்க அருகில்
அன்னையுமில்லை!
பகல் இருளும் போதெல்லாம்
உன் நினைவே எனை வாட்டுகிறது.
இத்தனை தெரிந்திருந்தும்–நீ
என்னை விட்டுப் பிரிந்து
பிரியமாயிருப்பது
எனக்குப் பிடிக்கவில்லை!
பிரிவுடன் தங்கை.

எஸ். றோஜனா–யாழ்/அரியாலை

## தேன் கிண்ணம்

## கடவுளுக்கு ஒரு கடிதம்

இறைவா என் மன வாழ்வில்
சோக இருள்போய்
சந்தோஷ சூரியன்
உதயமாகாதா?
தெய்வத்தின் திருநாமத்தை
தினமும் தரிசிக்கின்றேன்.
கள்ளமில்லாத மனத்துடன்.
கல்லுருவில் அமைந்துள்ள
கடவுளே உன்னை வணங்குகிறேன்.
அறிந்து செய்த தவறுகளை
எல்லாம் மன்னிக்கும்படி கேட்டு விட்டேன்
நான் அறியாமல் செய்த பிழைகளை
எல்லாம்
மன்னித்தருளும்!
எல்லோரும் தங்களின்
எதிர்காலத்தை எப்படி எப்படியோ
கற்பனை செய்து மகிழ்கின்றார்கள்; எனக்கு
சாவதைத் தவிர வேறு
சந்தோஷமே தெரியவில்லை!
என்னை இந்த உலகில்
இஷ்டமில்லாமல் படைத்தாயா–?
கஷ்டப்படும் என்னுயிரைச்
சீக்கிரம் எடுத்துவிடு.
கல்லறையிலாவது சந்தோஷமாக உறங்க
ஆசைப்படுகிறேன்.
என்னை ஏன் மனிதனாகப் படைத்தாய்?
குயிலாகப் படைத்திருந்தால்,
கூவியாவது மகிழ்ந்திருப்பேன்!
இந்த மடலுக்கு பதிலாக
எமனையாவது அனுப்பு...!
க.வரதராசா–பதுளை.

## இறந்தும் வாழும் ஒருவன்

பெண்ணே...!
நான் என்றோ–
இறந்து போனவன்!
**
ஏன் இறந்தேன்..?
என்பது–
ஒருத்திக்கு மட்டுமே
தெரியும், என்பதை
உனக்கும்–
சொல்லிவைக்கிறேன்!
**
மனித வாழ்வு
ஒருதடவைதான்;
அது–எனக்கு
முடிந்துபோனது!
இனியும்–ஒரு
வாழ்வு எப்படி...?
**
உன்காதலை
கௌரவப்படுத்துகிறேன்...
பெருமைப்படுகிறேன்....
ஆனால்...,
நான்தான்
பொருத்தமில்லையே...!
**
உனக்காய்–
ஈந்து கொள்ள
என்னிடம்
எதுவுமில்லை;
ஏற்கனவே
எல்லாம் இழந்தவன்
நான்!
**
ரணப்படுத்தப்பட்ட
என்
இதயத்துள்
உன்னையும் இறக்கி
அவஸ்தைப் படுத்த
எனக்கு–
இஷ்டமில்லை!
**
நீ
வாழவேண்டும்!
என்னைப் போல்
இறந்தும் வாழாமல்
வாழ்ந்து விட்டு–
இறந்துபோகணும்...!
**
அதுவரைக்கும்–
என்னோடு
தொடர்ந்தும்–
தோழியாய் மட்டும்
இரு!
**
ரெட்ணம்
சாந்தசீலன்–
பொத்துவில்.

## கவனிநில் முன்னேறு

## போராட்டமும் சகிப்புத் தன்மையும்

வாழ்க்கையில் தேவையான வசதிகளைப் பெறுவதற்குப் போராட வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்ளாமல் இருந்தால், நாம் எப்பொழுதும் வெற்றி பெற இயலாது.

வாழ்க்கை எளிதாகவும் இன்னல் இல்லாமலும் இருப்பின் அது வாழ்க்கையல்ல. போராட்டம் என்பது தான் வாழ்க்கை. நாம் எந்த வித செயற்பாடுகளையும் செய்யாமல் எல்லா சவுகரியங்களும் கிடைத்து விட வேண்டும் என எண்ணுவது–

இரவில் சூரியனைத் தேடி அலைவதைப் போன்றதாகும். காலையில் எழுந்ததும் நமக்காகவும் நம் குடும்பத்திற்காகவும் உழைக்க வேண்டும் என்று நினைக்கும் பொழுது, வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் விறுவிறுப்பும், புத்துணர்ச்சியும் பிறக்கும்.

உலகத்தில் முயன்று பெறுவதற்கு ஒன்றுமே இல்லை என்று நினைக்கும் பொழுது வாழ்வதில் ஒரு பற்று குறைந்து விடும். ஒவ்வொரு நாளையும் எப்படி கழிப்பது என்று வேதனையில் மூழ்க நேரிடும்.

இது எப்படி இருக்கும் என்றால் வீட்டிற்கு வந்த விருந்தினரை அன்புடன் உபசரித்து அனுப்புவதற்குப் பதிலாக அவரை கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளுவது போலாகும்.

அதனால் வாழ்க்கையில் பொறுப்பும், பிடிப்பும், குறிக்கோளும், ஆர்வமும் இருக்க வேண்டும். இதற்கு மாறுபட்ட வாழ்க்கையாக இருந்தால் உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையை ஆரம்பிக்க முடியும்.

வாழ்க்கையில் நாம் மேற்கொள்ளும் குறிக்கோள் நம்முடைய வாழ்க்கை முழுவதும் பரந்து விரிந்து இருக்க வேண்டும். நம்முடைய திறமையினால் குறிக்கோளை விரைவிலேயே அடைந்து விட்டால், மீண்டும் புதிய நோக்கம் கொண்டு செயல்படுவது அவசியமாகும்.

'நம்முடைய குறிக்கோள் தான் நிறைவேறி விட்டதே. இனி மேல் செய்வதற்கு ஒன்றும் இல்லை' என்று எண்ணி விடக்கூடாது. குறிக்கோள் முடிந்து விட்டது என்று நினைக்கும் போது வாழ்வின் எல்லையும் குறுகிப் போய் விடும்.

நாகரீக வளர்ச்சிக்கு உண்மையான ஒரே அடையாளம் சகிப்புத் தன்மை தான் என்கிறார் ஆர்தர் ஹெல்பஸ். மற்றவரின் நம்பிக்கையோ நடத்தையோ வேறுபடும் பொழுது அதனை அனுமதிப்பதும் மதிப்புத் தருவதும் சகிப்புத் தன்மையாகும்.

தவறாகப் புரிந்து கொள்வது, கடுமையான வெறுப்பு, முரண்பாடு ஆகியவற்றை சகிப்புத்தன்மை அறவே விலக்கி விடும். கருத்து வேற்றுமை வதந்தி வம்புப் பேச்சு, பூசல் ஆகியவற்றையும் சகிப்புத்தன்மையானது ஒன்றும் இல்லாமல் செய்து விடும்.

மற்றவர்களின் கருத்து, செயல் ஆகியவற்றோடு ஒத்திசைந்து செயல்படுவதற்கு இது உறுதுணைப் புரியும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் நடப்புறவுக்கும் பாராட்டுவதற்கும் கருத்துவேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதற்கும் இது வழிகாட்டும்.

ஒருங்கிணைக்கும் காரணகர்த்தாவாகவும் இது செயற்படும். நிம்மதியையும், இணக்கத்தையும் வளர்க்கும். பொறுத்துக் கொள்ளும் பண்பையும் சுயதேர்ச்சித் திறனையும் வழங்கும்.

சகிப்புத்தன்மை இரக்க உணர்வுக்கு வழிவகுக்கும். ஆயிரக்கணக்கான நெருங்கிய உறவினர்களை விட, இரக்க உணர்வு காரணமாக உள்ளம் உருகும் ஒருவர் எவ்வளவோ மேலானவர் என்று யூரிப்பிடிஸ் கூறுகிறார்.

மற்றவர்களுடைய உணர்வில் ஆழ்ந்து ஈடுபடும் பண்பே, இரக்க உணர்வே அடுத்தவர்களின் இடுக்கண்களையும் சோகங்களையும், துயரங்களையும் பகிர்ந்துகொள்ளும் ஆற்றலே இரக்க உணர்வாகும்.

துன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களுக்கு ஆறுதல் தருவதும் இரக்கம் தான். நமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் நிலவும் இடைவெளியை இரக்க உணர்வு இணைத்து விடுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் தருவது கூட இரக்க உணர்வுதான்.

ஓர் இடத்தை அடைந்து விடுவது என்ற கற்பனையில் இருப்பதை விட அதை நோக்கி நம்பிக்கையோடு பயணம் செய்வது மிகவும் நல்லது என்று ஸ்டிவன்சன் குறிப்பிடுகிறார்.

ஒரு குறிக்கோளைச் சாதித்து விடுவதை விட, அதற்காக நடத்தும் போராட்டம் மருந்தானது. உற்சாகம் அளிக்கக் கூடியது உயிரோட்டமுள்ளது.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.சதீஸ்குமார்
வயது: 17
முகவரி: இல. 7, அபேசுந்தர வீதி, களுவெல்ல, காலி.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எஸ். சுகந்தி
வயது: 22
முகவரி: 6ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருமலை.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

08.04.2001 முதல் 14.04.2001வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
புதிய சிந்தனைகள். கிரக பலன் மாற்றத்தால் பல பிரச்சனைகள் நீங்கும். உடலுபாதைகள் குறையும். கடன் பிரச்சனைகளும் குறையும். முக்கிய சுபகரும வைபவங்கள் நிகழும். அச்சுவினி நட்சத்திரக் காரர் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளபச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 12, 13.

**இடபம்:**
ஏழரைச் சனியின் தாக்கம் இருப்பினும் பொதுவான விடயங்கள் வெற்றியைக் கொடுக்கும். எதிர்ப்புக்கள் நீங்கும். கொடுக்கல் வாங்கல் சீராக நடைபெறும். உறவினர் வழியால் உதவிகள் கிடைக்கும். ரோகிணி நட்சத்திரக்காரர் உயர்வடைவர்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 09, 10.

**மிதுனம்:**
அலைச்சல்கள் காணப்பட்டாலும் தொழில் சிறக்கும். எதிலும் உற்சாகம் காணப்படும். கடன் பிரச்சனைகள் நிவர்த்தியடையும். தூர இடத்து உறவினர்கள் வருகை திருவாதிரை நட்சத்திரக் காரருக்கு வருமான வசதிகள் பெருகும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 08, 11.

**கடகம்:**
தொழில் உயர்ச்சியுண்டு. உயர் கல்வி வாய்ப்புக்கள் பெருகுவதுடன் எடுத்த முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பல பிரச்சனைகள் தீர்வதுடன் கல்வி, பரீட்சைகள் வெற்றியைக் கொடுக்கும். பூச நட்சத்திரக்காரருக்கு மகிழ்ச்சியான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 11, 12.

**சிம்மம்:**
முக்கிய நிகழ்வுகள் வெற்றி பெறும். பணவசதி ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். தொழிலில் உயர்வு அல்லது இருப்பிட மாற்றம் காணப்படும். மகம், உத்தர நட்சத்திரகாரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 17.

**கன்னி:**
உறவினர்களின் வரவும் தூர இடத்து நற்செய்தியும்பிள்ளைகளின் கல்வி முன்னேற்றமும் காணப்படும். சுபகரும விடயங்கள் நல்ல முடிவுகளைக் கொடுப்பதுடன் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கிட்டும் அத்த நட்சத்திரகாரப் பெண்கள் பிரயாண பலனை எதிர்கொள்வர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 10, 13.

**துலாம்:**
முக்கிய சம்பவங்கள் நடைபெறும். திருமண சுப கரும அல்லது காதல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் தீரும். சிங்க இராசியினர் உதவி கிட்டும். சுவாதி நட்சத்திரகாரர் சிறப்புப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 12, 14.

**விருட்சிகம்:**
கவலைகள் குறையும். உடலிலுள்ள நோய் துன்பம் நிவர்த்தியாகும். தூர இடப் பிள்ளைகளின் நற்செய்தியும் மேட இராசிக்காரரால் உதவியும் கேட்டை நட்சத்திரகாரருக்கு நற்பெயரும் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 09.12.

**தனுசு:**
பரீட்சை முடிவுகள் நன்றாக அமையும். பிரயாண முயற்சிகள் குடும்பத்தாரின் ஆதரவுகள் தொழிலுள்ள தடைகள் நீங்கும். சுபகரும நிச்சயம் அல்லது வெளிநாட்டுப் பிரயாணம் கைக்கூடும். உத்தராட நட்சத்திரகாரர் புதிய மாற்றங்களை எதிர்கொள்வர்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: கபில நிறம், எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 12, 13.

**மகரம்:**
பிள்ளைகளின் உதவி கிட்டும். கடன் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை நிவர்த்தியடையும். கல்வித் துறையுடன் சேர்ந்த தொழில், செய்வோர் உயர்வுடன் பெயர் புகழ்களைப் பெறுவர். அவிட்ட நட்சத்திரகாரர் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பசிய மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 10, 11.

**கும்பம்:**
நோய்துன்பம் மாற்றமடையும். முக்கிய விடயங்களில் திருப்பங்கள் ஏற்படும். வாகனத் துறையுடன் தொழில் செய்வோர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உறவினர்களின் வரவும் பூரட்டாதி நட்சத்திரகாரர் பணவசதியைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 10, 14.

**மீனம்:**
தடைகள் நிவர்த்தியாகும். எதிர்பார்த்த நன்மைகள் நிகழும். ஆலய தரிசனம் பொருள் பண வரவும் புதிய கல்வி முயற்சிகள் மேம்படும். பெரியோர்களின் ஆசீர்வாதமும் ஆலய தரிசனமும் ரேவதி உத்திரட்டாதி வெள்ளி சிறப்பான நாளாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 11, 13.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கம.. கமவென நறுமணம் வீசவே....



**கு**ழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தமது உடல் உறுப்புக்களைச் சீராகப் பராமரிப்பது மிக மிக அவசியம்.

ஐந்து வயதுக் குழந்தைக்கு அதன் சிறுவயதில் சொல்லிக் கொடுப்பது, 50 வயது வரைக் கூடவே வரும் அல்லவா?

உடல் உறுப்புக்களில் மிக முக்கிய பங்கு வகிப்பது வாய். வாயைச் சுத்தமாக துர்நாற்றமில்லாமல் அழகான பற்களுடன் பேணிப்பாதுகாப்பது அவசியம். குழந்தைகளுடன் அதிக கவனம் செலுத்தி, அவர்களின் பற்களைப் பராமரிப்பதும் இப்போது அவசியமாகிறது.

வாய்த் துர்நாற்றத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. நுரையீரலில் ஏற்படும் மாசு, ஈறு கொழுத்தல், பற்களில் உணவுப் பொருட்கள் தங்கியிருத்தல், வயிற்றில் அமிலம் சேர்தல், குடல் மற்றும் நுரையீரலில் வியாதிகள், தொண்டைச் சதையில் வீக்கம் (ரொன்சில்ஸ்) போன்றவை வாய்த்துர்நாற்றத்துக்கு காரணங்கள்.

உணவு சரியாகச் சமிபாடு அடையாவிட்டாலும் குடல் சரியாக இயங்காமல் போனாலும் வாய்த்துர்நாற்றம் ஏற்படும். இதைத் தடுக்கப் பல வழிகள் உள்ளன. கீழேயுள்ள அறிகுறிகள் உடனே மருத்துவரை அணுகுங்கள்.

__பற்சொத்தை:__ உமிழ் நீரில் அமிலத் தன்மை ஏற்பட்டு ஈறுகளில் இரத்தம் வரும். சிலருக்குச் சீழும் வரும். இது கொஞ்சம் ஆபத்தாகையால் உடனடியாக மருத்துவரை அணுகி வாயைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

__அதிக எச்சில் சுரத்தல்:__ இனிப்பான எச்சில் அதிகம் சுரத்தல், நாக்கு வெண்மை தட்டிப் பெரிதாக வீங்கிப் போதல், அல் சர்புண் போல் நிறையப்புள்ளிகள் காணப்படுதல் ஆகியவை இருந்தாலும் வாய்த்துர் நாற்றம் ஏற்படும்.

__நாக்கில் வெள்ளைப்படிவம்:__ அதிக மசாலா கலந்த உணவு, இனிப்பு வகைகள், ஊறுகாய் சாப்பிடுவதன் மூலம் வயிற்றில் வாயுத் தொல்லை ஏற்படும். அப்போது தோன்றும் இந்த வெள்ளைப்படிவம் துர் நாற்றத்தை ஏற்படுத்தும்.

__தொண்டைச் சதை வளருதல்:__ இந்தத் தொல்லைகளால் வளரும் குழந்தைகள் படும் வேதனை சொல்லி மாளாது. அவர்கள் பேச்சு முதற் கொண்டு எல்லாமே மாறிவிடும். இந்நோய் இருந்தால் நாக்குத் தடித்து அதிக உமிழ்நீர் சுரக்கும்.

பொதுவாக வாய்த்துர்நாற்றத்தைத் தவிர்க்க அதிக மசாலா கலந்த உணவு, பச்சை வெங்காயம், பூண்டு, இறைச்சி போன்றவற்றைத் தவிர்க்கலாம். பாலாடைக் கட்டியை ஒதுக்கிவிட வேண்டும்.


கோப்பி, மதுபானம் ஆகியவை உணவுச் சமிபாட்டைச் சீர்குலைப்பதால் இவற்றையும் தவிர்க்க வேண்டும்.

கரட், அப்பிள், நெல்லி ஆகியவற்றைக் கடித்து, மென்று தின்றால் பல்லுக்கும் துர்நாற்றம்மில்லாத சொல்லுக்கும் நல்லது.

## காய்கறிவாங்கப் போகிறீர்களா?

**அ**கத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். இது மனிதர்களுக்கு மட்டுமல்ல காய்கறிகளுக்கும் தான்.

காய்கறிகள், பழங்கள் வாங்கப் போகிறீர்களா? அப்படியென்றால் அதற்கு முன் இதைப்படித்துவிட்டுச் செல்லுங்கள்.



★ முதலில் காய்கறிகளை ஆராய்ந்து பாருங்கள். வெளிப்புறம் அடிபட்டிருந்தால் அந்தப் பக்கமே போகாதீர்கள். தொட்டுப்பார்த்து மதர்ப்பானதாகவும் ஃபிரஷ் ஆனதாகவும் இருக்கும் காய்கறி பழங்களையே தேர்ந்தெடுங்கள்.

★ குறைந்த விலைக்குத் தருகிறேன் என்று கூறி அளவை விடச் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ விற்கப்படுவதை வாங்காமல் தவிர்த்து விடுங்கள்.

★ காய்கறிகள் பச்சைப் பசேலென்று இருக்கவேண்டும். வாடிய இலைகளுடன் மஞ்சளாக இருக்கும் இலைக்கோவா, முட்டைக் கோவா போன்றவற்றை வாங்காதீர்கள்.

★ சில காய்கறிகளில் இலைகளைப் பிய்த்துவிட்டு (பீட்ரூட், முள்ளங்கி போன்றவை) வைத்திருந்தால் வாங்காதீர்கள்.

★ எந்தவொரு பழமும் அதன் சீசனில் சாப்பிடுவதற்குத்தான் நல்லது.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JK

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-04-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### ராகலை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | **திருமதி. செல்லையா,** சென்லெனாட்ஸ் கொலனி, ராகலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

---

வழங்குவது 82 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

**மோ**னிக்காவின் வழக்கறிஞர்கள் உணவருந்தியவாறே கிளின்ரனின் ஏழாவது காதலி ஜேன்டோ என்பவரைப்பற்றி குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். மோனிக்காவின் நிலையை அந்தத் தகவல் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. சூழ்ந்திருந்தவர்கள் முன்னிலையில் கண்ணீர்விட்டு அழவும் அவளால் முடியவில்லை.

ஜேன் டோவைப் பற்றி அவர்கள் மேலும் என்ன சொல்கிறார்கள் என்பதையறிய அவளுடைய காதைத் தீட்டி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் மீது கிளின்ரன் வெறி பிடித்தவர் போலவே நடந்து கொண்டார் என்று வேறு அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து அங்கிருப்பது முடியாது என்ற நிலையில் மோனிக்கா எழுந்து கழிப்பறைப்பக்கம் போனாள்.

அவளுடைய துக்கமெல்லாம் கண்ணீராக பெருகி வழிந்தது. வாய்விட்டு விசும்பினாள்.

எவ்வளவு நேரம்வரை அந்த அறைக்குள் இருக்க முடியும்? வெளியே வந்தாள். வழக்கறிஞர்கள் மத்தியில் போய் நின்றுகொண்டு தன்னை உடனடியாக வோர்ட்டர்கேற்றிலுள்ள தனது வீட்டில் கொண்டு போய் விடுமாறு கெஞ்சினாள். அங்கிருந்த எவரும் உணவின் ருசியை விட்டுவிட முடியாமலும், அதைப்பார்க்கிலும், கிளின்ரனின் அந்தரங்க லீலைகளின் சுவையை பரிமாறி ரசித்துக் கொண்டிருப்பதிலும் மூழ்கியிருந்தார்கள்.

எனவே மோனிக்காவின் கோரிக்கையை எவரும் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை எப்படியோ மேலும் கொஞ்ச நேரம் அவர்களுடைய உரையாடலை ரசிக்காவிட்டாலும் வேண்டாவெறுப்புடன் சகித்துக் கொண்டிருந்தாள்.

அவர்களுடைய உரையாடலும் உணவருந்துதலும் முடிந்தபின், அவர்கள் வெளியேற ஆயத்தமானார்கள். அவளுடைய இல்ல வாசலில் மோனிக்காவை இறக்கி விட்டனர். கண்களிரண்டும் தாரை தாரையாக கண்ணீர் சொரிய அவளுடைய வீட்டின் முன் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போய் கட்டிலில் தொப்பென்று விழுந்தாள்.

கண்ணீர் வழிந்த நிலையில் அவள்தன் முன் கதவைத் திறக்கும்போது எங்கோ ஒரு மூலையில் காத்துக் கொண்டிருந்த இரு படப்பிடிப்பாளர்கள் ஓடோடி வந்து அந்தக் கோலத்திலும் படம் பிடித்துக் கொண்டனர். அவற்றிலொரு படம் அடுத்தநாள் காலை தினசரியொன்றின் முன்பக்கம் பெரிதாகப் போடப்பட்டிருந்தது.

'காதல் குருவியின் கண்ணீரின் காரணம் என்ன?' என்ற கேள்வியுடன் அந்தப்படத்தின் கீழ் வாசகம் போடப்பட்டிருந்தது. தொடர்ந்து அழுது கொண்டு படுக்கையில் புரண்ட மோனிக்கா சற்று நேரத்துக்கெல்லாம் எழுந்து கொண்டாள்.

'என்னுயிருக்குயிராக நான் காதலித்த என் காதலன் பொய் கூறி என்னை ஏமாற்றி வந்திருக்கிறார். ஆகவே நான் தொடர்ந்தும் உயிர் வாழ்வதில் பயனில்லை? என்று கருதிய வண்ணம் நித்திரைக் குளிசைப் போத்தலை எடுத்துக் கைகொள்ளுமளவு கொட்டிக் கொண்டாள். ஆனால் என்ன நினைத்துக் கொண்டாளோ அவற்றை வாயில் போடவில்லை.

கைக்குள் அந்தக் குளிசைகளை வைத்துக் கொண்டே கட்டிலில் படுத்துத் தூங்கிவிட்டாள். விடிந்து வெகு நேரமானபின்தான் கண் விழித்தாள். ஏற்கனவே தனக்கு உளவள சிகிச்சை புரியும் டாக்டர் சூசானின் ஆலோசனைகள் அவளுக்கு நினைவுக்கு வந்தன.


'எத்தனை துன்ப துயரங்கள் வந்தாலும் இனிமேல் நான் தற்கொலை செய்ய முயற்சிக்கப்போவதில்லை. எதுவானாலும் அதனை எதிர் கொண்டு வாழ்ந்தேயாக வேண்டும்' என்ற புத்துணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

மார்ச் 17ம் திகதியன்று 'கிராண்ட் ஜூரி' விசாரணை முடிந்தபின்னரும் மோனிக்காவை சந்தித்து உரையாடுவதற்கு அவளுடைய மிக நெருங்கிய சிநேகிதி கத்தரின் ஆல்டே டேவிஸ் விரும்புவதாக அறிந்தாள். விசாரணைகளின்போது, லிண்டா ட்ரிப் தன்னைக் காட்டிக் கொடுத்ததுபோல் கத்தரினும் துரோகியாக மாறியிருப்பாளோ என்ற சந்தேகம் ஓரளவு மோனிக்காவின் மனதில் எழுந்திருந்தது.

ஆனால் கத்தரின் தன்னைக் காண விரும்புகிறாள் என்று அறிந்ததும், நிச்சயமாக அவள் என்னைக் காட்டிக் கொடுத்திருக்கமாட்டாள் என்று திடமாக நம்பினாள்.

கத்தரின் தொலைபேசி மூலம் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டு அந்தரங்கமாக தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ற ஒரு விடுதியை ஏற்பாடு செய்து கொண்டு இருவரும் சந்தித்தனர். முதலில் இருவரும் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டு அழுதனர். பின்னர் வாய்விட்டுச் சிரித்தனர். அன்றையச் சந்திப்புப்பற்றி மோனிக்கா கூறும்போது 'அன்று கத்ரினை நான் சந்தித்ததன் பின்னர் என்னுடைய மனநிலையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. உலகமே எனக்கெதிராக இருக்கிறதோ என்றுதான் இது

## மோனிக்காவின் தற்கொலை முயற்சி



வரை நான் எண்ணியிருந்தேன். ஆனால் கத்தரினைப் பார்த்தபின்னர் என்னை உண்மையாகவே புரிந்து கொண்ட ஒரு சிநேகிதி இந்த உலகத்தில் இருக்கிறாள் என்று கருதினேன். என் வாழ்க்கையில் டாக்டர் சூசான் என்னுடைய உள்ளத்தையும் உடலையும் சீராக வைத்திருக்க உதவினாள் என்றாலும் என் உயிருக்குயிரான சிநேகிதி கத்தரின் என்னுயிரையே பாதுகாத்தாள். இன்றிலிருந்து நான் இன்னும் சில காலமாவது உயிரோடு வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்குள் பட்டது.'

எப்ரல் மாதம் சோகமும் மகிழ்ச்சியும் கலந்ததொரு காலமாக மோனிக்காவுக்கிருந்தது. அந்த மாதத்தில்தான் நியூயோர்க்கில் அவளுடைய தாயார் மார்சியா பீற்றர்ட்ரெளசை மணந்து கொண்டாள். இந்த வைபவத்தில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று மோனிக்கா மிகவும் கவலைப்பட்டாள்.

இருப்பினும், அந்த மகிழ்ச்சிகரமான வைபவத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனதற்காக மறுபுறம் மகிழ்ச்சியடைந்தாள்.

தாயாரின் திருமணத்திற்காக மோனிக்கா நியூயோர்க் சென்றிருந்தால், அந்நகரத்திலுள்ள பத்திகையாளர்கள், தொலைக்காட்சிக்காரர்கள் மற்றும் வானொலி நிருபர்கள் அவளைச் சூழ்ந்து திருமண வைபவத்தை குழப்பியடித்திருப்பார்கள். அங்கு திருமண தம்பதிகளைவிட தனக்கே பெரும்பிரச்சனை தோன்றி எல்லா நிகழ்ச்சிகளையும் குழப்பியடித்திருக்கும்.

எனவே 'நான் அங்கு போகாமல் இருந்தமை தாயாரின் திருமண வைபவத்தை அமைதியாக நடத்துவதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்" இதனை எண்ணி மோனிக்கா உள்ளூர மகிழ்ந்தாள்.

வாஷிங்டன் நகரில் மோனிக்கா கிட்டத்தட்ட ஒரு சிறைச்சாலைக் கைதி போல்தான் சிலகாலம் வாழ்ந்தாள். தொடர்ந்து கமராக்களுடனும் அதிக ஒளி உமிழும் ஒளி விளக்குகளுடனும் அவளைச் சுற்றித் திரியும் படப்பிடிப்பாளர்களிடமிருந்து அந்த நகரில் அவளால் நிம்மதியாக வாழ முடியவில்லை. தன்னுடைய சொந்த அலுவல்களைக் கவனிப்பதற்குக் கூட அவளால் எங்கும் செல்ல முடியவில்லை. இதனால் மோனிக்கா தன் தந்தையார் பேர்ணி மற்றும் சிறியதாயார் பார்பரா ஆகியோருடன் சில காலம் லொஸ் ஏஞ்சல்ஸில் போய் வாழலாம் என்று தீர்மானித்தாள்.

தொலைபேசி மூலம் தனது சிறியதாயார் பார்பராவுடன் தனது எண்ணம் பற்றி கூறியதும், அவள் மிகவும் மகிழ்ந்து "உடனடியாகப் புறப்பட்டு, வா!" என்று அவளுக்கு உற்சாகமளித்தாள்.

இதனைத் தொடர்ந்து மோனிக்கா லொஸ் ஏஞ்சலுக்கு விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றாள்.

அவளுடைய தந்தையும் சிறிய தாயாரும் விமான நிலையத்தில் வந்திருந்து மோனிக்காவை வரவேற்று அவர்களுடைய இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

மோப்ப நாய்கள் எவ்வாறு மோப்பம் பிடிக்குமோ அதே போன்று 'பப்பராசி' படப்பிடிப்பாளர்கள் விமான நிலையத்திலும் பேர்ணியின் வீட்டின் முன்புறமும் சூழ்ந்து நின்று மூவரையும் மாறிமாறிப் படங்களைப் பிடித்தனர்.

இத்தடவை சிற்றன்னையும், மகளும் முன்னெப்போதும் இல்லாதவாறு மிகவும் நெருக்கமாக உறவாடினர்.

மோனிக்கா லொஸ் ஏஞ்சல்ஸில் தனது தந்தையாரின் வீட்டில் வந்திருப்பதை பார்பரா மூலம் அறிந்து கொண்ட பார்பராவின் உறவினர்கள் அங்கு வந்து மோனிக்காவுடன் மிக அன்பாகவும், ஆதரவாகவும் பழகியமை மோனிக்காவை திக்குமுக்காட வைத்தது. அவர்கள் ஏராளமான பரிசுப் பொருட்களை மோனிக்காவுக்கு கொடுத்து தங்களது அன்பையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

இதே காலகட்டத்தில் மோனிக்காவையும் அவருடைய குடும்பத்தாரையும் வெட்கித் திணறடிக்கும் காரியங்கள் வாஷிங்டனில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

*(வருவாள்)*

# பாப்பா முரசு சிறுகதை

# மோகனாவின் பேராசை!

**ஒரு** ஊரில் காளிங்கன் என்ற ஏழை ஒருவன் இருந்தான். இவன் மிகவும் நல்லவன். இவன் மனைவி மோகனாவோ பேராசைக்காரி. அத்துடன் தான் மிகுந்த அழகி என்றும், தன் கணவன் தனக்கு பொருத்தமே இல்லாதவன் என்றும் நினைத்தாள். இதனால் தன் கணவனை எப்போதுமே ஓர் எடுபிடி போல நடத்துவாள்.

ஒருநாள் மன வேதனையோடு காட்டிற்கு விறகு வெட்டச் சென்றான் காளிங்கன்.

அங்கே ஒரு சிறுத்தை ஒன்று கிழவி ஒருத்தியை துரத்திக் கொண்டு



வந்தது. அலறியபடியே ஓடி வந்தாள் கிழவி.

காளிங்கன் சட்டென்று தன் கோடாலியைத் தூக்கி சிறுத்தையின் மண்டையில் அடித்தான். அடிபட்ட சிறுத்தை கத்தியபடியே ஓடிவிட்டது.

அந்தக் கிழவி காளிங்கனுக்கு நன்றி சொல்லி விட்டு மூன்று விதைகளைக் கொடுத்தாள்.

"இந்த விதைகளை நீ என்ன வேண்டும் என்று நினைத்துக் கொண்டு கீழே போடுகிறாயோ அது கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு மறைந்தாள் கிழவி.

மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்த காளிங்கன், மனைவியிடம் விஷயத்தைச் சொன்னான். உடனே இப்பவே போட வேண்டும் என்று அவசரப்பட்டாள் மோகனா.

"வாழ்க்கைக்கு போதுமான பொன் வேண்டும் என்று கேட்கப் போகிறேன்."

என்றான் காளிங்கன்.

"முதலில் நீ ஆண் அழகனா மாறணும் பிறகு தான் பொன், பொருள் எல்லாம்," என்றாள் மோகனா.

"ஏன் எனக்கென்ன குறைச்சல்?" என்றான் காளிங்கன்.

"பணம், பொருள் வந்தவுடன் நான் இளவரசி மாதிரி இருப்பேன். அப்போ நீ இந்த மூஞ்சியுடன் இருந்தா நல்லா இருக்காது" என்றாள் மோகனா.

இப்படி சண்டை முற்றவே ஆத்திரமடைந்த காளிங்கன் சண்டையை நிறுத்து என்பதற்காக, "முடி முடி" என்று சொல்லவும், அவன் கையிலிருந்த விதையை மோகனா பிடுங்க முயற்சிக்க கீழே விழுந்தது விதை.

சர்ரென்று வீடு முழுவதும் முடி நிரம்பி வழிந்தது.

இருவர் உடம்பிலும் நீள, நீளமான முடிகள் பார்ப்பதற்கு மிகவும் கோரமாக காட்சியளித்தனர் இருவரும்.

பயந்து போன மோகனா, "ஐயோ! இந்த முடி வேணாம்னு சொல்லி இன்னொரு விதையை போடுங்க," என்றாள்.

அப்படியே செய்தான் காளிங்கன்.

அடுத்த நிமிடம் முடிகள் அனைத்தும் மறைந்தது. தங்கள் உடம்பில், புருவத்தில், கண் இமை, தலையில் இருந்த எல்லா முடிகளும் மறைந்து, பார்ப்பதற்கு இன்னும் கோரமாக இருந்தனர் இருவரும்.


திடுக்கிட்டுப் போன மோகனா 'ஓ' என்று அழுதபடியே "தேவையான முடிகள் வேண்டும்" என்று சொல்லி அந்த விதையை கீழே போடுங்கள்." என்றாள்.

அப்படியே செய்தான் காளிங்கன். இப்போது இருவரும் பழைய உருவத்திற்கு வந்தனர்.

முகத்தில் அடித்துக் கொண்டு 'ஓ'வென்று அழுதாள் மோகனா.

"என்னோட பேராசையாலும், அழகின் மீது கொண்ட ஆணவத்தாலும் நான் நமக்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை வீணாக்கி விட்டேன். என்னை மன்னிச்சிடுங்க. இனிமே நான் உங்க அடிமை. உங்களுக்கு நல்ல மனைவியாக வாழ்வேன்," என்றாள் மோகனா. அப்படியே செய்தாள். இருவருக்கும் வாழ்க்கை இனித்தது.

மனமகிழ்ச்சி பணத்தில் இல்லை. அவரவர் மனதை பொருத்தது. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதை உணர்ந்து இன்புற்று வாழ்ந்தனர் காளிங்கனும், மோகனாவும். ■



ஐஸ்கிறீம் சாப்பிட ஆசைப்படும் இவருக்கு அதை அடைய வழி காட்டுங்கள்.



# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **14.04.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **390**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 387

பரிசுக்குரியவர்:
மே. சிவப்பிருந்தன்,
தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சு. சிறிகரிபாலா, இந்துத் தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம். | வி. ஆகாஷ்நேத்தா, விச்சர்லி சர்வதேச பாடசாலை, கொழும்பு-07. |
| பாத்திமா றுஸ்கா நளீர், மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), மூதூர். | எஸ். ரமீஷா, தமிழ் மகா வித்தியாலயம் (தே.பா.), பசறை. |
| க. ரமேஸ், தமிழ் மகா வித்தியாலயம், இராகலை. | கே. சதீஸ்குமார், மோதர இந்துக் கல்லூரி, கொழும்பு-15. |
| பி. ராஜ்மோகன், ஜென் பொஸ்கோ கல்லூரி, அட்டன். | தி. டெஸ்மன், பியந்தா சிறுவர் இல்லம், பாசிக்குடா, கல்குடா. |
| என். தனுஷன், புனித அந்தோனியார் சர்வதேச பாடசாலை, வத்தளை. | எல். மயூரி, தம்பேதென்ன, அப்புத்தளை. |

# தலைநகர்த் தகவல்கள்

* இஸ்ரேல் நாட்டுத் தலைநகர் ஜெருசலேம். இதற்கு 'அமைதி நகர்' என்று பெயருண்டு.

* ஆர்ஜென்டினா நாட்டுத்தலைநகர் போனேர்ஸ் அயர்ஸ். இதற்கு 'நல்ல காற்று' என்று பொருள்.

* உலகிலேயே மிகவும் உயரமான தலைநகர் லாசா. இது திபெத் நாட்டின் தலைநகரமாகும்.

* இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில்தான் உலகிலேயே மிகப்பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ளது.

* இத்தாலியின் தலைநகர் ரோமில்தான் உலகிலேயே மிகப்பெரிய தேவாலயம் அமைந்துள்ளது.

* ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட், டென்யூம் நதியில் மேல் அமைந்திருக்கிறது.

* தினசரிப் பத்திரிகைகளே இல்லாத தலைநகர் பாத்ரஸ்ட், இது காம்பியா நாட்டின் தலைநகர் ஆகும்.

* உலகிலேயே மிகவும் அகலமான வீதி, பிரேஸில் நாட்டுத் தலைநகர் பிரேஸிலியாவில் அமைந்துள்ளது.

* உலகிலேயே குப்பைகள் நிறைந்த நகரமென நேபாளத் தலைநகர் கட்மண்டு குறிப்பிடப்படுகிறது.

* தாய்லாந்துத் தலைநகரான பாங்கொக் நான்கு முறை பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

* சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோம் 14 தீவுகளால் ஆனது.

* உலகிலேயே மிகப்பழமை வாய்ந்த தலைநகர், சிரியத் தலைநகரான டமஸ்கஸ் தான்.

# நீர்க்கீரி



**ஆ**டர் எனப்படும் நீர்க்கீரிகள் நிறைய விஷயத்தில் மனிதர்களைப் போலவே இருக்கும். இளம் குட்டிகள் மிகவும் சுட்டிகளாக இருக்கும். இவைக்குப் பிடித்த விளையாட்டு எது தெரியுமா?


சறுக்கு மரம் (ஸ்லைடிங் போர்ட் என்று கூறப்படும் சறுக்கீஸ்) விளையாடுவது. சகதி நிறைந்த ஆற்றங்கரைகள், பனி மலைகள்மீது மணிக்கணக்கில் ஏறி சர்..ர்.. என்று இவை சறுக்கிக் கொண்டே வரும். இந்த விளையாட்டை நீர்க் கீரிக்குட்டிகள் மிகவும் விரும்பும்.

தங்கள் குழந்தைகளுடன் இந்த விளையாட்டில் சேர்ந்து கொள்ளும் தாய்க்கீரிகள், தங்கள் குட்டிகளைத் தூக்கிப் போட்டு கீழே விழுவதற்குள் பிடித்துக் கொள்ளும்.

# ஏதென்னா



கிரேக்க புராணங்களில் அறிவு மற்றும் வீரத்திற்காக ஏதென்னா என்ற பெண் தேவதையை வணங்குகின்றனர். கடவுள்களின் மன்னர் சீயஸ் மூலம் வளர்ந்த நிலையில் முழு ஆயுத பாணியாக இவள் பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஏதென்ஸ் நகரில் 'அக்ரோ பொலிஸ்' என்ற இடத்தில் உள்ள ஏதென்னா கோயில் 'பார்க்கினன்' என அழைக்கப்படுகிறது. பார்க்கினோஸ் என்றால் கிரேக்க மொழியில் 'திருமணம் செய்து கொள்ளாத கன்னிப்பெண்' என்று பொருள். இந்தப் பெண் தேவதையின் பெயரில்தான் ஏதென்ஸ் நகரம் உருவானது. ■



செய்து பாருங்கள்

# கடலை அணிலார்

<u>தேவையான பொருட்கள்:</u>

நீளமான கடலைக் கோது ஒன்று, சின்னக் கடதாசி அட்டை ஒன்று, பசை, வூல், வெள்ளை நிறப்பெரிய பொட்டுக்கள் இரண்டு, கறுப்பு நிறச் சிறிய பொட்டுக்கள் இரண்டு.

<u>செய்முறை:</u>

1. கடதாசி அட்டையில் இருந்து காதுகளும் கால்களும் வெட்டி, படத்தில் இருப்பது போல் ஒட்டிக் கொள்ளுங்கள்.
2. சின்னப் பொட்டைப் பெரிய பொட்டில் ஒட்டி, கண்களை அந்த இடத்தில் ஒட்டிக் கொள்ளுங்கள்.
3. வூலைக் கொண்டு வால் தயார் செய்து ஒட்டவும். இப்போது கடலை அணிலார் தயார். ■

அவரைப் பார்த்ததும் சிரித்தான்.

"என்ன சார் உங்க விசாரணை கிச்சன் வரைக்கும் வந்துடுச்சா...?"

'இவன் சிரிப்பும் கேள்வியும் ஒரு மார்க்கமாய்த்தான் இருக்கிறது' என்று யோசித்தபடியே "செபாஸ்டியன், ரவி உனக்கு ரெண்டுநாள் முன்னாடி ஒரு வளையம் கொடுத்தானே, அது எங்க...?"

"என்ன சார் ஏதேதோ கேட்கிறீங்க..."

"கேட்கறதுக்குப் பதில் சொல்லுப்பா..."

"நேத்து வரைக்கும் நான் தான் சார் போட்டிருந்தேன். அந்த சினிமா யூனிட் காரங்கள்ல ஒருத்தர், ரொம்ப நல்லாயிருக்குதே எனக்கு கொடுன்னு கேட்டாரு கொடுத்துட்டேன்..."

"யாரு அவரு?"

"காமிரா அஸிஸ்டெண்ட் சார், பேரு சதான்னு நினைக்கறேன்.."

இன்ஸ்பெக்டர் ராஜாவின் மூளை வேகமாய் கணக்குப் போட்டது.

சதா காமிரா அசிஸ்டெண்ட்.

தோண்டியெடுக்கப்பட்டது வீடியோ காமிரா.

"மிஸ்டர் சதா உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.." என்றார்.

அவன் அசருகிறவனாய்த் தெரியவில்லை.

"என்கிட்டயா, என்ன பேசணும் இன்ஸ்பெக்டர்..?"

"நிறைய பேசணும் தனியா...?"

"ஓ காட்... என்னை இந்த கொலையில சம்பந்தப்படுத்திடுவீங்க போலிருக்கு..?"

"நோ.. நோ.. அது நீங்க சொல்ற பதில்களை பொறுத்திருக்கு.."

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர், நான் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். தொழில் கத்துக்கறதுக்காக இவர்கிட்ட அசிஸ்டெண்டா சேர்ந்திருக்கேன்..."

"எல்லாம் இருக்கலாம் மிஸ்டர் சதா, என்கூட கொஞ்சம் கோ-ஆப்ரேட் பண்ணீங்கன்னா நல்லது-"

"சார் என்ன சொல்றீங்க..? என்ன ஆதாரத்துல நீங்க என்னை விசாரிக்கணும்ன்னு நினைக்கறீங்க..?"

"ஆதாரம் இருக்கு மிஸ்டர் சதா- இந்த காப்பு யாருது தெரியுதா...?"

"தெரியுமே! செபாஸ்டியன்து, நேத்து ஷூட்டிங்கப்ப நான் போட்டிருந்தேன், அதுக்கப்புறம் வேற ஒருத்தர் கேட்டார் கொடுத்தேன்.."

"யார் அவரு?"

"காரணம் இருக்கு-"

"மிஸ்டர் ராஜா யு.ஆர் க்ராஸிங் யுவர் லிமிட்"

"மிஸ்டர் நிவாஷ்! நீங்க எத்தனை மணி வரைக்கும் சுபா ரூம்ல இருந்தேன்னு சொன்னனீங்க-?

"ஏன்.. பன்னிரெண்டு மணி வரைக்கும்.." சொன்னவன் மற்றவர்களைச் சங்கடமாகப் பார்த்தான்.

ராஜா அந்த அறையில் இருந்த டெக்கை நெருங்கி ரீவைண்ட் செய்து மறுபடியும் போட்டார்.

நிவாஷ் இயங்கிக் கொண்டிருக்க-

மணிக்கட்டில்-

கடிகாரம் மட்டும்-

காமிரா-

மணிக்கட்டிற்குப் போக-

மணி இரண்டு,

திடுக்கிட்டு அனைவர் முகத்தையும் பார்த்தான்.

"மிஸ்டர் ராஜா, இராத்திரி லேசா லிக்கர் சாப்பிட்டிருந்தேன்-அதனால மணியை சரியா கவனிக்காம இருந்திருப்பேன்-"

"இந்த வளையம்.."

இன்ஸ்பெக்டர் எடுத்து நீட்ட-

மறுபடியும் நிவாஷின் முகத்தில் அதிர்ச்சி ரேகை.

"இது எப்படி உங்ககிட்ட?"

"நீங்களும் பீட்டருமா ஒரு புது ஜீன்ஸ் பேண்ட்டையும், ஜெர்க்கினையும் புதைச்சிருந்தீங்களே. அந்த இடத்துல கிடந்தது-"

நிவாஷ் வியர்த்திருந்தான்.

"மிஸ்டர் ராஜா என்ன சொல்றீங்க,

05

# நிழல் தொரைகள்



நானும் பீட்டரும்-"

"யெஸ்-போஸ்ட் மார்ட்டத்துல அவங்க இறந்த நேரம் இரண்டு பத்து. மூணுபேர் அவளையும், அம்மாவையும் கெடுத்திருக்கீங்க, நீங்க ஒரு சாடிஸ்ட் பர்வெர்ட் உங்களோட கூட்டு சதாவும், பீட்டரும். நீங்க வீடியோவில ஷூட் பண்ணது தெரிஞ்சு அவங்க ஆர்ப்பாட்டம் பண்ண, கொன்னுட்டீங்க, நீங்க நடிக்கிற பொண்ணுகூட நீலப்படம் எடுத்து வெச்சுக்கறது உங்களோட வாடிக்கை.. பட் நேத்து கொலையில முடிஞ்சிருச்சு"

நிவாஷ் முகம் வியர்க்க அமைதியாய் இருந்தான்.

## சுப்ரஜா

"ஜெர்கின் போட்ட இளைஞன் வந்தான், ரூம் நம்பரைக் கேட்டான், ப்ளாக் மாஜிக், கோழித்தலை எல்லாம் உங்க ஸ்கிரீன் ப்ளே, ஆன்ட்டி-ஸ்மெல் ஸ்ப்ரேயை மாடி முழுக்க ஸ்ப்ரே பண்ணது நீங்க, உங்க மேல சந்தேகம் வந்த உடனேயே இந்த அறைக்கு வரதுக்கு முன்னாடி ஓட்டல் லாபியிலிருந்து உங்க ரூமோட டூப்ளிகேட் கீயை வாங்கிகிட்டு போய் 'ஸர்ச்' பண்ணிட்டுத் தான் வரேன், புது ஜெர்கின், ஜீன்ஸ் வாங்கினதுக்கான ஊட்டி கடையோட பில், டிஸ்போஸ் பண்ணாம படுக்கைக்கு கீழே நீங்க வெச்சிருந்த 'ஸ்ப்ரே கன்' எல்லாத்தையும் எடுத்துட்டேன்-"

"ஓ காட்!"- என்று தலையில் கையை வைத்து உட்கார்ந்தான்.

"மிஸ்டர் நிவாஷ் போலீஸை அவ்வளவு திறமையில்லாதவங்கன்னு நினைச்சுடாதீங்க.."

"ராஜா யுவார் க்ரேட்.. ஐ அட்மிட்" என்றான் டாப் ஸ்டார் நிவாஷ்.

முற்றும்

மூளைகணக்குப் போட,

சதாவைத் தேடிப் போனார்.

அவன் காமிராமேனோடு நின்று பேசிக்கொண்டிருந்தான்.

ஷார்ட்ஸ் ஒன்றையணிந்து வெள்ளை பனியன் ஒன்று போட்டிருந்தான்.

ராஜாவிற்குள் ஓர் எச்சரிக்கை உணர்வு எழ-

'கொலையில் இவனுக்கும் நிச்சயம் சம்பந்தம் இருக்கும்' என்று மனதினுள்ளே எங்கோ மூலையில் ஒரு பட்சி சொன்னது.

நேரே சதாவிடம் பேச்சு கொடுக்காமல் காமிராமேனிடம், "ஏன் சார் சார் நீங்க நேற்று ராத்திரி அந்தப் புதுமுகம் சுபாவை பார்த்தீங்களா..?" -என்றார்.

காமிராமேன், "இல்ல சார்... டைரக்டர் ரூமுக்கு பக்கத்து ரூம்தான் என்னோடது. ஷெட்டியூல் முடிஞ்சு ரூமுக்குள்ள போனவன் காலையில நீங்க வநத உடனே தான் வெளியில வந்தேன்-" என்றான்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே சதா "ஒரு நிமிஷம் சார்" என்று நகர்ந்தான்.

ராஜா எதிர்பார்த்தது இதைத்தான்.

சதா சொல்ல அதிர்ந்து போனார்.

"என்ன சொல்றீங்க.. நல்லா ஞாபகப் படுத்தி சொல்லுங்க, அவர் கிட்டயா கொடுத்தீங்க..?"

"யெஸ்"- என்றான் சதா அழுத்தந் திருத்தமாய்.

டைரக்டர், தயாரிப்பாளர், டி.எஸ்.பி., சேர்மன், நிவாஷ் எல்லோரும் ஒரே அறையில் உட்கார்ந்திருக்க-

ராஜா, "மிஸ்டர் நிவாஷ் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.." என்றார்.

"நான் தான் ஏற்கெனவே எல்லாத்தையும் சொல்லிட்டேனே-"

"இல்ல? புதுசா ஒரு விவகாரம் கிளம்பியிருக்கு-"

ராஜா சொன்னதும் நிவாஷ் சலித்தபடியே எழுந்து, "வாங்க வெளியிலே போய்ப் பேசலாம்!" என்றான்.

ராஜா சிரித்து, "இல்ல இங்கேயே பேசலாம்-" என்றான்.

நிவாஷின் முகம் இறுகியது.

"மிஸ்டர் நிவாஷ் அந்தப்பய பீட்டர் நல்லாவே ரீல் விட்டிருக்கான்!"

"அதை எதுக்கு என்கிட்ட சொல்றீங்க..?"

அடுத்த வார முரசில் அமோக ஆரம்பம்

எழுதுவது யார்? தொடர் என்ன? என்பவை சஸ்பென்ஸ்

# விஷு வருடப்பிறப்பு

## திருக்கணித பஞ்சாங்கப்படி:

விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 31ம் திகதி (13.04.2001) வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி 13 நிமிடத்தில் 'விஷு' என்னும் பெயருடைய புது வருஷம் பிறக்கின்றது. இதன் உதயாதி நாழிகை 44 நாடி-05 வினாடியாகும். அன்று நட்சத்திரம் மூலம், திதி அபரபட்ஷ ஷஷ்டி, அமிர்தயோகம். விஷு வருஷம் 60 வருட சுற்று வட்டத்தில் 15வது வருஷமாகும்.

வெள்ளிக்கிழமை இரவு 8 மணி 13 நிமிடம் தொடங்கி பின்னிரவு 4 மணி 13 நிமிடம்வரையுள்ள சுபவேளை மேட சங்கிரமன புண்ணியகாலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் தனுசு ஆகும்.

## வாக்கிய பஞ்சாங்கப்படி:

விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 31ம் திகதி (13.04.2001) வெள்ளிக் கிழமை இரவு 10 மணி 57 நிமிடத்தில் புதிய விஷு வருஷம் பிறப்பதாகக் கூறப்படுகிறது. அன்றைய நட்சத்திரம் மூலம், திதி அபரபட்ச ஷஷ்டி, அமிர்தயோகம். உதய லக்கினம் விருட்சிகம்.

வெள்ளிக்கிழமை 5 மணி 45 நிமிடம் தொடங்கி பின் இரவு 2 மணி 45 நிமிடம் வரையுள்ள காலம் விஷு புண்ணிய காலமாகும்.

## மருத்துநீர் தேய்த்தல்

புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்தல் வேண்டும். தலையில் புங்கம் இலையும் காலில் ஆல் இலையும் வைத்துக் கிழக்கு அல்லது வடக்குமுமாக நின்று பெரியவர்களைக் கொண்டு மருத்துநீர் தேய்ப்பித்தல் வேண்டும்.

## புத்தாடை அணிதல்

மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்தபின் வெண் மஞ்சள் பட்டாயினும் அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்தல் உத்தமம்.

## தரிசனம்

நித்திய கருமானுஷ்டானம் முடித்துக் கண்ணாடி, தீபம், பூரணகும்பம், இஷ்டகுல தெய்வங்களின் திருவுருவப்படங்கள் என்பவைகளைத் தரிசித்தல் நன்று. தாய், தந்தை, பெரியோர்களிடம் ஆசி பெறுதல் மிகவும் நன்மை தரும்.

## தெய்வ வழிபாடு

விநாயகர் முதலான இஷ்டகுல தெய்வங்களின் வழிபாட்டுடன் தங்கள் ஊரில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வதுடன் பொங்கல், பூசைகளை நடத்துதல் சிறப்பைத் தரும். அத்தோடு மறுநாட் காலை சனிக்கிழமை உதயத்தில் சூரிய பகவானுக்கு பொங்கல் செய்வது மேன்மையைக் கொடுக்கும்.

## உணவு

அறுசுவை உண்டிகளுடன் பாலன்னம், புளியோதரை, நெல்லிக்காய் துவையல் என்பவைகளையும் சேர்த்து உணவு உட்கொள்ளுதல் நன்று.

## ஆபரணம்

வைரம் பதிக்கப்பெற்ற ஆபரணங்கள் அணிவது சிறப்பைத் தரும்.

## பொங்கல்

14.04.2001 சனிக்கிழமை காலை 5 மணி 15 நிமிடம் தொடங்கி 6 மணி 45 நிமிடத்திற்குள் சூரியனுக்குப் பொங்கலிட்டு இஷ்ட குல தெய்வங்களை வணங்கிட சிறந்த சுப வேளையாகும்.

## கைவிஷேடம்

14.04.2001 சனி காலை 6 மணி 34 நிமிடம் தொடங்கி 8 மணி 10 நிமிடம் வரை.

15.04.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி 34 நிமிடம் தொடக்கம் 7 மணி 10 நிமிடம் வரையுள்ள சுப நேரம்.

## விருந்துண்ணல்

14.04.2001 சனி காலை 6 மணி 34 நிமிடம் தொடக்கம் 8 மணி 10 நிமிடம் வரை.

8.04.2001 புதன் இரவு 8 மணி 08 நிமிடம் தொடக்கம் 8 மணி 56 நிமிடம் வரையுள்ள சுபநேரம்.

## பெரியோர்களை சந்தித்தல்

15.04.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி 34 நிமிடம் தொடங்கி 7 மணி 46 நிமிடம் அல்லது 18.04.2001 புதன்கிழமை இரவு 8 மணி 08 நிமிடம் தொடங்கி 8 மணி 56 நிமிடம் வரையுள்ள சுபநேரம்.

குறிப்பு: நேரம் இலங்கை புது நேரப்படியான கணிப்பு.



சித்திரை வருஷப்பிறப்பினை கேரள மக்கள் 'விஷுக்கனி காணல்' என்று கொண்டாடுவர். வருடப்பிறப்புக்கு முதல் நாள் இரவு, பூஜை அறையைத் துப்புரவு செய்து, திருவிளக்கின் முன் கோலமிட்டு, பூ, பழம், வெற்றிலை, பாக்கு, அணிகலன்கள், முகம் பார்க்கும் கண்ணாடி போன்றவற்றை வைப்பர்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலை வீட்டில் உள்ள பெரியவர் ஒருவர் எழுந்து குளித்து, பூஜை அறையில் திருவிளக்கை ஏற்றி, வழிபாடு செய்தபின், வீட்டிலுள்ளோர் அனைவரையும் எழுப்பி வருவார். அவர்கள் கண்களைத் திறக்காமல் மூடிய நிலையிலேயே வந்து, பூஜை அறையில் வைத்துள்ள விளக்கின் அருகில் வந்து கண்களைத் திறப்பர்.

புதுவருட தினத்தன்று முதலில் கடவுளின் திருவுருவப் படங்களையும் ஏற்றிய விளக்கினையும்' மங்கலப் பொருட்களையும் பார்ப்பதால் அந்த ஆண்டு மிகவும் மகிழ்ச்சி தரும் என்ற நம்பிக்கை உள்ளது.

# தமிழ் ஆண்டுப் பெயர்கள்

அறுபடை வீடுகளில் நான்காவதாகக் குறிப்பிடப்படும் திரு ஏரகம் என்பது சுவாமிமலை. இக்கோவிலுக்கு அறுபது படிகள் ஏறிச் சென்று மூலஸ்தானத்தை அடைய வேண்டும். இப்படிகள் ஒவ்வொன்றுக்கும் தமிழ் ஆண்டுகளின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

பழைய நாடகக் கதைகள், டிராமா வடிவில் சீன்கள், சீன்களாகப் பிரிக்கப் பட்டு, பாட்டும் வசனமுமாக முதன் முதல் எழுதப் பட்டதும், அச்சிடப்பட்டதும் மேடையேற்றப்பட்டதும் ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளால்தான் என்று சொல்லப்படுகிறது. அதனால் இவர் தமிழ் நாடக மலர்ச்சியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

இவரிடம் அசுர ஆற்றல் இருந்தது என்றும், ஒரே இரவில் ஒரு நாடகத்தை சீன் பிரித்து அமைத்து, பாட்டு, வசனம் எல்லாம் எழுதி முடித்துவிடுவார் என்றும் இவர் மாணவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

புதுக்கோட்டையிலிருந்து சங்கரதாஸ் சுவாமிகள் மதுரை வந்து, அங்கு சமரச சன்மார்க்க நாடக சபை, தத்துவ மீனலோசனி வித்துவபால சபா ஆகிய நாடகக் கம்பனிகளை அமைத்து நாடகம் நடத்தி நஷ்டம் அடைந்தார்.

பின்னர், வேறொருவர் ஆரம்பித்த மதுரை பால மீன ரஞ்சனி சபையில் நடிப்பாசிரியராக இருந்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு, இந்தக் கம்பனி கலைந்து மதுரை ஒரிஜினல் ஸ்ரீ விநோத பாலர் நாடக சபா என்ற பெயரைப் பெற்றது. இந்தக் கம்பனியிலும் சங்கரதாஸ் சுவாமிகள் நாடகாசிரியராகக் கடமையாற்றினார்.

ஆதியில் இந்தக் கம்பனியிலிருந்து சுவாமிகளிடம் பயிற்சி பெற்று வெளியேறியவர்கள் தாம், நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, டி.கே.எஸ்.சகோதரர், யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை, எம். ஆர்.ராதா, எம்.கே.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன் போன்றவர்கள் ஆவர்.

பாரதியார் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி மறைந்தார். ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் அடுத்த ஆண்டு, அதாவது 1922 நவம்பர் 13ஆம் திகதி காலமானார். ஒருவகையில் இருவரும் சமகாலத்தவர்தாம்.

சங்கரதாஸ் சுவாமிகள் அரங்கேற்றிய நாடகங்களைப் பாரதியார் புதுச்சேரியில் பார்த்திருக்கிறார். பாராட்டியும் இருக்கிறார். கண்டித்தும் இருக்கிறார். நாடகத்துக்காக ஏற்கனவே புராணத்திலும், இதிகாசத்திலும், இலக்கியத்திலும் உள்ள மூலக் கதைகளை மாற்றியமைப்பதைப் பாரதியார் விரும்பவில்லை. அதே வேளையில், அநாவசியமான இடங்களில் எல்லாம் பாடல்களைப் புகுத்தி நாடகத்தின் 'டெம்போ'வைக் குறைப்பதையும் பாரதியார் கண்டித்திருக்கிறார். அப்படியான கட்டங்களைப் பார்த்து ஆத்திரமும் கொண்டிருக்கிறார்.

இந்த விவரங்களை எல்லாம் ஓவியர் கொண்டையா ராஜு என்னிடம் எடுத்துக் கூறினார். 'கோவலன்' நாடகத்தில் காணப்பட்ட வழுக்களை நான் சுட்டிக் காட்டிய பின்னர், தொடர்ந்து அடிக்கடி நிகழ்ந்த சம்பாஷணைகளில், பாரதியார் பற்றிய குறிப்புகள் வெளிவந்தன. எட்டய



புரத்துக்கு அயல் ஊரான கோவில்பட்டியைச் சேர்ந்தவராக ஓவியர் கொண்டையா ராஜு விளங்கியமையால், அவர் பாரதியாரைப்பற்றி நிறையத் தெரிந்து வைத்திருந்தார். அவரிடம் பாரதி கவிதை நூலும் இருந்தது. அவர் ஒரு பாரதி பக்தராகவே காணப்பட்டார்.

பாரதியாரையும் நாடகங்களையும்பற்றி ஓவியர் கொண்டையா ராஜு கூறிய விவரங்கள் அப்போது என் மனதில் பெரிய பதிவு எதையும் ஏற்படுத்தவில்லை. பாரதியாரைப்பற்றி அறிந்து கொள்ளும் கன்னிக் கால கட்டமாகையால் கொஞ்சம் ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டேன். அவ்வளவுதான்.

பின்னர் பாரதியாரைப்பற்றி அறிந்து கொண்ட போதுதான், ஓவியர் கொண்டையா ராஜு என் மாணவப் பருவத்தில் கூறிய கருத்துகளின் காத்திரம் எனக்குப் புலப்படலாயிற்று.

பாரதியாரோடுகூட வாழ்ந்து பழகியவர் அவருடைய சிஷ்யரான கனக சுப்புரத்தினம். இவர்தான் பின்னர் புரட்சிக் கவி பாரதிதாசன் ஆகப்பரிணமித்தவர் ஆவார்.

பாரதியார் நாடகம் ஒன்றினைப் பார்த்த விபரத்தை பாரதிதாசனார் பாடி வைத்திருக்கிறார். அவர் பார்த்த நாடகம் ஒரு வேளை சுவாமி சங்கரதாஸ் புதுச்சேரியில் மேடையேற்றிய, நாடகங்களில் ஒன்றாகத்தான் இருக்குமோ?

நான் இக்கட்டுரைத் தொடரில் தந்த விவரங்களைக் கொண்டு ஆராய்ச்சி மாணவர்கள் மோப்பம் பிடித்து தொடர வேண்டிய துறை இதுவாகும்.

பாரதியார் மாபெரும் கவிஞராக விளங்கினார். சிறந்த வசனகர்த்தாவாக, பத்திரிகை எழுத்தாளராக விளங்கினார். சங்கீதத்திலும் அவருக்குப் பரிச்சயம் இருந்தது. தாம் எழுதிய பாடல்களைத் தாமே அற்புதமாகப் பாடி வந்தார்.

ஓவியம் தீட்டுவதிலும், படங்கள் வரைவதிலும்கூட அவர் ஈடுபட்டிருந்தார். தமிழ்ப் பத்திரிகையில் முதன் முதல் வெளிவந்த அரசியல் கூடார்த்த சித்திரம் (Political Cartoon) பாரதியாரின் படைப்பாகவே வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (பத்திரிகையாளன் பாரதியைப் பற்றி இத்தொடரில் பின்னர் விரிவாகக் குறிப்பிடப்படும்).

மேற்கூறிய துறைகளில் எல்லாம் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பாரதியார் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக நாடகங்கள் எழுதவில்லை. 'ஜகத் சித்திரம்', 'விடுதலை' போன்ற தலைப்புகளில் 'குட்டி' நாடகங்களை மட்டும் அவ்வப் போது எழுதியிருக்கிறார். அவற்றைக்கூட 'ஸ்கிற்' (Skit) என்ற வகையில்தான் சேர்க்கலாம்.

பாரதியார் நாடகங்கள் எழுதாவிட்டாலும், ஓவியர் கொண்டையா ராஜுவின் கூற்றுப்படி, அவர் பெரும் நாடக இரசிகராக, நாடக ஆதரவாளராக, நாடக விமர்சகராக விளங்கியிருக்கிறார்.

புதுச்சேரியில் அவர் வாசம் செய்த போது, அங்கு அரங்கேறிய நாடகங்களை



எல்லாம் தமது நண்பர் குழாத்துடன் சென்று பார்த்திருக்கிறார். பார்த்த நாடகங்களில் குற்றங்குறை காணப்பட்டால் பாரபட்சமின்றிப் பகிரங்கமாக எடுத்துக் கூறி விமர்சித்திருக்கிறார்.

அந்தக் காலத்தில் நாடகங்கள் என்றால் பெரும்பாலும் பாடல் மயமாகவே இருக்கும். ஆரம்பம் முதல் இறுதி வரை குறைந்தபட்சம் அறுபது, எழுபது பாடல்களாவது பாடப்படும். எழுவதற்கு ஒரு பாட்டு, உட்காருவதற்கு ஒரு பாட்டு, பூக் கொய்வதற்கு ஒரு பாட்டு, ஆளோடு ஆள் வாதிடுவதற்கு ஒரு பாட்டு, மணத்திக்கு ஒரு பாட்டு, மரணத்துக்கு ஒரு பாட்டு என்று பாட்டுகளாலேயே நாடகக் கதை நத்தை வேகத்தில் நகரும். வசனம் வெகு குறைவாகவே இருக்கும்.

கதாநாயகனை டிராமாவில் 'ராஜ பார்ட்' என்று சொல்வார்கள். கதாநாயகியை 'ஸ்திரீ பார்ட்' என்று சொல்வார்கள். எந்த நாடகத்திலும் ராஜபார்ட்தான் முதலில் அரங்கிற்கு வருவார். அவர் வருமுன்னர் சைட் சீனுக்குள் பாதி மறைந்து நின்று கொண்டே முதலில் உச்ச சுருதியில் குரல் கொடுப்பார்.

நாடகக் கம்பனிகள் மதுரை மாநகரிலேதான் முதலில் அமைக்கப்பட்டன என்ற காரணத்தினாலோ, என்னவோ, பெரும்பாலான ராஜபார்ட்டுக்கள் மேடைக்கு வருமுன்னர்-

"பாவன மதுரா நிலையே
பாண்டிய ராஜன் அவையே" என்ற பாடலை தர்பார் ராகத்தில் பாடிக் கொண்டுதான் வருவார்கள்.

முதல் வருகைக்கு தர்பார், அடாணா, ஸ்ரீராகம், பேகடை போன்ற கம்பீர ராகங்களில் ஆக்கப்பட்ட பாடல்களே ராஜபார்ட்டினாலும், ஸ்திரீ பார்ட்டினாலும் பாடப்படுவது உண்டு. முதல் பாட்டிலேயே கொட்டகை கலகலத்துக் களை கட்டிவிடும். இரசிகர்கள் ஹா ஹூ என்று ஆர்ப்பரித்து, கரகோஷம் செய்து, சீட்டி அடித்து, "வன்ஸ் மோர்!" என்று கூச்சல் போட ஆரம்பித்து விடுவார்கள்.

அப்புறம் ஒரே பாட்டு ஜமாதான்!

நாடகம், சினிமா உலகில் புகுந்து, படமான ஆரம்பகாலத்திலும், இந்தப் பாட்டு மோகம் அபாரமாக இருந்து வந்தது. அந்தக் காலத்தில் வெளிவந்த சினிமாப் படங்களுக்கான விளம்பர நோட்டீஸ்களில்-

'52 இனிய கீதங்கள் கொண்ட மயான காண்டம்' 'வி.ஏ.செல்லப்பா, மிஸ் டி.பி. ராஜலட்சுமி நடித்தது'-

'கர்னாமிர்த கீதங்கள் 60 கொண்ட கிருஷ்ண லீலா மாஸ்டர் டி.ஆர். மகாலிங்கம், மிஸ் பி.எஸ்.ஞானம் நடித்தது-' என்பன போன்ற வாசகங்கள் இடம் பெறுவது வழக்கம்.

மேல்நாட்டுப் பாணியை ஒட்டி நாடகம் 'டிராமா' என்று உருப்பெற்ற பின்னர் இப்படி பாடல் மயமாக இருப்பதும், தேவையற்ற இடங்களில் எல்லாம் பாடல்களை அநாவசியமாகப் புகுத்துவதும், தாம் ஒரு புலவனாக இருந்தும்கூட, பாரதியாருக்குப் பிடிக்கவில்லை. பாட்டைக் குறைத்து வசனத்திலே கதை ஒட வேண்டும் என்ற புதுமையான கருத்தைப் பாரதியார் அப்போதே கொண்டிருந்தார் என்பது அவருடைய தீட்சண்யத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகிறது.

பாரதியாரோடுகூட இருந்த அவர் சீடன் பாரதிதாசன், பாரதியார் நாடகம் பார்த்த ஒரு சம்பவத்தை அழகான ஒரு கவிதையாக அமைத்து நமக்குத் தந்திருக்கிறார். அநேகமாக, பாரதியார் பார்த்த அந்த நாடகம் ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் ஆக்கி மேடையேற்றிய நாடகமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், அந்தக் கால கட்டத்தில் பெரிய நாடகாசிரியராக விளங்கியவரும், புதுச்சேரியில் நாடகம் நடத்தியவரும் ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளே. ஆனால், பாரதியார் கண்டிக்கும் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் வேறு ஒருவராக இருக்கலாம்.

பாரதிதாசன் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் பாடி வைத்திருக்கும் கவிதை இதுதான்;

ஒருநாள் நம் பாரதியார்
நண்பரோடும்
உட்கார்ந்து நாடகம்
பார்த்திருந்தார். அங்கே
ஒருமன்னன் விஷமருந்தி
மயக்கத்தாலே
உயிர்வாதை அடைகின்ற
சமயம், அன்னோன்
இருந்த இடந் தனிலிருந்தே
எழுந்து லாவி
"என்றனுக்கோ ஒருவித
மயக்கந்தானே
வருகுதையோ" எனும்
பாட்டைப் பாடலானான்!
வாய்பதைத்துப் பாரதி
யார் கூறுகின்றார்:
மயக்கம் வந்தால் படுத்துக்
கொள்ளுவதுதானே
வசங்கெட்ட மனிதனுக்குப்
பாட்டா என்றார்!
தயங்கிப்பின் சிரித்தார்கள்
இருந்தோரெல்லாம்
சரிதானே பாரதியார்
சொன்னவார்த்தை!
மயக்கம்வரும் மதுவருந்தி

தொகுத்தளிப்பவர்
இரா. பத்மநாதன்

நடிக்கவந்தான்.
மயக்கவிஷம் உண்டது
போல் நடிப்புக்காட்டும்
முயற்சியிலும் ஈடுபட்
டான், தூங்கிவிட்டால்
முடிவுநன்றா யிருந்திருக்கும்
சிரமமும்போம்!

பாரதிதாசனுடைய மேற்படி பாட்டை நான் பல வருடங்களுக்குப் பின்னர் படித்தபோது, அன்று ஓவியர் கொண்டையா ராஜு பாரதியாரைப் பற்றிச் சொன்ன விவரங்கள் எல்லாம் 'பளிச்'சென்று என் ஞாபகத்துக்கு வந்தன.

(இன்னும் வரும்)

# வாரம் ஒரு வார்த்தை!

## 12. செயற்கை இதயம்

"ஐயா இருக்காங்களே! அவங்களுக்கு ரொம்பவும் அன்பான இதயம்!"

அப்படின்னு யாராவது சொன்னா அதை இனிமே நம்பாதீங்க!

"உன் கண்ணுலே தண்ணி வந்தா என் நெஞ்சிலே ரத்தம் வரும்"ன்னு சொல்லிக்கறது உண்டு.

அன்பை தெரிவிக்கறதுக்காக அப்படியெல்லாம் சொல்லிக்கலாம்.

அதுலே ஒண்ணும் தப்பு இல்லே!

ஆனா..

'அன்பான இதயம்'ன்னு சொல்றாங்களே..

அன்புக்கும் இதயத்துக்கும் சம்பந்தம் உண்டுன்னு நினைக்கிறீங்களா?

'ஆமாம்'னு நினைக்கறது நம்ம மனசு!

'அப்படி இல்லே'ன்னு நிரூபிக்குது விஞ்ஞானம்!

எப்படி தெரியுமா?

டாக்டர் பார்ன் கிளாக்குன்னு ஒருத்தர். உலகத்துலேயே முதல் தடவையா செயற்கை இருதயம் செஞ்சி இவருக்குப் பொருத்தினாங்க!

நான் சொல்றது மாற்று இருதயம் இல்லே!

செயற்கை இருதயம்.

மாற்று இருதயம் இன்னொரு மனிதனுடைய உடம்புலே இருக்கிற இருதயத்தை எடுத்து பொருத்தறது.

செயற்கை இருதயம்-நாமா தயார் பண்றது.

இப்படி செயற்கை இருதயம் ஒண்ணை தயார் பண்ணி டாக்டர் பார்ன் கிளாக்குக்குப் பொருத்தினாங்க. அதுக்கப்புறம் கொஞ்ச நாள் அவரு உயிரோட இருந்தார்.

செயற்கை இருதயத்தோட அவர் இருந்தப்போ அவரு சம்சாரத்துக்கு ஒரு சந்தேகம்!

'இப்ப அவருக்கு இருக்கிறதோ செயற்கை இருதயம்! அதனாலே அவர் தன்கிட்டே காட்ற அன்பும் செயற்கையா இருக்குமோ?'ன்னு அந்த அம்மாவுக்கு சந்தேகம்!

இயற்கையான இருதயத்தோட அந்த டாக்டர் இருந்தப்போ... "இருதயத்துலே உன்னை வச்சிருக்கேன்..." அப்படி... இப்படி..ன்னு சொல்லியிருப்பாருல்லே...!

அந்த இருதயத்தை தூக்கி எறிஞ்சுட்டு செயற்கை இருதயம் வச்சுட்டாங்களே..

'இப்ப நம்ம கதி என்ன?'

இப்படி எல்லாம் அந்த அம்மா நினைச்சதுலே தப்பில்லே!

இந்த சந்தேகத்தை நேரடியாவே அவருகிட்டே கேட்டுட்டாங்க!

அதுக்கு அவரு என்ன சொன்னாரு தெரியுமா?

அவரு புன்முறுவலோட பதில் சொன்னாராம்!

"இந்த செயற்கை இதயத்தாலே தன்னோட அன்புலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது" அப்படின்னு சொன்னாராம்!



ஆக,

அன்புங்கறது இதயத்துக்கும் அப்பாற்பட்ட விஷயங்கறது தெரியிது!

இப்ப... இருதயத்துலே ஒருத்தருக்கு ஒரு வால்வு சரியா வேலை செய்யலேன்னு வச்சிக்குங்க!

அதுக்காக அவன் காட்டுற அன்பிலேயும் கொஞ்சம் குறைச்சுக்கவா செய்வான்?

அது சரி...

இந்த செயற்கை இருதயம் எந்த ஊர்லே பொருத்தினாங்க தெரியுமா?

அமெரிக்காவுலே 'சால்ட் லேக் சிட்டி' மருத்துவமனையிலே இந்த ஆபரேஷன் நடந்தது!

பாலித்தேன்-அலுமினியம் இது மாதிரி பொருள்களை கொண்டு செயற்கை இதயத்தை தயார் பண்ணியிருக்காங்க!

அப்படி அதை தயார் பண்ணிவர் பேரு டாக்டர் கே.எஸ்.ஜார்விக். அவர் பேரையே அந்த செயற்கை இதயத்துக்கும் வச்சிருக்காங்க!

இந்த செயற்கை இதயம் எல்லாருக்கும் பயன்பட இன்னும் கொஞ்சம் நாளாகும்.

இதுலே சில குறைபாடுகள் இருக்கிறதா பல டாக்டர்கள் குறை சொல்லியிருக்காங்க!

இதையெல்லாம் நிவர்த்தி பண்ணி எல்லாருக்கும் பயன்படற மாதிரி செய்யணும்.

இது இருக்கட்டும்...

அன்புங்கறது இருதயத்துலே இல்லேன்னு தெரிஞ்சி போச்சி!

அப்புறம் அது வேறே எங்கே தான் இருக்குமோ?

தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

மூளையிலே இருக்குமோ?

மூளையையும் செயற்கையா தயார் பண்ண முடிஞ்சா அதையும் கண்டுபிடிச்சுடலாம்!

செயற்கை இருதயம் அலுமினியத்துலே தயார் பண்ணியிருக்காங்க... சரி!

செயற்கை மூளை எதுலேயிருந்து தயார் பண்ணுவாங்க?

அதுக்கு இனிமே தான் ஒரு மூலப் பொருளை கண்டு பிடிக்கணும்! ஆனா அதைக் கண்டு பிடிக்கறதுக்கும் கொஞ்சம் மூளை வேணும்! அதுக்கு எங்கே போறது?

(வார்த்தைகள் தொடரும்)

# ஞான வெளிச்சம்

பஞ்சணையில் தலை சாய்த்துப் படுத்திருந்தாள் சங்கீதா. தூக்கம் அவள் விழிகளை விட்டு தூரத்தில் போய் உட்கார்ந்திருந்தது. காரணம் அவள் கண்ணுக்குள் வந்து கண்ணாமூச்சி செய்து கொண்டிருந்தான் சில்வெஸ்டர். கண்வழியே இதயத்தில் நுழைந்து, அவளின் தூக்கத்திற்கு துக்கத்தை கொடுத்தவனை கொஞ்சம் எண்ணிப்பார்க்கிறாள்.

அவள் தாதியாய் பணி புரியும் மருத்துவமனைக்கு ஒரு வாகன விபத்தில் காலில் ஏற்பட்ட முறிவுக்கு கட்டு போட வந்த நோயாளியாய்தான் அவனைச் சந்தித்தாள். அங்கே தங்கி நின்று சிகிச்சைப் பெறவேண்டியவனாய் இருந்த அவனுக்கு, சேவை செய்யும் தாதியாக சேவை செய்ததில், கண்கள் சந்தித்துக் கொள்ள காதல் தீப்பற்றிக் கொண்டது. அவன் நோய் குணமாகி வீட்டிற்குச் சென்றும் இவள் இன்னும் படுத்த படுக்கையில் கிடக்கிறாள் காதல் நோயோடு. நோயாளியிடம் காதல் நோய் வாங்கிய தாதி இவள். காலம் பூராவும் அவனுக்கு தாயாக-தாதியாக சேவை செய்ய முடிவெடுத்தாள். அதனால் கால் கட்டை அவிழ்த்துக் கொண்டு மருத்துவமனையை விட்டுப் போனவனைப் பிடித்து கல்யாணம் என்ற கால் கட்டை போட்டு கொள்ளுமாறு தூண்டிக் கொண்டிருக்கிறாள்.

அவனுக்கும் இவள் மீது அளவுக்கதிகமான அன்புண்டு. வாழ்வில் முதன் முதல் சந்தித்த முழு நிலவு. இவள் முகம் பார்த்த பின்பே தன்னைச் சூழ்ந்திருந்த இருள் அகற்றிக் கொண்டான். சங்கீதாவின் சுயநலமில்லா அன்பில் வாழ்வை அர்த்தமுள்ளதாகக் கண்டான். வாழ்ந்தால் இவளோடு தான் வாழ்க்கை என்ற வைராக்கியத்தோடு இருந்தான். இருவரும் காதலித்து பல மாதங்களாகியும் இதுவரை இந்த விசயத்தை இருவர் இல்லங்களிலும் சொல்லாமல் வைத்திருந்தார்கள்.

"இன்று எப்படியாவது வீட்டிலே கேட்டு நாளை ஒரு நல்ல முடிவோடு வாங்க. நாளை நானும் எங்க வீட்டிலே சொல்வேன்!" என அவனிடம் சொல்லி இருந்தாள்.

'நாளை அவன் என்ன முடிவோடு வருவானோ?' என்பதை எண்ணும்போது, நாளை இதனை இவள் வீட்டில் சொன்ன பின்பு என்ன சொல்வார்களோ? என்ற பயமும் மனசை குடைந்தது. பல யோசனைகளோடு படுத்திருந்தவள் எப்படியோ தூங்கிப்போனாள்.

மறுநாள் வழமைபோல் இருவரும் சந்தித்துக் கொண்டபோது சில்வெஸ்டர் தான் பேச்சை ஆரம்பித்தான்.

"சங்கீதா நாம நம்ம பெற்றோரோட சம்மதத்தோடு ஒண்ணு சேர்வது என்பது இந்த ஜென்மத்திலே நடக்காத காரியம் போலிருக்கு. லேசா நம்ம விவகாரத்தை மெல்ல பேசிப் பார்த்தேன். 'உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. போயும் போயும் இப்படி ஒரு காரியத்தை செய்திட்டு



வந்ததும் இல்லாமல், என்ன துணிவு இருந்தா எங்ககிட்ட சம்மதம் வேறு கேட்க வந்திருப்பாய்? ஒரு பிச்சைக்காரியானாலும் பரவாயில்லை. நம்ம மதத்தை சேர்ந்தவளா இருந்து நீ கேட்டிருந்தா கூட நான் உன்னோட சேர்த்து வச்சிருவேன். எவளோ ஒருத்தி. அதுவும் என்ன மாதிரியானவளோ.. ச்சீ..சீ.. போடா போ. போய் வேலையைப் பார்' என்று எங்க வீட்டிலே ஒட்டு மொத்தமா எல்லோரும் கையை விரிச்சிட்டாங்க!"

"நீங்க ஒண்ணுமே திருப்பிக் கேட்கலையா?"

"எப்படி கேட்கிறது. மதம் மதம் என்று மதம் பிடித்த யானையை போல எகிரிக் கொண்டு இருக்கிறவங்களோட மனசை பற்றி எப்படி சொல்றது. சொன்னாலும் புரிஞ்சிக்கற மனசு இல்லாதவங்களோட சண்டை போட்டு புரியவைக்கிறது முடியாத காரியம் என்கிறதால பேசாமல் வந்துட்டேன்!"

"அப்போ இனி என்ன செய்யப்போறதா இருக்கீங்க?"

"அதுதான் எனக்கும் புரியல சங்கீதா. ஒரே குழப்பமா இருக்கு. அது சரி உங்க வீட்லே எப்படி?" கேட்டுவிட்டு கலவரத்தோடு அவளுடைய முகத்தைப் பார்த்தான்.

அனலில் விழுந்த ரோஜாவாய் வாடியிருந்தது. "என்ன உங்க வீட்லேயும் இதே பல்லவிதானா?" கேட்டான்

"ம்..." என்றவாறு மௌனமாக இருந்தாள். "என்னதான் சொன்னாங்க. சொன்னாதானே நாம அடுத்து என்ன செய்யலாங்கிறதைப்பற்றி யோசிக்கலாம்" சற்று உரத்தத் தொனியில் வினவினான்.

"அப்படி ஒரு முட்டாள்தனமான பேச்சை எடுத்துக் கொண்டு, இனிமேல் இந்த வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வச்சே பிறகு உனக்கு நடக்கிறதற்கு கால் இருக்காது என்று அண்ணனும், அப்படி ஒருத்தனோட நீ கல்யாணம் செய்து வாழ்வது என்று முடிவு செய்திட்டா அதுக்கு முன்னாலே உன்னோட கையால ஒரு போத்தல் விஷத்தை வாங்கிக் கொடுத்து எங்க எல்லாத்தையும் கொன்னுட்டு எங்க பிணத்தின் மேல நின்று நீ மோதிரம் மாத்திக்க அவ்வளவுதான்! என்று அம்மா அப்பா எல்லாமே நெருப்பை அள்ளிக் கொட்டிட்டாங்க." என்றவளின் விழிகளில் கண்ணீர்த் துளிகள் அரும்பி இருந்தது.

"சரி சரி. சங்கீதா அழுவாதீங்க. நீங்க அழுவதாலேயும் நான் கலங்குவதாலேயும் நம்மை மனசை புரிஞ்சிக்கிட்டு நம்ம பெற்றோர் நம்மை சேர்த்து வச்சிடமாட்டாங்க. இனி நாமதான் இதற்கு ஒரு முடிவு எடுத்தாகணும். என்ன சமூகம் இது? மனிதன் செவ்வாய் கிரகத்திற்கு போய்க் கொண்டிருக்கிற இந்த யுகத்தில், இன்னும் மதம் மதம் என்று ஏன்தான் மதத்தைப் பிடித்துக்

**கட்டாரிலிருந்து மெய்யன் நடராஜ்**

கொண்டு அழுகிறார்களோ தெரியல. எந்த மதமும் மனசும் மனசும் ஒத்துப் போயிட்டா மதத்தை வைத்து அந்த மனசை கூறு போடணும் என்று சொல்லல. அப்படி இருந்தும் ஏன் இந்த சமூகம் இதை புரிந்து கொள்ளாமல் போர்க் கொடித்தூக்குதோ தெரியல." அலுத்துக் கொண்டவன்,

"சங்கீதா நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். நாம் நம்மை பெற்று வளர்த்த பெற்றோர் என்ற மரியாதைக்காக கேட்டோம். நம்மை புரிந்து கொண்டு சேர்த்து வைக்காத அவர்கள் முன்னால் நாம் கணவன் மனைவியாய் போய் நின்றால் எல்லாம் சரியாகிடும். முதலிலே கொஞ்சம் சத்தம் போடுவாங்க. போகப்போக கொஞ்சம் கொஞ்சமா மாறிடும்.. நீ என்ன சொல்கிறாய்?" கேட்டான் அவளிடம்

"..." மௌனத்தை பதிலாக்கினாள்.

"அப்படீன்னா உனக்கு இதிலே இஷ்டமில்லை. நீயே ஒரு முடிவு எடுக்க தயங்கினால் நான் என்ன தான் செய்வது?" கடிந்து கொண்டவனின் கையைப் பற்றினாள். இருவரும் விவாகப் பதிவாளர் காரியாலயத்தில் நின்றனர்.

சட்டப்படி பதிவு திருமணம் செய்து கொண்டபின், முதலில் அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். பூமாரி பொழிந்து வரவேற்பு நிகழ்த்த வேண்டிய சுற்றம் வசை மாரிபொழிந்து வாசலை விட்டே துரத்திவிட்டது. அந்த எதிர்பார்த்த ஏமாற்றத்தோடு அவனை அழைத்துக்கொண்டு அவள் வீட்டிற்குச் சென்றாள். "எங்கே வந்தாய்? எங்களுக்கு ஒரு மகள் இருந்தா. அவ செத்து திவசமும் பண்ணிட்டோம் போ.. போ!" என கதவை 'மடார்..' என்று இழுத்துப் பூட்டிக்கொண்டார்கள். மனசுக்கு சங்கடமாக இருந்தது. இருவரும் எதிர்பார்த்தது நடந்து விட்டதால், மனதில் பெரிதாய் வருத்தம் ஒன்றும் இல்லாததால், எப்படியும் இரண்டு வீடும் ஒதுக்கிவிட்டால் ஒண்டுவதற்கு ஓர் இடம் வேண்டும் என்று எண்ணி ஒரு வாடகை வீட்டை தற்காலிகமாய் வாங்கி இருந்தார்கள். இப்போது அது கை கொடுக்கவே நேராய் அங்கு சென்றார்கள்.

செல்லும் போதே ஒரு முடிவோடு தான் சென்றார்கள். தங்களை ஒதுக்கி விட காரணமாய் இருந்த தங்கள் மதத்தை இருவருமே விட்டு விடுவதானதே அம் முடிவு. ஆனால் அவர்களுக்கென்றும் ஒரு மதம் வேண்டும் என்ற நிலையில் எம் மதமும் சம்மதம் என்ற கொள்கைக்கு உட்பட்டவர்களாய் தங்களுக்காய், தங்களுக்கு நாளை பிறக்கும் குழந்தைக்காய், சமுதாயத்தில் நாம் இந்த மதம் என்று காட்ட வேண்டியதற்காய் இன்னொரு மதத்தை தழுவுவதாய் உத்தேசித்தார்கள். மனமும் மனமும் ஒன்று பட்டபின்பும் மதமும் மதமும் ஒன்றுபட்டு போவதென்பது முடியாத காரியம். அதைவிட இருவரும் ஒரு பொது மதத்தை ஏற்றுக் கொண்டால் 'உன் மதம் பெரிது என்மதம் பெரிது' என்று நாளைய வாழ்வின் விரிசலுக்கு இடமின்றி போய்விடும் என்ற ஞான வெளிச்சம் இருவருக்குள்ளும் எழுந்தது. எனவே போதி மரத்தின் அடியில் ஞானம் பெற்ற புத்தன் வழியில் அவர்களின் புது வாழ்வை ஆரம்பிக்க ஆரம்பித்து விட்டார்கள்!

# வாடகை வீடு

புது ரோட் சந்தியிலிருந்து இடது பக்கம் திரும்பி குலத்துங்க கடையைத் தாண்டினால், சுகன்யாவின் வீடுதெரியும். சின்னஞ்சிறிய வாடகை வீடு அது. அப்படியான வீட்டுக்கு அவள் பழக்கப்பட்டவளல்ல. மாளிகையில் மகாராணியாக வாழ்ந்தவளை விதி கோரமாக விளையாடிவிட்டது.

சுகன்யாவுக்கு மிஞ்சிப் போனால் முப்பது வயதுதானிருக்கும். பிரபலம் வாய்ந்த கம்பனி ஒன்றின் முகாமையாளர் மகேந்திரன் அவள் கணவன். விமான விபத்தில் இறந்த செய்தி காரை நகரை உலுக்கி எடுத்து விட்டது. கணவனோடு ஐந்து ஆண்டுகள் சொர்க்கத்தில் சஞ்சரித்தவள் சுகன்யா. திடீரென்று அதல பாதாளத்தில் தள்ளப்பட்டு விட்டாள். அவளுக்கு நாலு வயதில் ஒரு மகன் சஞ்சய். அவனுக்காகவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்வதாக அடிக்கடி சொல்வாள் சுகன்யா. அழகுப் பதுமையான அவள் பிறந்தது ஓர் இடம், வளர்ந்தது மற்றொரு இடம். மகேந்திரனுக்கு வாழ்க்கைப்பட்டது வேறிடம். பட்டம்பெற்ற சுகன்யாவுக்குத் தொழில் பார்க்கும் அவசியம் ஏற்படவில்லை. கணவனின் வசதியுள்ள வருமானமே இதற்குக் காரணம் என்பது பலருக்குத் தெரிந்த உண்மை.

வாழ்க்கையில் சுகதுக்கங்கள் மாறி மாறி வருவது இயல்பு. எனினும் தன் வாழ்க்கை வாழும் வயதில் திடுதிப்பென்று இப்படி மாறும் என்று சுகன்யா சற்றுமே எதிர்பார்க்கவில்லை. யுத்தக் கெடுபிடிகளின் மத்தியிலும் தன் கணவன் வாழ்ந்த வீட்டையும் ஊரையும் விட்டுப் போகும் எண்ணம் சுகன்யாவுக்கு வந்ததில்லை. "நான் இல்லாத காலத்திலும் நீயாரிடமும் கைநீட்ட விட மாட்டேன். நீ எப்போதும் மகாராணியாக வாழ வேண்டும்!" என்று செல்லமாகக் கூறித் தன் கன்னத்தைச் சிவக்கவைத்த தன் கணவனை எண்ணிய சுகன்யா குழந்தையைப் போல் விம்மி அழுதாள். தன் கணவர் சொன்னதைச் செயலில் காட்டியதை நினைத்தபோது, தான் அற்ப ஆயுசில் இறந்துபோகலாம் என்ற உள்ளுணர்வு தன் கணவனுக்கு ஏற்பட்டிருக்குமோ? என்று சுகன்யா எண்ணினாள். மூச்சுக்கு முப்பது முறை "சுகு சுகு.." என்று குட்டி போட்ட பூனையாகத் தன்னைச் சுற்றிவரும் கணவன்.. இப்போது இல்லை என்று அவளால் நம்பமுடியவில்லை. தொழில் ரீதியான ஸ்கொளசிப் என்று ரஷியா சென்றவன், ஒருமாதம் கழித்துத் திரும்பி வரும்போது, விமானம் இயந்திரக் கோளாறில் தீப்பிடித்துக் கடலில் விழுந்த செய்தி கேட்டு சுகன்யா பைத்தியம் பிடித்தவள் போலானாள். தன் கணவனின் உடல் கடலுக்குள் கருகிச் சங்கமம் ஆகிவிட்டதைச் சுகன்யாவால் சீரணிக்க முடியவில்லை. எது எப்படியோ தன் கணவன் குடியிருந்த வீடே தனக்குக் கோயில் என்று வாழ்க்கையைத் தொடர ஆரம்பித்தாள் சுகன்யா. மாதங்கள் சில நகர்ந்தபோது, இராணுவம் சென்றிபோட்டு வீட்டில் நிலை கொள்ளவிருப்பதாகச் செய்தி கிடைத்தது. 'இலைக்கறிச் சட்டியில் இடி விழுந்த கதை'யான தனது நிலையை எண்ணிக் கண்ணீர் விட்டாள்.

உயிரை மாய்த்துவிட மனசு துடித்த போதெல்லாம் சஞ்சய் கண்ணெதிரே தோன்றி அந்தத் துடிப்பை நிறுத்திவிடுவான்.

'இனி என்ன செய்வது, எங்கே போவது?' என்று சுகன்யா மனதோடு போராடிய போது, அவள் கணவனின் தாயும் தங்கையும் கண்டியில் இருப்பது நினைவுக்கு வந்தது. அங்குசெல்வதே நல்லது என்று அவளுக்குப்பட்டது. தன் கண்வனைப் பெற்றதாய் என்ற உரிமையும் உறவும் அவள் உள்ளத்துக்கு மருந்தாகும் என்று நம்பினாள். சகல ஏற்பாடுகளையும் அவள் கணவனின் நண்பர்கள் செய்து கொடுத்தார்கள். கடைசி இரவை அவள் அந்த வீட்டில் கண் விழித்தபடியே கழித்தாள். பிறப்பு, வளர்ப்பு இறப்பு இந்த மூன்றையும் அசைபோட்டுப் பார்த்தாள் சுகன்யா. எங்கோ கேட்ட விமானத்தின் இரைச்சல் அவள் வேதனையைக் கிளறியது. பொழுது விடிந்தால் பயணம். அந்தக் கடைசி இரவும் அஸ்தமித்துவிட்டது. ஐந்து ஆண்டுகள் அவள் வாழ்ந்த வாழ்க்கை ஒரு சூட்கேசுக்குள் அடங்கிவிட்டது. இராணுவம் அவள் வீட்டுக்குள் நுழையத் தயார் நிலையில் நின்றனர். கண்களில் நீர் அருவியாய் ஓடத் தன்மகன் சஞ்சயை அணைத்தபடி வாசலில் நின்று தன் வீட்டை ஒரு முறை திரும்பிப்பார்த்தாள். நினைவுகளை விழுங்கிக்கொண்டு, தன் பயணத்தைத் தொடங்கினாள். பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து பேராதனை வீதியில் உள்ள தன்மாமியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் சுகன்யா.

"புருஷன விழுங்கின மகராசி வந்திருக்காம்மா!" என்று மாமிக்குக் குரல் கொடுத்தாள் மச்சாள் மல்லிகா, மாமிபரக்கப் பரக்க ஓடி வந்து "என் மவனக் கொன்னிட்டியேடி பாவி!"



என்று ஒப்பாரி வைத்தாள். சஞ்சய் மிரளுவதைப் பார்த்து சுகன்யா மௌனித்துப் போனாள். சிலவாரங்கள் வேண்டா வெறுப்பில் கழிந்தது. "மகன்ர சொத்து சுகத்தில பெத்த தாய்க்குப் பங்கிருக்கு. மல்லிகாவுக்கும் பங்கிருக்கு. அதையெல்லாம் நீயா மனசில் எண்ணிக்கோ!" என்றாள் மாமியார்.

"அம்மா அண்ணி பணக்காரிதானே, நம்ம அனெக்ஸ அவங்களுக்கு வாடகைக்குக் குடுத்திரு. அவங்களே தனியா அவங்களுக்குப் பிடிச்சத ஆக்கிச்சாப்பிடட்டும். ஆனா ஒண்ணு. வாடக அட்வான்சு எல்லாம் பேசிக்கோ!" என்றாள் மல்லிகா. சுகன்யா எல்லாவற்றுக்கும் சரிபோட்டு விட்டு, சஞ்சயை பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டாள். தன் கணவன் உயிருடன் இருக்கும் வரை தாய்க்கும் தங்கைக்கும் செய்த உதவிகளனைத்தும் கால்தூசியாகப் போய் விட்டதை எண்ணி வருந்தினாள் சுகன்யா. கணவனின் மறைவுக்குப் பின் மாமியாரும் மல்லிகாவும், தன்னை அந்நியமாக எண்ணி ஒதுக்குவது தெரிந்தும் ஒரு வருடத்தை எப்படியோ ஓட்டிவிட்டாள் சுகன்யா. மேற்கொண்டு அந்த வீட்டில் இருக்கப்பிடிக்காத அவள் புது ரோட்டில் உள்ள சின்னதோர் வீட்டை வாடகைக்கு எடுத்தாள். மாமியாரிடம் கொடுத்த அட்வான்ஸ் தொகையை, "என்மகன்ட பணம் தானே!" என்று கொடுக்க மறுத்து விட்டாள் மாமியார். இடம் புதிது. அனுபவம் புதிது சுகன்யாவுக்கு . தனிமரமாய் நின்று தன் வேலைகளைத் தானே கவனித்து வந்தாள். காலம் வெகுவேகமாகச் சுழன்று ஒருவருடத்தை தள்ளிவிட்டது.

அன்று சனிக்கிழமை "அம்மா தெனம் பாண்சாப்பிட விருப்பமில்ல. இன்னைக்கிப் பால் சோறு கருப்பட்டி போட்டுச் செய்வியா?" என்று சஞ்சய் கேட்ட விதம், அவளுக்கு அவள் கணவன் கேட்டதுபோல் இருந்தது. சஞ்சயின் அப்பாவுக்கு சனிக்கிழமை என்றால் பால்சோறு கட்டாயம் அதுவும் கருப்பட்டிபோட்டு. "இவனும் ஒரு ஜுனியர் மகேந்திரன்" என்று முணுமுணுத்த சுகன்யா சமையலறைக்குச் செல்லத் திரும்பியபோது, வாசல் பக்கம் செருப்புச் சத்தங் கேட்டது.

"அம்மா வீட்டுக்கார மாமாவும் மாமியும்!" என்றான் சஞ்சய்.

வீட்டுச் சொந்தக்காரன் அண்ணாமலையும் அவர் மனைவியும் வாசலில் புன்னகைத்து நின்றனர். உள்ளே வாருங்கள் என்று சுகன்யா உபசரித்தபோது, "நாங்க இருக்கவரல்ல, எங்கட வீட்ட விக்கிறதுக்கு விலபேசிற்றம். நீ இப்பவே வேற இடம் பாத்தா நல்லது. அதுதான் சொல்லிற்றுப் போக வந்தம்." என்றான் அண்ணாமலை அவன் மனைவி. "ஆமா புள்ள நீ புருசனில்லாதவ நேரகாலத்தோட சொல்ல வேணுமே!" என்றாள்.

சுகன்யா அதிர்ந்து போனாள். "திடீரென்று சொன்னால் நானெப்படி?"

**ரூபராணி**

"ஆமா தங்கச்சி திடீரென்று வீட்டுக்கு நல்ல விலைவந்தது. சான்ச விடலாமா?" அண்ணாமலை சற்றுக் குரலை உயர்த்தினான்.

"அப்போ நான் கொடுத்த முப்பத்தி ஆறாயிரம். அதான் வீட்டுக்கு டிப்பொசிட், என்று வாங்கினது, அதை எப்போ தருவீங்க!" சுகன்யா அவசரமாகக் கேட்டாள். "வீட வித்த பிறகுதான்" அண்ணாமலையின் மனைவி கடுகடுத்தாள். "அப்போது நான் வீடு விற்கும்வரை இருக்கிறேன். பணம் இல்லாம நானெப்பிடி வீடு பார்க்கிறது?" "என்ன நீ புருஷனில்லாதவ எண்டு பாவம் பார்த்துத்தான் இத்தன நாளா வச்சம், மிச்சமாப் பேசினியோ நீ 'கொட்டியா'ன்னு போலிசில கம்ப்ளெயின் குடுத்திடுவம். நீ வடக்கிலருந்து வந்தவதானே? வருஷக் கணக்கில வாடக இல்லாம அங்க வச்சிக்கு வாறுகள். எப்படி வசதி? ஒரு வாரத்தில வீட்டக் காலிபண்ணிடு." கட்டளை பிறப்பித்த அண்ணாமலையும் மனைவியும் சென்று வெகு நேரமாகியும் சுகன்யா அசைவற்ற பொம்மையாகி விட்டாள். சஞ்சய் பால் சோறுக்காக அழுகிறான்.

# இலக்கிய நயம்

## தருவது முழுமதியன்

# கவிதைக்கே ஒரு கவிதை சொல்வதில்....

"அந்த அணிலைப் பாருங்கள் எவ்வளவு அழகு!"

"உன் பார்வை பட்ட எதுவும் அப்படித்தான் ஆகிவிடும்."

"ம்... புலவர் பொய்யெல்லாம் வேண்டாம். அது இரண்டு காலில் நிமிர்ந்திருந்து பழம் கடிப்பதைப் பாருங்கள். எல்லா உயிர்களிடத்திலும் ஏதோ ஓர் அழகை ஆண்டவன் படைத்துத்தானிருக்கிறான்..."

"உண்மை உண்மை. ஒவ்வொரு உயிராகப் படைத்துப் படைத்துப் பார்த்து, அவன் மிகுந்த தேர்ச்சியடைந்த பிறகு செய்த உயிர்தான் இதோ என்னருகே இருக்கிறதே!"

"போதும். பாவம் அந்த அணிலைப் பார்க்க மாட்டீர்களா? அந்த அழகைத்தான் பாருங்களேன்!"



"எல்லா அழகையும் சேர்த்துத்தான். உன்னிடம் கொட்டி அனுப்பி வைத்திருக்கிறானே... உன்னைப் பார்த்தால் உலகின் அழகனைத்தையும் அறிந்த மாதிரித்தான்..."

"எங்குதான் இப்படியெல்லாம் பேசக் கற்றுக்கொண்டீர்களோ..."

"உன்னி..." அவசரமாகத் தன் கையால் அவன் இதழ்களை அடைத்தாள்.

"வேண்டாம். தாங்கமுடியவில்லை!" என்று சிரித்தாள். திரும்பக் கையை எடுத்து நிலத்தில் ஊன்றிக் கொண்டாள். அவனும் சிரித்தான்.

சிரித்தபடியே அவளைப் பார்த்தான். அவள் சிரிக்கும் இந்தக் கணத்தை ஒரு புகைப்படக் கருவியாக மனதுக்குள் பிடித்து வைத்துக் கொண்டான்.

ஒரு கையை நிலத்தில் ஊன்றி, கால்கள் இரண்டையும் ஒரு புறமே மடித்துச் சாய்வாக அமர்ந்திருந்தாள். ஊன்றிய கைத் தோளில் தலை சாய்ந்திருந்தது. இரண்டாகப் பின்னியிருந்த கூந்தலில் ஒரு பகுதி அவள் கையூன்றியிருந்த நிலத்தருகே தொட்டு மடிந்திருந்தது. அதுபோல் இன்னொரு சரிபாதி கூந்தல் அவள் முதுகுப்புறம் என்பது ஆச்சரியமளித்தது. இவ்வளவு அடர்ந்த இருள் பின்னணிதான் அவள் முகத்தை இத்தனை ஒளியாகத் துலங்க வைக்கிறதா, கண்ணிமைகள் தாழ்ந்திருந்தன. அங்கிருந்து பார்வையை இறக்கி உதடுகள் வரை வந்தான்.

அவள் தலை நிமிராது இருந்தாள்.

இவன் சற்றுத் துணிச்சல் பெற்றான். அருகே நெருங்கி அவள் மோவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

"இளநுங்கு உதடுகளின் ஈரத்தில் ஒரு கவிதை எழுதிவிடப் போகிறேன்..." என்றான்.

அவன் கைகளை மெல்லத் தட்டிவிட்டு, "அதெல்லாம் இப்போ ஒன்றும் வேண்டாம்..." என்றாள்.

"என் கைகளை உன் கைகளால் தட்டிவிடுகிறாய்... என் மனதை எந்தக் கைகளால் தொட்டாய் நீ?"

"ம்... கவிதையில் இறங்கிவிட்டீர்களா?"

"இறங்குவது கவிதையில் அல்ல, நதியில்... 'ஏதோ ஒரு நதியில் நான் இறங்குவதைப் போலே ஏதோ ஒரு புதிதாய்ப் பிறந்த குழந்தையின் கைவிரல்கள் போல... எப்படி அங்கே அந்த சிவந்த ஈரப் பளபளப்பை நிரந்தரமாக்கி வைத்திருக்கிறாள்?

அவனுள் உன்மத்தம் ஏறியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சிரமப்பட்டான்.

அவள் கன்னத்திலேனும் ஒரு முத்தம் பதித்துவிட உள்ளம் திமிறியது. இயல்பாக நடந்துகொள்ள விடாமல் எது என்னை அடக்குகிறது? அந்தந்த நேரத்து மன உந்துதல்களை அப்படியப்படியே பின்பற்றுகிற குழந்தைகள் போல இல்லாமல் ஏன் வளர்ந்தோம்?

மனதுக்கு இந்தச் சித்திரவதை... யார் இட்ட உத்தரவு?

அவன் மெல்ல அவள் கையைப் பற்றி அந்த விரல்களில் முத்தமிட்டான்.

அவள் கையை இழுத்துக் கொண்டாள்.

எழுந்துவிடுவாளோ என்று இவன் பயந்தான்.

இன்பம் நீ அருகில் இருந்தாலே..." சன்னமான குரலில் பாடி நிறுத்தினான். பிறகு சொன்னான்.

"வெறும் காற்றுக் கூட உன்னைத் தொட்டுத் தென்றலாகி விடுகிறது, மனமோ கவிதையாகி விடுகிறது..."

"கவிதை திகட்டுவதில்லை தான்..."

"அட்டா! கவிதையே என் கவிதையை விரும்புகிறது. நான் சொல்லும் கவிதைகள் எல்லாம் மொழிபெயர்ப்புக்கள்தான்; அறிவாயா கண்ணே!"

"எந்த மொழிக் கவிதைகள்?"

"அழகு மொழிக் கவிதைகள்!"

"அது என்ன மொழி?"

"இதோ என்னெதிரே அமர்ந்திருக்கிறதே ஓர் அழகிய மொழி! அதை மொழிபெயர்த்துத்தான் என் கவிதைகள் என்று சொல்லிக் கொள்கிறேன்..."

வெட்கப்பட்ட அந்தக் கவிதை மேலும் அழகானது. அவன் பார்வையைத் தாங்கமாட்டாது கைகளால் முகத்தை மூடிக் கொண்டது.

"கவிதைக்கே நான் கவிதை சொல்வதில் ஆச்சரியமென்ன? இதோ தாமரையைத் தாமரையே மறைத்துக் கொள்கிறதே!" என்றான்.

அவள் கைகளை விலக்கி விட்டுத் தன் முகத்தை அவன் தோள்களில் புதைத்தாள்.

"உலகிலேயே பெரிய பொய்யரும் நீங்கள்தான், பெரிய கொள்ளைக்காரரும் நீங்கள்தான்!" என்று அவன் தோள்களுக்குள் முணுமுணுத்தாள்.

"ஆமாம் உலகின் அழகையெல்லாம் நீ கொள்ளையடித்தாய். நீ உனதாக்கிக்கொண்ட அந்த அழகுச் செல்வத்தை நான் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறேன்..."

"பேச்சில் உங்களை வெல்ல எவருமில்லை..."

"ஆமாம் மற்றதனைத்திலும்தான் உன்னிடம் நான் தோற்றுக் கொண்டிருக்கிறேனே..."

"அப்பா!" என்றபடி அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

"என் வெட்கம், பயம், தயக்கம் எல்லாவற்றையும் உடைத்து இரும்பை ஈர்க்கும் காந்தம் போல என்னை உங்களிடத்தில் நிலை மறந்து துடிக்க வைத்துவிடுகிறது உன் பேச்சு. பல மாயங்களில் வல்லவரான உங்கள் பாசுபதாஸ்திரம் இந்தப் பாகுமொழிதான்..." இருவர் உடல்களும் இடையேயிருந்த காற்றுக்கு இடம் மறுத்தன.

**பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்**
**பெண்மை உடைக்கும் படை.**

(குறள்: 1258)

# ஸ்போர்ட்ஸ்

## உலக சாதனை படைத்த மக்மில்லன்

### நியூஸிலாந்திற்குத் தலைமை தாங்குகிறார்



நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஹமில்டனில் நடந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது ஒரு ஓவரில் 26 ஓட்டங்களை அடித்து உலக சாதனை புரிந்த மக்மில்லன், ஷார்ஜா செல்லும் நியூஸிலாந்து அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

நியூஸிலாந்திற்கு விஜயம் செய்த பாகிஸ்தான் அணியுடன் ஹமில்டனில் நடந்த மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 185 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமப்படுத்தியுள்ளது.

இந்த கடைசி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் சுழற் பந்துவீச்சாளர் யூனுஸ் கான் வீசிய ஒரு ஓவரில் 5 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடித்து 26 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்தார் நியூஸிலாந்து வீரர் கிரெய்க் மக்மில்லன்.

இதற்கு முன் டெஸ்ட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் அடிக்கப்பட்ட அதிக ஓட்ட எண்ணிக்கை 24. இச்சாதனையை 5 வீரர்கள் செய்திருந்தனர். மேற்கிந்தியத்தீவுகளின் அன்டி ரொபேர்ட்ஸ். இங்கிலாந்தின் இயன் பொத்தம், நியூஸிலாந்தின் இயன் ஸ்மித், இந்தியாவின் சந்தீப் பட்டேல் (6 பவுண்டரிகள்) கபில்தேவ்(4 சிக்ஸர்கள்) ஆகியோரே அதிக ஓட்டங்களை ஒரு ஓவரில் விளாசிய வீரர்களாக இருந்தவர்கள்.

ஷார்ஜாவில் ஏப்ரல் 8 முதல் 20ம் திகதி வரை இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய அணிகள் கலந்து கொள்ளும் முத் தரப்புப் போட்டிகளில் இந்தியா விலகியதை அடுத்து இந்தியாவுக்குப் பதிலாக நியூஸிலாந்து விளையாடுகிறது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் நியூஸிலாந்து அணிக்குத் தலைமை தாங்குகிறார் மக்மில்லன். நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்டீபன் ஃபிளேமிங், நதன் ஆஸ்ட்லே, அடம் பரோரே, கிறிஸ் மார்ட்டின் ஆகியோரும் காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் டானியல் வெட்டோரி கிறிஸ் கெய்ன்ஸ், ஜெஃப் அலொட், டியன் நாஷ், ஸ்கொட் ரைரிஸ் ஆகியோரும் ஷார்ஜா அணியில் இடம்பெறவில்லை.

ஷார்ஜாவில் விளையாடும் நியூஸிலாந்து அணி வீரர்கள் பற்றிய விவரம் வருமாறு:

கிரெய்க் மக்மில்லன், அன்ட்ரே அடம்ஸ், மத்தியூ பெல், கிரன்ட் பிரட்பேர்ன், ஜேம்ஸ் ஃபராங்களின், கிறிஸ் ஹரிஸ், கைல் மில்ஸ், கிறிஸ் நெவின், ஜேக்கப் ஒராம், மத்தியூ சின்கிளேயர், டரில் ரஃபிட், லூ வின்சென்ட், புறூக் வோக்கர். ■

## பங்களாதேஷின் முதலாவது சுற்றுப்பயணம்

டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைக் கடந்த வருடம் பெற்ற பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, தனது முதல் ஒற்றை டெஸ்ட் போட்டியைக் கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்தியாவுடன் விளையாடியது.

இதைத் தொடர்ந்து பங்களாதேஷ் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்குபற்ற முதல் தடவையாக சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. ஏப்ரல் 7ம் திகதி தனது கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை ஸிம்பாப்வே நாட்டுக்கெதிராக மேற்கொள்கிறது.

ஸிம்பாப்வே செல்லும் 15 பேர் கொண்ட பங்களாதேஷ் அணிக்கு நெய்முர் ரஹ்மான் தலைமைத் தாங்குகிறார். கடந்த வருடம் ஜுன் மாதம் டெஸ்ட் விளையாடும் 10வது நாடாக அங்கீகரிக்கப்பட்ட பங்களாதேஷ், டாக்காவில் இந்தியாவுக்கெதிராக நடந்த முதல் டெஸ்ட்டில் 10 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது. இப்போட்டியில் ரஹ்மான் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸிம்பாப்வேயுடன் 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடும் பங்களாதேஷ் அணி விவரம் இதோ:

நெய்முர் ரஹ்மான், காலிட் மசூட், ஜாவெட் ஓமர் பெலிம், மெஹ்ரப் ஹொசைன், மொஹமட் அஷ்ரஃபுல், ஹபீபுல் பஷார், அமீனுல் இஸ்லாம், அக்ரம் கான், அல்-ஷாஹ்ரியர், மொஹமட் ரபீக், இனாமுல் ஹொக், ஹஸிபுல் ஹொசைன், மொன்ஜுறுல் இஸ்லாம், மொஹமட் ஷரிப், முஷ்பிக்குர் ரஹ்மான். ■

# சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா! சிங்கத்தின் குகைக்குள்ளேயே போய் நின்று கர்ஜிக்க நம் பக்கத்தில் இப்போது யாருமில்லை என்பது சோகம் தானே?**

ந. விஜயன், கொழும்பு-06.

உள்ளே போய் கர்ஜித்தால் என்ன, வெளியே நின்று கர்ஜித்தால் என்ன... அது சண்டையை நிறுத்த உதவாது. ஒருவர் உள்ளே போய் நின்று கர்ஜிப்பது, சிங்கத்திடம் 'வெளியே போய் துவம்சம் செய்' என்று மறைமுகமாய் சேதி சொல்வது ஆகும்.

நம்முடனேயே நின்று கொண்டு, சிங்கத்தை வெளியே அழைத்து, 'இந்தக் காடு நம் எல்லோருக்கும் சொந்தமானது தான். நம் உரிமைகளையும் அதிகாரங்களையும் இப்படி இப்படிப் பகிர்ந்து கொண்டால் தான் எல்லோரும் பிழைத்திருக்கலாம், வா!' என்று சிங்கத்தையும் மாட்டிச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ளத் தெம்புள்ளவர்களே நம் தேவை.

★ **சிந்தியாவின் கனவில் அடிக்கடி வருவது அழகனா, அழகியா?**

எஸ்.எம். முஸம்மில், குருநாகல்.

அழகான முகங்களைக் கண்டால் நான் அவஸ்தைக்குள்ளாவது என்னவோ உண்மைதான். ஆனால், கனவில் அந்த முகங்களோடு என் முகத்தையும் சேர்த்துப் பார்க்க நேர்வதால், அதிர்ச்சியில் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறேன்.

★ **கவிஞர் வைரமுத்துவின் அண்மையப் பாடல்களிலே சிந்தியாவை மிகவும் கவர்ந்த பாடல் எது?**

எஸ். சரத்பாபு, அருப்பொல.

சற்றுப் பழசுதான் என்றாலும் நெஞ்சில் தங்கிவிட்ட அருமை வரிகள்:

"பூமியை வெல்ல ஆயுதம் எதற்கு
பூப்பறிக்க கோடரி எதற்கு?..."

★ **பைத்தியக்காரத்தனத்திற்கும் முட்டாள் தனத்திற்கும் என்ன வித்தியாசம் சிந்தியா?**

எஸ். மனோன்மணி, வவுனியா.

பைத்தியமாக இருப்பதைவிட பாவமானது முட்டாளாயிருப்பது. ஆஹா! கதை சொல்ல ஒரு வாய்ப்பு!

பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் மருத்துவர் ஒருவர் வெளியே வந்து பார்த்தபோது, தனது காரின் ஒரு டயர் காற்றுப் போய் இருப்பதைக் கண்டார்.

டயரை மாற்றுவதற்காகக் கழற்றினார். கழற்றும்போது, அதன் நட்டுகள் தவறி சாக்கடையில் விழுந்துவிட்டன. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்.

அப்போது உள்ளே இருந்து நோயாளி ஒருவன் வந்தான். "என்ன" என்று கேட்டான். மருத்துவர் விஷயத்தைச் சொன்னார்.

"புதிய டயரை மாட்டி மற்ற சக்கரங்களிலிருந்து ஒவ்வொரு நட்டைக் கழற்றி, இதற்குப் போட்டுவிடுங்கள். கராஜுக்குப் போகும்வரை தாங்கும்..." என்றான்.

மருத்துவர் மிக மகிழ்ச்சியடைந்து, "அருமையான யோசனை. இது எனக்குத் தோன்றவில்லையே... ம்... நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"நானா... நான் பைத்தியக்காரன்; ஆனால், முட்டாளில்லை!" என்றான் அவன்!



'லவ்பேர்ட்ஸ்' படத்தில் பிரபுதேவா-நக்மா

★ **நிகழ்ச்சிகளை 2, 3 மணி நேரத்திற்கு நேரடி ஒலிபரப்பாக கொண்டு நடத்தக் கூடிய ஆற்றலும், அனுபவமும், முதிர்ச்சியும், சாமர்த்தியமும் வர்த்தக சேவை அறிவிப்பாளர்களிடம் அதிகம் இருப்பதாக இலங்கை வானொலியின் வர்த்தக சேவை அதிகாரி ஒருவர் எழுதியிருந்ததைப் பார்த்தீர்களா? 75 வருடப் பாரம்பரியம் கொண்ட வானொலியினர் இப்படி உள்ளுக்குள்ளேயே ஒருவரையொருவர் மட்டம் தட்டிச் சுயபிரலாபம் செய்துகொள்கிறார்களே, சிந்தியா என்ன சொல்கிறீர்கள்?**

மு.வினோதினி, கொழும்பு-13.

எவரும் தங்களைத் தாங்களே போற்றிக் கொள்வது என்று ஆரம்பித்துவிட்டால், நிலைமை பரிதாபகரமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். எத்தனையோ ஜாம்பவான்கள் இருந்த/இருக்கும் வானொலிக்கு என்ன ஆகிவிட்டது இன்று? பல்லை ஈர்க்கால் குத்தி மணந்து பார்ப்பதைப் போல தங்கள் குமுறல்களைப் பத்திரிகைகளில் கொட்டுமளவுக்குத் தரம் இறங்கிவிட்டார்களா அங்குள்ளவர்கள்? பாவம் அறிவிப்பாளர்கள். இதெல்லாம் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

★ **'லவ்பேர்ட்ஸ்' திரைப்படத்தில் பிரபு தேவா-நக்மாவின் தொப்புளில் முட்டை பொரிக்கிறாரே இது நடைமுறையில் சரிவருமா?**

சி.துஷ்யந்தன், மண்டூர்-01.

தமிழ்ப் படத்தில் வருகிற மற்றக் காட்சிகளையெல்லாம் நடைமுறையில் உள்ள காட்சிகள் என்றா பார்க்கிறீர்கள்? நக்மாவின் தொப்புளைப் பார்த்தீர்களா? அத்தோடு விடுங்கள்!

★ **ஞானியின் நிலை எப்போது வரும்?**

சிவம் ஜெகஜோதி, தலவாக்கலை.

நாம் பூனை வளர்க்கிறோம். அது எலி ஒன்றைப் பிடித்து வாயில் கவ்வி வருகிறது. மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

அடுத்த நாள் நாம் ஆசையாக வளர்க்கும் கிளியைப் பிடித்து இறகுகளைப் பிய்க்கிறது. நமக்குப் பூனையின் மேல் கோபம் வருகிறது. அடித்துத் துரத்துகிறோம். அதற்கடுத்த நாள் வெளியே இருந்து ஏதோ ஒரு குருவியைப் பிடித்து விளையாடுகிறது பூனை. அப்போது நமக்கு மகிழ்ச்சியுமில்லை, கோபமுமில்லை.

பூனையின் சுபாவம் எதையாவது பிடிப்பதுதான் என்பதைப் புரிந்து கொள்வதே ஞானியின் நிலை.

# மன்னாதி மன்னன்

53

அரைத்திருடன், அரண்மனைத் தலையாரியின் காணாமல் போன மருமகன் தான் தானென்று பொய் கூறி தலையாரியின் வீட்டில் இடம்பிடித்துக் கொண்டான்.

முதல் நாளன்று நகரில் திருடிவிட்டு, எவரும் அறியாமல் மாயமாக மறைந்துவிட்ட திருடனை அன்றிரவுக்குள் எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று தலையாரிக்கு அரசர் கட்டளையிட்டிருந்தார்.

இதனால் இளமையிலேயே காணாமல் போய் திரும்பி வந்ததாகக் கூறிக் கொண்டிருந்த தனது மருமகனுடன் அதிகநேரம் பேசிக் கொண்டிருக்க தலையாரியால் முடியவில்லை.

திருடனைப் பிடிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்ற தலையாரியுடன் அரைத்திருடனும் எப்படியோ இணைந்து கொண்டான்.

நகர எல்லையிலிருந்த தொழுமரத்தை பார்ப்பதற்காகத் தலையாரி சென்றபோது அரைத்திருடனும் உடன் சென்றான். அந்தக் கழுமரம் எவ்வாறு வேலைசெய்கிறது என்று தனக்குச் சொல்லித் தருமாறு அரைத்திருடன் தலையாரியைக் கேட்டான்.

திருடனைப் பிடிக்கப் போகும் வேளையில், அதிக நேரம் தாமதம் செய்யலாகாது என்று அரைத்திருடனின் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கப் பார்த்தான்.

அரைத்திருடனோ தலையாரியை விட்ட பாடில்லை. தலையாரியையே தொழுமரத்தில் மாட்டி ஆப்பு வைத்துப் பார்க்க விரும்புவதாக அரைத்திருடன் கோரிக்கை விடுத்ததை தலையாரியால் தட்டிக்கழிக்க முடிய வில்லை.

தானாகவே தொழுமரத்தில் ஏறி நின்று கொண்டு எவ்வாறு ஆப்பு வைக்க வேண்டுமென்று அரைத்திருடனுக்குச் சொல்லிக் கொடுத்தான். தலையாரி சொல்லிக் கொடுத்தபடி ஆப்பை வைத்து நெருக்கி விட்டு, ஆப்பைப் பிடுங்குவதற்கு முடியாதவன் போல் அரைத்திருடன் நடித்தான்.

"மாமா நீங்கள் சொல்லித் தந்தபடி ஆப்பை அதிகமாக அடித்து நெருக்கி விட்டேன் போல் தெரிகிறது. இப்பொழுது ஆப்பை எடுக்க முடியாமல் இருக்கிறது. உதவிக்கு அழைப்பதற்கு இப்பகுதியில் எவரையும் காணவில்லை. இப்போது என்ன செய்வது மாமா?" என்று கேட்டான்.

தலையாரி அரைத்திருடனின் நடிப்பை உண்மையென நம்பிவிட்டான். திருடனைப் பிடிக்க வேண்டிய நேரம் கனவேகமாக சென்று கொண்டிருப்பதனால் அவனுக்கு பெரும் சங்கடமாக இருந்தது.

மருமகனைப் பார்த்து, "மருமகனே! காலம் கடத்தாமல் உடனடியாக வீடு சென்று கொட்டாப்புளியையும் எடுத்துக் கொண்டு உதவிக்கு வேறு சிலரையும் கூட்டிக் கொண்டு உடனே ஓடி வா!" என்று தலையாரி சொன்னான்.

இதுதான் தான் எதிர்பார்த்த தருணமென்று உள்ளுக்குள் மகிழ்ந்த அரைத்திருடன் வேகமாக அந்த இடத்தைவிட்டு அகன்றான். நேராகத் தலையாரியின் வீடு போய் தலையாரியின் மனைவியிடம் துணிந்து ஒரு பொய்யைச் சொன்னான்.

"மாமி எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. அரசர் மாமா மீது கொண்ட கோபத்தினால் அவரைப் பிடித்து தொழுமரத்தில் கட்டி வைத்திருக்கிறார். மாமாவுக்குக் கடும் தண்டனை கொடுக்கப் போவதாகவும் வீட்டிலுள்ள நகைகள், மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் முதலியவற்றையும் பறிமுதல் செய்யப் போவதாகவும் தொழுமரத்தில் மாமாவைக் கட்டி வைத்த காவலர்கள் கூறிக் கொண்டார்கள்-இப்பொழுது அவர்கள் நமது வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆபரணங்களையும் துணிமணிபோன்ற பெறுமதியான பொருட்களையும் எடுத்துக் கொண்டு போக வரப்போகிறார்கள். இந்த வேளையில் ஆபரணங்களையும் பொருட்களையுமாவது பாதுகாக்க வேண்டியது நமது பொறுப்பு. எனவே உங்களுடைய நகைகளையும் எனது மனைவியின் நகைகளையும் ஏனைய அணிகளையும் ஒரு மூட்டையாகக் கட்டி என்னிடம் தாருங்கள். அவற்றைப் பத்திரமாக நான் எடுத்துக் கொண்டுபோய் பாதுகாப்பாக வைத்துவிட்டு வருகிறேன்." என்று அவசர அவசரமாக தலையாரியின் மனைவியிடம் கூறினான்.

அவளும், மகளும் அவர்களுடைய நகைகளையெல்லாம் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டினார்கள். ஏனைய பொருட்களையும் மற்றும் ஒரு பெட்டியில் வைத்து இரண்டு பொதிகளையும் அரைத்திருடனிடம் கொடுத்தார்கள்.

அரைத்திருடன் அப்பொருட்களையெல்லாம் எடுத்துக்கொண்டு நேராக தன்னுடைய வீடுபோய்ச் சேர்ந்தான்.

## மாறுவேடத்தில் மந்திரி!

தான் கொண்டு வந்த பொருட்களையெல்லாம் தந்தையிடம் காட்டி தலையாரியையும் அவன் குடும்பத்தையும் தான் எவ்வாறு ஏமாற்றி நகைகளையும் துணிகளையும் கொள்ளையடித்தான் என்று விவரமாகக் கூறினான்.

அரைத்திருடன் கொண்டு வந்த பொருட்களைப் பார்த்தும் அவனுடைய சாகசச் செயல்களைப் பார்த்தும் திருடன் கார்த்திகேயன் மகிழ்ச்சியடைந்ததுடன் தனது மூன்றாவது மகன் அரைத்திருடனை வெகுவாகப் பாராட்டினான்.

அடுத்தநாள் பொழுது விடிந்ததும் தலையாரி தொழுமரத்தில் மாட்டப்பட்டிருந்த சங்கதி நகரெங்கும் பரவியது.



அரசருக்கு செய்தி எட்டியது. தனது காவலர்களையனுப்பி, தலையாரியை தொழுமரத்திலிருந்து அழைத்து வரும்படி கட்டளையிட்டார்.

தலையாரியை விடுவித்து அழைத்துவந்த காவலர்கள் அவனை முதலமைச்சரிடம் அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற தலையாரி தலை குனிந்து நின்றான்.

அமைச்சர் "என்ன நடந்தது?" என்று விசாரித்தார். ஒரு திருடனைப் பிடிக்கப்போய் மற்றுமொரு திருடன் தன்னை எப்படி ஏமாற்றிவிட்டுச் சென்றான் என்ற விவரத்தை அழுதழுது கூறினான் தலையாரி.

கோபங் கொண்ட அமைச்சர் "உன்னைப் போல் ஏமாந்த சோணகிரியை தலையாரியாக நியமித்தது எங்களது முதல் குற்றமாகும். இன்றிரவு 'நானே போய்த் திருடனைப் பிடித்து வருவேன். திருடனை என்னால் பிடிக்க முடியாவிட்டால் முதல் மந்திரி பதவியை விட்டு விலகி விடுவேன்' என்று சபதமிட்டான்.

மூன்றாவது நாளிரவு திருடன் கார்த்திகேயன் முக்கால் திருடனான தன் மகனை அழைத்து அவனுடைய தம்பிமாரான கால் திருடனும், அரைத்திருடனும் திருடிவந்த பொருட்களைப் பற்றி விரிவாகவும் அவர்கள் செய்த தந்திரோபாயங்களை எல்லாம் பாராட்டிவிட்டு, முக்கால்திருடன் அடுத்த நாள் காலை பொழுது புலர்வதற்கு முன் நகரத்தில் திருடி பெறுமதிவாய்ந்த பொருட்களை கொண்டு வந்து சேர்க்குமாறு கூறி அனுப்பினான்.

முக்கால் திருடன் நகரத்திற்கு வந்து சேர்ந்த போது எங்கும்பரபரப்பாக இருந்தது. மக்களோடு மக்களாக அவனும் சேர்ந்து கொண்டு பரபரப்பாகப் பேசப்படும் சங்கதி என்னவென்று கேட்டு அறிந்து கொண்டான்.

முதல் இரு இரவுகளிலும் நடைபெற்ற திருட்டுக்களைப்பற்றி மக்கள் கதைகதையாகக் கூறினார்கள். தலையாரியால் திருடர்களைப் பிடிக்க முடியாமல் போனமையினால் பிரதம அமைச்சரே அன்றிரவு மாறுவேடம் புனைந்து திருடர்களைப் பிடிக்க முன் வந்திருப்பதாக மக்கள் கூறிக் கொண்டார்கள். இத்தகவல்களைக் கேட்டறிந்த முக்கால்திருடன், ஒரு துணிக் கடைக்குள் நுழைந்து, துணிமணிகள் வாங்கினான். ஓர் அமைச்சரை போல் உடையணிந்து கொண்டான். நேராக மூணாங் கொத்து மீனாள் என்ற பெயருடைய விலைமாது இருக்குமிடத்தை அங்கிருந்த ஓர் இளைஞரிடம் கேட்டு அறிந்து கொண்டு அங்கு சென்றான்.

ஊர் நிலைமைகளைப் பற்றி ஏற்கனவே அங்கிருந்த மக்களிடம் கேட்டறிந்து கொண்ட முக்கால் திருடன் முதலமைச்சருடைய அந்தரங்கங்களைப் பற்றியும் கேட்டறிந்து கொண்டான். அதன்படி முதலமைச்சனுக்கும் விலைமகளான மூணால்ங் கொத்து மீனாளுக்குமிடையில் அந்தரங்கத் தொடர்பு இருப்பதைப்பற்றியும் அறிந்து கொண்டிருந்தான்.

அமைச்சர் தன் வீட்டுக்கு வருவது வெளியில் தெரியாமல் இருப்பதற்காக தாசி மீனாள் முன்புறம் விளக்குகள் எதுவும் எரிய விடுவதில்லை. இதையும் தெரிந்து கொண்டிருந்த முக்கால் திருடன் இருள் சூழ்ந்ததும் மீனாளின் வீட்டு முன் கதவைத் தட்டினான்.

## இராஜகுமாரன்

தன்னுடைய காதலனான முதலமைச்சர் வழக்கமாக வரும்நேரத்துக்கு முன்னதாகவே இன்று வந்ததன் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்த வண்ணம் முன் கதவைத் திறந்துவிட்ட மீனாள் இரகசியமாகவே, "இன்று இவ்வளவு நேரத்தோடு வந்திருக்கிறீர்களே என்ன காரணம் என்றறியலாமோ?" என்று கேட்டாள்.

முக்கால் திருடன், "நகரத்திலே இரண்டு நாட்களாக திருடர்கள் தந்திரமாக கைவரிசையைக் காட்டி பல பொருட்களைத் திருடிச் சென்று விட்டார்கள். இன்றுவரும் திருடன் என்னைப் போல் மந்திரி வேடம் போட்டு வரப்போகிறானாம் என்று கேள்விப் பட்டேன். அவன் இங்கும் வருவான். அவனைப்பிடித்துக் கட்டியிழுத்துக் கொண்டு போகப்போகிறேன். அதற்காகத்தான் இத்தனை நேரத்தோடு வந்தேன்" என்று தாசி மீனாளிடம் சொன்னான்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:.............. பெயர்:.................... ஒப்பம்:................



### நோட்டீஸ்பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

அபிமான வாசகர் போட்டியில் மூன்றாவது: காதிலைப் பூ கந்தசாமியை அதிகம் சினமூட்டக்கூடியவாறு பத்துச் சொற்களுக்குள் ஒரு வசை வாக்கியம் எழுதுக. முடிவுத் திகதி ஏப்ரல் 30. பெறுபேறுகள் ஜூன் முதல் வாரத்தில்.

வருஷப் பிறப்பு வருது. புதுவருஷம் வாறதால புதிசா என்ன வரப்போகுதெண்டு நானும் ஏதோ தெரியாத்தனமா பப்ளிக்கில வைச்சு அலுப்புக் கொட்டிப்போட்டன். முன்னால நிண்ட பொடி, என்னை ஒரு விபரம் தெரியாத மனுஷனெண்ட கணக்கில பாத்து "வருஷப் பிறப்புக்கு எப்படா புது ரிலீஸ் விடுவாங்களெண்டு நாங்கள் பாத்துக்கொண்டிருக்கிறம், நீங்கள் எந்த உலகத்தில நிக்கிறியள்?" எண்டு கேட்டுது. யாரையாம் ரிலீஸ் பண்ணப் போறாங்கள், ஒருவேளை உந்த அரசியல் கைதியளுக்கு அரசாங்கம் ஏதும் பொது மன்னிப்புக் குடுத்திருக்கோவெண்டு நானும் கொஞ்சம் விளக்கக் குறைவில கெலிச்சுப் போனன். அது கண்டியளோ அவங்கள் புது ரிலீஸ் எண்டுறது புதுப் படங்கள் ரிலீஸாகிறதத் தானாம். "ஓகே ஓகே. என்ஜோய் யுவர் செல்ப்" எண்டிட்டு நான் நடையக் கட்டிட்டன்.

உதத்தான் பாத்தியளோ ஜெனரேஷன் கெப் எண்டிறதாக்கும். பழசுக்கு பிடிக்காதது இளசுக்குப் பிடிக்குது. இளசுக்குப் பிடிக்கிறது பழசுக்குப் பிடிக்குதில்ல. (பழசு எண்டிறது இப்பத்த இளசுகள் எங்கள் தரவளிக்குச் சூட்டியிருக்கிற செல்லப் பெயர். நைன்டி எண்டு இன்னொரு பெயரும் சொல்லுறவை) அது கிடக்கட்டும். இப்பத்தப் பிள்ளையளத் திருத்தப் போகக்கூடாது பாருங்கோ. பின்னால அவமானப்படுறது நாங்களாத்தான் இருக்கும்.

சினிமா மோகம் தலைக்கேறி நிக்கிறது ஒரு பக்கமெண்டால், இப்ப வீட்டுக்குள்ளயும் பூந்து விரல விட்டு ஆட்டிற கணக்கில ரீ.வி நாடகங்கள் மற்றப்பக்கத்தால வெளிக்கிட்டுட்டுது. பாடம் படிப்பில்ல. விசிட்டேர்ஸ் யாரும் வந்தாலும் அவையோட தன்னும் கதை பேச்சில்ல, அதுகளும் வந்திருந்துகொண்டு ரீவியத்தான் பாத்திட்டு கடைசியா நேரம் போட்டுதெண்டிட்டு வந்த வழியே போயிடினம். நாயும் கூடக் குலைக்கிறத விட்டிட்டு இப்ப வாசல் படியில இருந்தபடி ரீ.வியத்தான் பாக்குதெண்டால் பாத்தியளோ எந்தக் கணக்கில விஷயம் போகுதெண்டு.

இப்பிடித்தான் அண்டைக்கு பஸ்ட்டாண்டில நிக்கக்க ஒரு பொடிச்சி ஓடிவந்த அவசரத்தப்பாத்து நானும் என்னவோ ஏதோவெண்டு பதறிப்போட்டன். வந்த வேகத்தில என்னைப் பாத்துக் கேட்டாள், நேற்றைக்கு 'வாழ்க்கையில' என்ன நடந்ததெண்டு. நான் திகைச்சுப் போனன். என்ர வாழ்கையில அப்பிடி என்ன எனக்குத் தெரியாமல் நடந்திருக்குது, அதை இவள் ஏன் இப்படி அவசரமா வந்து கேக்கிறாளெண்டு ஒண்டுமே புரியேல்ல. நான் சொன்னன் என்ர வாழ்க்கையில எதுவுமே நடக்கிறதில்லயெண்டுதான் எனக்குக் கவலை தங்கச்சி. அப்பிடி நேற்றைக்கு மட்டும் என்ன விசேஷமா நடந்திருக்கப் போகுதெண்டு கேட்டன். அது பார்த்த பார்வையில எனக்குத் தலை சுத்துமாப்போல கிடந்துது. பிறகுதான் விளங்கிச்சுது பின்னால இன்னொரு பொடிச்சி நிண்டது. அட அவளத்தான் இவள் கேட்டிருக்கிறாளோவெண்டிட்டு சரி, அவளிண்ட வாழ்க்கையில அப்பிடியென்ன திடீரெண்டு நடந்திட்டுதெண்டு ஒட்டுக்கேக்கிற எங்கட வயசுப்புத்தியில காதக் கொஞ்சம் நீட்டிக் குடுத்தன். சீதாவுக்கு விடுதலையாம். ராதாகிருஷ்ணன சிறையில அடைச்சுப்போட்டாங்களாம். இவளுகள் இந்த பஸ்ட்டாண்டில இருந்து உந்த வில்லங்கமான கதையளக் கதைச்சு கடைசியில பக்கத்தில நிண்ட குற்றத்துக்காக என்னையும் சேர்த்து உள்ள தள்ளப் பண்ணப்போறாளுகளெண்டு வெலவெலத்துப்போனன். அது வாழ்க்கை எண்ட ரீ.வீ நாடகத்தில நடந்ததத்தான் அவ்வளவு வேகத்தில ஓடியந்து கதை கேக்குது பொடிச்சியெண்டது பிறகுதான்வெளிச்சுது எனக்கு. ராதாகிருஷ்ணனிண்ட பார்வை சரியில்லையாம். அவன் திரும்பவும் என்ன செய்வானோ தெரியாதாம். நான் சொன்னன் ராதாகிருஷ்ணன் டைரக்டர் சொன்னபடிதான் செய்வான். நீங்கள் கவலைப்படாதேங்கோ தங்கச்சிமார் எண்டன். அதுகள் ரெண்டும் என்னை ஒரு புழுவைப்போல பாத்து "இன்டீஸன்ட் செல்ப்" எண்டு இங்கிலீஷில திட்டிப் போட்டு அங்கால போய் நிண்டு நேற்றைய வாழ்க்கையப்பற்றிக் கவலைப்பட்டிச்சினம்.

உதுதான் பாருங்கோ இப்பத்தய வாழ்க்கையாப் போச்சுது. மனிசன் படத்தில பாதி ரீ.வியில பாதியாத்தான் வாழுறான். நிஜத்தில நடைப்பிணமாத் திரியிறான். எனக்கேன் வில்லங்கம். தம்பி தங்கச்சியளே, வருஷப் பிறப்புக்கு புதுப் படங்கள் ரிலீஸாகும். வீடியோக் கடைக்காரர், முதல் வாற கமெரா கொப்பியத் தேடிப்பிடிச்சு உங்களுக்காகக் கண்முழிச்சு இரவு பகலா கொப்பியடிச்சு வீடியோ கசட்டுகளைத் தயாரா அடுக்கிவைச்சிருப்பார். எடுங்கோ. பாருங்கோ. பாட்டுக் கட்டங்கள ஓடவிட்டிட்டு அவசர அவசரமாப் படத்தைப் பாருங்கோ. பிறகு பாட்டு கசெட்ட தனியா எடுத்தும் போட்டுப் பாருங்கோ. பாலர் வகுப்புப் புத்தகத்திலேயே படம் பார் எண்டு சொல்லியிருக்கிறானெல்லே. பிறகு என்ன கதை. நீங்கள் வருஷப் பிறப்புக்கு மட்டுமல்ல வருஷம் முழுவதுமே படம் பாத்துக் காலம் கழிக்க வேணுமெண்டதுதான் இந்தக் காதில பூவிண்ட ஆசையும். பாருங்கோ. ரசியுங்கோ. பஸ்ட்டாண்டிலயென்ன பஸ்சுக்குள்ள ஏறியிருந்தும் படக்கதைய டிஸ்கஸ் பண்ணுங்கோ. சோதினைப் பேப்பரிலையும் படக்கதைய எழுதுங்கோ. வாழ்த்துக்கள் கூறி விடை பெறுகிறன். வணக்கம்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

Regd. as a News Paper at the G.P.O.(QD/65/NEWS/2000)




## ஒளிப் போராட்டம்






இந்திய அரசாங்கம் மின்சாரத்துறையைத் தனியார் மயமாக்குவதற்கும் சில புதிய முறைகளைப் புகுத்துவதற்குத் திட்டமிட்டதைத் தொடர்ந்து, நாடு பூராவும் உள்ள ஆறு இலட்சம் தொழிலாளர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர். நாட்டுக்கே ஒளி கொடுக்கும் அந்தத் தொழிலாளர்கள் ஒளி உமிழும் விளக்குகளைக் கையிலேந்தி போராட்டத்தில் குதித்தனர்.

அரசாங்கம் தங்களுடைய எதிர்ப்பை மீறி அதன் திட்டத்தை நிறைவேற்றுமானால், நாடே ஒளி இழந்து விடும் என்பதை எடுத்துக்காட்டவே சண்டிகர் மாநிலத்திலுள்ள மின்சாரத் துறை பணியாளர்கள் இவ்வாறு விளக்குகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அண்மையில் மலேசியாவில் நடை பெற்ற கோலாலம்பூர் நகரதினக் கொண்டாட்டத்தன்று மொத்தம் 53 விண்ணில் நீச்சலடிக்கும் வீரர்கள் கோலாலம்பூரிலுள்ள 421 மீட்டர் உயர ஒளி-ஒலிபரப்பு இரட்டைக் கோபுரத்திலிருந்து தரையை நோக்கிக் குதித்தார்கள். அவர்களில் ரொனால்ட் சிம்ஸன், டுவைன் வெஸ்ட்டன் என்பவரை கட்டி அணைத்தபடி அத்தனை தூரத்திலிருந்து குதித்தபோது பிடிக்கப்பட்ட படம் இது. இவர்கள் இருவரும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள்.



## பெரும் பஞ்சு

கடலில் இஸ்ஃபெஷியோஸ்பொஞ்ஜியா வெஸ்பரியோ என்று ஒரு வகை பந்து போன்ற பஞ்சு வளர்கிறது. இது உயிருள்ள ஒரு பிராணி. இத்தகைய பஞ்சு ஒன்று ஆகப் பெரிய அளவில்-1.05 மீட்டர் (3 1/2 அடி) உயரம் வரை வளர்ந்திருக்கிறது. உலகில் மிகவும் பெரிதாக வளர்ந்த இந்தக் கடல் பஞ்சு கரிபியன் கடலில் காணப்படுகிறது. இதன் விட்டம் 91 சென்ரி மீட்டராகும்.

## கட்டிக் குதி



## அதி பலசாலி

சீமெந்திலான பதினைந்து கற்களை, ஒன்றன் மீது மற்றொன்றாக வைத்து ஒரே அடியில் தனது வலது கையால் அடித்து அத்தனையையும் நொருக்கினார். இந்த சாதனையைப் புரிந்தவர் புரூஸ் ஹெய்ஸ் என்ற வீரராவார். 1998ம் ஆண்டு மார்ச் 22ம் திகதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இச்சாதனையை நிகழ்த்தினார். இவர் சர்வதேச கராத்தே சங்கத்தின் உலகச் சம்பியனாவார். எட்டுத் தடவைகள் இவர் இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். தனது வெறும் கையால் இந்த சீமெந்துக் கற்களை அடித்து நொருக்கும் போது அவருடைய அடியின் எடை 310 கிலோகிராம் (971 இறாத்தல்).



சீமெந்துக் கற்களை வெறுங்கையால் உடைத்தவர் போன்று அதிக கைவலு உள்ளவர் என்ற பட்டத்தை 1998 கலிஃபோர்னியாவில் இடம்பெற்ற சம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்கரான ஜோன் பிரஸெங்கி பெற்றிருக்கிறார். 3 தடவை வலது கைவலுவிலும் இரு தடவைகள் இடது கைவலுவிலும் இவர் முதன்மை பெற்றார். இவர் கடந்த 17 வருடங்களாக இத்துறையில் முதன்மை ஸ்தானத்தைக் கைப்பற்றி இத்துறையில் வரலாறு படைத்துள்ளார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**சஞ்ஜேவ் ஜெயானந்தன்/06.04.2001**

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ஜெயானந்தன்-சுரா வதனியைச் சேர்ந்த சுமித்ரா தம்பதியினரின் செல்வப்புதல்வன் சஞ்ஜீவ் தனது முதலாவது பிறந்தநாளை கனடாவில் உள்ள ஸ்காபரோ நகரத்தில் ஏப்ரல் 7ம் திகதி 2001 இல் Eastown Restaurant and Banquet Hall இல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா-அம்மா, தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, சுதா சித்தப்பா, டிலோ சித்தி, விதுஜா அக்கா, தங்கை இந்துஜா, மதி சித்தப்பா, சித்திரா சித்தி, நிஷா அக்கா, துஷா அக்கா, பிரகாஷ் மாமா, உமா மாமி, அஜான் மச்சான், கிரிஷான் மச்சான் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஆயக்கடவை பிள்ளையார் அருள் பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

T.P. (416) 332 1210